செங்குந்த மித்திரன்

சித்திரை - வைகாசி - 1933

4-5

7

JL
Y5925G m211, N28
N33.7.4-5
158911

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர் :—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி—எ] ஸ்ரீமுகஹ சித்திரைமீ வைகாசிமீ [பகுதி ச, ரு



842

OFFICE OF THE ... 1-NOV1933 MADRAS


### கடவுள் வணக்கம்

*தடுங்கோண் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்று*
*மிடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக்*
*கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்கவைவேல்*
*விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே.*

(கந்தரலங்காரம்)

## பத்திரிகாசிரியர் முன்னுரை

## இனி என்ன ?

சென்ற இதழில் 'மித்திரன்' புனருத்தாரணத்தைப் பற்றி வெளியிடப்பட்ட விளம்பரத்தைக் கண்டு அவனை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் குலாபிமானிகள் ஏமாற்றமுறவேண்டி யிருப்பது பற்றிப் பெரிதும் வருந்துகிறோம். சில நாட்களுக்கு முன்னே நமது இயக்கத்தின் காரணகர்த்தாவான வள்ளலாரும் நாமும் இன்னும் சிலரும் நமது மித்திரனைத் தளரவிடாது ஆதரிப்பதற்கேற்ற வழிகளைப் பற்றிக் கலந்தாலோசித்ததன் பயனாக, பரம்பரைச் சந்தாத் தொகையைத் தற்போது செலவிடாது ஒரு சேமநிதியாக்கி, வேறு ஆதரவுகளை எதிர்பாராமல் அதனுதவியைக் கொண்டே சஞ்சிகை முட்டின்றி நடக்கக் கூடிய அளவு அது பெருகும் வரை நமது குலச்செல்வர்களிடம் மாதமொரு குறிப்பிட்ட தொகை கைங்கரியமாக வாங்கி அதைக் கொண்டு மித்திரனை நடத்தி வருவதுதான் தற்போதுள்ள நிலையில் சிறந்த ஏற்பாடாகும் எனத் தீர்மானித்தோம். ஆனால் வியாபார மந்தமும் பணமுடையும் எங்கும் மக்களை வருத்தி வரும் இக்காலத்தில் சஞ்சிகை முதலியவற்றிற்குப் போஷகர்களைத் தேடிப் பிடிப்பதும் மாதா மாதம் தளராது குலாபிமானத்துடன் கைங்கரியம் செய்யக்கூடிய குலச்சீலர்கள் கிடைப்பதும் எளிதல்ல என்பதை அன்பர்கள் அறிவார்கள். அதனால் நாம் பெருநம்பிக்கை கொண்டிருந்த ஏற்பாடு கழிந்துவிட்டது. 'மித்திரன்' பழையபடி அநாதரவான நிலைமையிலேயே கிடந்து தவிக்கின்றான். இதுவே நமது விளம்பரம் பொய்த்தமைக்கும் வாக்குறுதி நிறைவேறாமைக்

கும் காரணமாகும். இதை யறிந்து அன்பர்கள் தேறுவரென நம்புகிறோம்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பொங்கிப் பூரித்து வளர்ந்து வருவதாகச் சில பத்திரிகைகள் தோள்தட்டிக் குதூகலித்து அனைவர்க்கும் இன்பமூட்டி வரும் இக்காலத்தில் குலப்பணிக்கென்றே, குலச் சீர்திருத்தத்திற்கென்றே உதயமாகிய ஒரு செழுஞ்சுடர் அசிரத்தை அநாதரவு முதலிய மேகப் படலங்களால் மறைக்கப்பட்டு மங்கி வருகின்றது. ஆறு லக்ஷம் ஜனத்தொகையுடைய ஒரு பெருங் குலத்தின் பத்திரிகை—வள்ளல்களும், செல்வச் சீமான்களும் பலருள்ள ஒரு தொல் குலத்தின் முன்னேற்றத்திற்காகத் தோன்றி யுழைத்துவரும் பத்திரிகை-ஆதரவின்றி, வாடித் தளர்ந்து வருகின்றது. வருஷக் கணக்காக பாக்கியை வைத்துக்கொண் டிருப்போர் வாய்ச் சமர்த்தைக் காட்டுகிறார்கள். சந்தா வசூலுக்காகப் புறப்படுவதென்றால் பிரசாரகர்களும் பகையாளியைத் தேடிச் செல்பவர்கள் போல நடுங்குறார்கள். இதுபற்றி எழுதி எழுதி, இடித்துக் கூறிக் கூறி நமது மனமும் சலித்துவிட்டது. சந்தாதாரருக்குத் தொந்தரவு குறையும்; நங்குலச் செல்வனுக்கும் நிலையான பேராதரவு ஏற்படும் என்ற நோக்கத்துடனேயே பரம்பரைச் சந்தா ஏற்பாட்டைச் செய்தோம். ஆனால் அதுவும் விரைவில் பயன்தருவதாய்க் காணோம். ஏற்பாடு செய்யப்பட்டுப் பல மாதங்களாகின்றன. அதைப்பற்றிப் பன்முறை பலவாறு எழுதி யிருக்கிறோம். பிரசாரகர்களும் அதைப்பற்றிக் கூடிய அளவு வற்புறுத்தி வருகிறார்கள்; மகாநாட்டிலும் இதர கூட்டங்களிலும் அதற்காக எவ்வளவோ பேசி வந்திருக்கிறோம். ஆனால் இன்னும் பரம்பரைச் சந்தா செலுத்த முன் வந்தவர்களை ஒருவ ரிருவரெனவே எண்ண வேண்டி யிருக்கிறது.

இந்த நிலையில் 'மித்திரன்' ஓங்குவ தெங்ஙனம்? செழிப்ப தெங்ஙனம்? நவநவமான ஆடை யணிந்து, அழகழகான அணிகள் பூண்டு தட்டுத் தடையின்றி உலாவுவ தெங்ஙனம்? ஒவ்வொரு தடவையும், எப்படித் தொடங்குவது? எங்கிருந்து பணம் தேடுவது? வெளியிடுவதா, வேண்டாவா? என்னும் சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும், தடங்கல்களுக்கு மிடையே தள்ளாடிப் புறப்படும் மித்திரனிடம் பூரிப்பையும் அழகையும், ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அன்பர்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்?

அன்பர்களே, மித்திரனை அலங்கரிக்கும் பெரும்பணியை மேற்கொண் டுள்ளவர்கள் சற்றேனும் ஊக்கத்திற் குறைந்துள்ளார்களென எண்ணவேண்டா. ஆயுளளவும் அப்பணியிற் சிறந்து நிற்பதே அவர்கள் இலட்சியமாகும். ஆனால் அவர்களுக்கு ஆதரவு வேண்டாவோ? அவர்களை ஊக்குவார் வேண்டாவோ? அலங்கரிப்புக்கேற்ற உபகரணங்கள் வேண்டாவோ? உணவின்றி வாடிச் சுருண்டு கிடக்கும் குழவியை ஆடையணிகளால் அலங்கரிக்கத் தாய்க்கு எண்ணந் தோன்றுமோ? உண்மையில் குறைந்திருப்பது பொருளாதார நிலையே; சந்தாநேயரது ஊக்கமே; குலச்சீலர்களது அபிமானமே.

மித்திரன் ஓங்கி வளருவதில் உங்களுக்கு ஆர்வமிருப்பது உண்மையாயின், அவனை அழகுடன் காண நீங்கள் விரும்புவது உண்மையாயின், அவனிடம் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் நீங்கள் எதிர்பார்ப்பது உண்மையாயின், குலமுன்னேற்றத்துக்காக உங்களாலியன்ற அளவு உழைக்க வேண்டுமெனும் சீரிய நோக்கம் உங்களுக்கிருப்பது உண்மையாயின், அச் செழுஞ்சுடரை ஆதரித்து வளர்க்க நீங்கள் முன்வர வேண்டாவா? செங்குந்த உலகமெங்கும் அது சுடர் விட்டுப் பிரகாசிப்பதற்கான வழியை நீங்கள் நாடவேண்டாவா?

குலாபிமானிகளே, பொதுநல ஒளியைப் பெருக்குதற்காக ஏற்றப்பட்ட குலத்தீபம்—செங்குந்த உலகத்தின் இருளகற்றுவதற்காக ஏற்றப்பட்டு இத்தனை நாள் சுடரொளி விட்டெரிந்துவந்த தீபம்—எக்காரணத்தால் எவ்விதம் மங்கி வருகின்றதென்பதை அறிந்துள்ளீர்கள். இனி என்ன செய்யப் போகிறீர்கள்? அப்பெருஞ்சுடர் அழகுறச் சோபிப்பதற்கேற்ற வழியைத் தேடிக் கடமையாற்றப் போகிறீர்களா? அது எப்படிப் போயினென்னவென்று வாளா கிடக்கப் போகிறீர்களா?



1-NOV1933 MADRAS

# மதிப்புரை

### சசிவன்ன போதம்

தருக்க வேதாந்த போதகாசிரியர் காஞ்சிநகர் திரு. ஆ. செங்கல்வராய முதலியாரவர்கள் தாம் இயற்றிய தத்துவப் பிரகாசிகை எனு முரையுடன் வெளியிட்டுள்ள இந்நூலைப்பற்றி முன்னமே நமது மித்திரனில் (தொகுதி 5, பகுதி 9-10, பக்கம் 270) வரைந்துள்ளோம். இது ஸ்ரீதத்துவராய சுவாமிகள் இயற்றிய மோகவதைப் பரணியின் ஒரு பகுதியாகும். இந்நூல்,

“புணர்ந்த பாவமெலாம் பரிபூரண
முணர்ந்த ஞானி விழிபட ஓடுமே”

என்னும் உயரிய நீதியை,

‘உவமிப்பின் ஞானி விழிபட்டு முன்னை
வினைவிட்டு முத்தியுலகிற்
றவமற்ற வெய்ய வினையேபுரிந்த
சசிவன்ன னெய்து கதை”யின்

வாயிலாக எடுத்துணர்த்துகின்றது. கதையின் கருத்தானும் சுவாமிகளின் சீரிய நடையானும் மட்டுமன்றித் திரு. முதலியாரவர்களது அரிய ஆராய்ச்சியுரையானும் இந்நூல் அழகுடன் மிளிர்கின்றது. தத்துவ ஆராய்ச்சியிற் சிரத்தை யுடையார்க்கு இது பெரிதும் பயன்படுமென நம்புகிறோம்.

இதன் விலை ரூ. 1.

☞ மித்திரன் காரியாலயத்திலும் இதன் பிரதிகள் கிடைக்கும்.

### சீர்கருணீக விஜயம்

கருணீக குலத்தின் முன்னேற்றம் கருதி வெளிவரும் இம்மாதப் பத்திரிகை அக்குலத்தின் சீர்திருத்தத்திற்கான விஷயங்களையே யன்றி ஏனைய பொது விஷயங்களையும் தாங்கி உலவுகின்றது. ஏற்கனவே 'கருணீகமித்திரன்' என்னும் பத்திரிகை யொன்றையுடைய கருணீகர்கள் தமது குலத்திற்காக உழைக்கத் தோன்றிய இப்பத்திரிகையை அதன் சோதரப் பத்திரிகையாகக் கொண்டு ஆதரிப்பரென நம்புகிறோம்

# செங்குந்தர் மகாநாடு?

[வ. ப. நாச்சிமுத்து]

(ஒரு கோவைச் சுயமரியாதைச் செங்குந்தன்)

“செங்குந்தர் மகாநாடு” என்ற ஒரு கூட்டம் சென்ற மே௴ 25, 26-ந் தேதிகளில் கோவை ஜில்லா, காங்கேயம் என்னும் ஊரில் கூடியதாகவும், அச்சமயம் செங்குந்தர்கள் தங்கள் பெண்களைப் பொட்டுக்கட்டிக் கோயிலுக்கு விடும் வழக்கத்தை நிறுத்த முயலவேண்டும் என்று சிலர் கூறியதாகவும், தீர்மானம் நிறைவேற்றியதாகவும், பல பத்திரிகைகளில் வெளிவந்திருப்பதைக் கண்டு சில சகோதரர்கள் வியப்படைந்திருக்கலாம். ஆனால் அக்கூட்டம் யாருடையதென்ற உண்மையைப் பலர் அறிவார்கள். இவ்வுண்மை யறியாத சகோதரர்கள் கோயிலுக்குப் பெண் விடும் வழக்கம் அற்றுப்போவது நல்லதே என்ற அபிப்பிராய முடையவர்களா யிருப்பினும், செங்குந்தர்களுக்குள் அவ்வழக்கம் உண்டு என்று பொருள்படும்படியாகப் பொதுப்படையாய்க் கூறுவது உண்மைக்கு மாறானதாகையால் அதை அவசியம் மறுக்க முன்வராம லிருக்க மாட்டார்கள். ஆகவே சகோதரர்களுக்கு உண்மையை விளக்கிக் காட்டவே இதை எழுதலானேன்.

மேற்குறித்த கூட்டமானது கோயிலுக்குப் பெண்விடும் வழக்கமுள்ளவர்களும், சென்ற சில வருஷங்களாகத் தங்களையும் செங்குந்தர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுமான கோவை ஜில்லாவிலுள்ள ஒருவகை மக்கட் பிரிவினர்களது கூட்டமே யொழிய (உண்மைச்) செங்குந்தர்கள் கூட்டமல்ல என்பதை இதனால் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

புராதன ஸ்தலங்களிலும், வேறு இடங்களிலுமுள்ள நமது தர்மங்களிலும், மடங்களிலும், நாட்டுக் கூட்டங்களிலும், எக்காலத்திலும் இப்பிரிவினர் இடம் பெற்றதே இல்லை என்பதனாலும், மற்றும் பல காரணங்களாலும் இவர்கள் நம்மினத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பதையும் ஈண்டு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஷை தூர்வழக்கம் எக்காலத்திலு மில்லாத நம் மரபின் பெயரைத் தாங்கள் உபயோகப்படுத்திக் கொண்டதன்றித் தங்கள் பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் வழக்கம் நமக்கும் உண்டென்று பொருள்படுமாறு அவர்கள் கூறுவது (உண்மைச்) செங்குந்தர்களாகிய நாம் அவசியம் கண்டிக்கத்தக்க தொன்றாம்.

நமது மித்திரன் முதல் வருஷத்துச் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப் பெற்றுள்ள கண்டனங்களைக் கவனிப்பீர்களாக.

# நமது நான்காவது மகாநாடு

## கூடவிருந்தான் கூற்று

இதுவரையில் கூடிய நமது மகாநாடுகளைக் காட்டிலும், திருவாரூரில் கூடிய மகாநாடு பல வகையில் தனிமைப்பட்டதென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. ஆம், வெகு நாட்களாக உறங்கிக் கொண்டிருந்த செங்குந்தர்களைத் தட்டி எழுப்பியவர்களும், பல் பிரிவினராய்ப் பிரிந்து சிதைந்து கிடந்த நம்மை ஒன்றாக்கியவர்களும், பல்வகை நோய்வாய்ப்பட்டுக்கிடந்த நமக்கு நன்மருந்துதவி ஆரோக்கியத்தைக் கொடுத்தவர்களுமாகிய நம் தஞ்சை ஜில்லாச் சகோதரர்கள் பொறுப்பில் நடந்த மகாநாடு தனிச் சிறப்புடையதென்பது மிகையாகாதென்பதே எனது அபிப்பிராயம். ஏனைய சகோதரர்களுடைய அபிப்பிராயமும் அவ்வாறே யிருக்குமெனக் கருதுகிறேன்.

நமது சபாபதி வள்ளலாரின் ஆற்றலையும், சமயோசித புத்தியையும், தஞ்சை ஜில்லா அன்பர்களின் ஆர்வத்தையும், குலாபிமானத்தையும், அஜ்ஜில்லா வாலிபர்களின் குலத்தொண்டாற்றும் ஆர்வத்தையும், ஊக்கத்தையும், பிறவற்றையும் வெளிப்படையாய்க் காட்டுதற்கும் நாம் பிரத்தியக்ஷத்தில் பார்ப்பதற்கும் ஒரு நல்ல சந்தர்ப்பமாகவே இருந்தது இந்த மகாநாடு. தைமாதக் கடைசியில் வெளிவந்த மித்திரனில் திரு. வா. பொன்னம்பலத்தின் மகாநாட்டுச் சம்பந்தமான வேண்டுகோளைக் கண்டோம். பின்னர் மாசிமாத நடுவில் வந்த மித்திரனில் மகாநாட்டுச் சம்பந்தமான முழுவிவரத்தையும் கண்டோம். உடனே புறப்பட்டோம். அவர்கள் வரவேற்புக் கழகம் அமைத்ததற்கும், மகாநாடு கூடியதற்கும் மத்தியில் சரியாய் ஒரு மாதங்கூட இருந்திராதென்றே எண்ணுகிறேன். இக்குறுகிய காலத்தில் நிரம்பப் பணமுடை ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் பெருந்தொகை திரட்டி, ஒரு மகாநாட்டிற்கு—சுமார் பன்னிரண்டு, பதின்மூன்று ஜில்லாக்களிலிருந்து பிரதிநிதிகள் பெருந்திரளாக வரக்கூடிய ஒரு பெரிய மகாநாட்டிற்கு—வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடிப்பதென்றால் அது மிகவும் வியக்கக்கூடிய தொன்றென்றே சொல்ல வேண்டும்.

அவர்களது ஊக்கத்தையும், ஆற்றலையும், குலமுன்னேற்றத்தில் கொண்டுள்ள ஆர்வத்தையும் உலகத்திற் கறிவிப்பான் வேண்டி முன்னவனே முன்னின்றான். வேனிற் காலத்தில், கார்காலத்தைப் போல் மூன்று நாள் வரையில் ஓயாமல் மழை பெய்தது. இயற்கையே எதிர்த்து நின்றது. அவர்கள் ஏதாவது ஊக்கமிழந்து பின் வாங்கினார்களா? இல்லவே இல்லை. மனக்குறை ஒன்றைத் தவிர ஊக்கக் குறைவில்லை. ஆனால் மற்றைய நாட்டுச் செங்குந்தர் மாத்திரம் விடா மழையைக் கண்டு அஞ்சி மகாநாட்டிற்கு வரப் பின்வாங்கினார்களா! அதுவும் இல்லை. எல்லா ஜில்லாக்களிலுமிருந்து தவறுதல் பிரதிநிதிகள் பெருந்திரளாக வந்தார்கள். வரவேற்புக் கழகத்தார் வெளியேயிருந்து வரும் சகோதரர்களை வரவேற்று வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கத் தக்க ஏற்பாடுகள் செய்திருந்தும் இரண்டு நாள் முன்னதாகவே ஆரம்பித்த விடாமழை காரணத்தால் அவ்வாறு செய்ய முடியாமற் போயிற்று. இம்மகாநாட்டிற்குப் பெண் பிரதிநிதிகள் ஏராளமாக வந்திருந்தது கவனிக்கத் தக்கது. இருநூறு முந்நூறு மைல் தூரத்திலிருந்து வந்த ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் அநேகர் மழையினால் காலத்தில் வரவியலாதவர்களாய் இரவு 2 மணிவரையில் மழையில் நனைந்து சபாபதி வள்ளலார் வீட்டையும் பிறவிடங்களையும் நள்ளிருளில் தேடிச் சென்று தங்கியிருந்தார்கள். இது நம்மவர்கள் குலமுன்னேற்றத்தில் கொண்டுள்ள புத்துணர்ச்சியைக் காட்டவில்லையா? செங்குந்த பொது மக்கள் பழைய உறக்கத்தினின்று விழித்துக்கொண்டார்கள் என்பதற்கு இது ஒரு அறிகுறியாயிருக்கிறதல்லவா? இயற்கையையும் எதிர்த்துப் போராடத் தயாராயிருக்கிறார்கள் செங்குந்த வீரர்கள் என்பதும் மிகையாகுமா? தலைவர் ஊர்வலம், கொடியேற்றுவிழா, முதலியவை விமரிசையாக நடத்த இயலாமை குறித்தும் இதற்கென அமைத்து வைத்திருந்த பெரும் கொட்டகை, அநேக குந்தக் கொடிகள், வளைவுகள், இடவசதிகள் முதலியவை உபயோகப்படாது போனமை குறித்தும் உண்டான மனக்குறை ஒரு புறமிருந்தும் மழையையும் பாராது விஜயஞ்செய்திருந்த பிரதிநிதிகளின் உணவாதி சௌகர்யங்கள்

# தொண்டை நாட்டின் குருகுலம்

காஞ்சீபுரத்திற்குச் சமீபத்தி லிருக்கும் வாலாஜாபாத்திலுள்ள இந்துமத பாடசாலையின் சிறப்பு தமிழ் மக்கள் அறிந்ததே. 1916-ம் ஆண்டில் நிறுவப்பட்ட அப்பாடசாலையில் தற்போது 8 வகுப்புக்களிருக்கின்றன. சுமார் 400 மாணவர்கள் பயில்கின்றனர். அதனைப் போற்றிப் புகழாத அறிஞர் இலர். நேரில் சென்று அப்பாடசாலையைப் பார்வையிடுவோர் மாணவரின் திறமைகண்டு மிக்க ஆச்சரியமடைவரென்பது நிச்சயம்.

அநேக பாடசாலைகள் மாணவர்களைப் புத்தகப் புழுக்களாக்கி விடுகின்றன. புத்தகங்கள் தவிர அவர்கள் வேறொன்றும் அறியார். இந்துமத பாடசாலை மாணவர்கள் அத்தகையரல்லர். அவர்கள் புத்தகக் கல்வியோடு பிற்கால வாழ்க்கைக்கு வேண்டிய பலவித தொழிற் கல்வியும் பெறுவர்; படுக்கப் பாயும் ஜமுக்காளமும் நெய்வர்; உடுக்க ஆடை தருவர்; தச்சு வேலையும், தையல் வேலையும் புரிவர்; தக்கபடி பயிரிடப் பழகுவர். உடல் வன்மையும் மனோதிடமும் பெறுவர். பொது அறிவும் உலகஞானமும் எய்துவர். சபைகளில் பேசும் ஆற்றல் அடைவர். சமய நுட்பம் உணர்வர். ஒழுக்கத்தில் உயர்வர். அன்பும் பணிவும் அவர்களிடம் உறவாடி நிற்கும்.

இத்தகைய சீரிய பாடசாலை ஓர் மாணவர் விடுதியுடன் குருகுல முறையில் நடத்தப்படுமேல் எவ்வளவு பெரும்பயன் விளைக்குமென்று பன்முறை யான் எண்ணியதுண்டு. அவ்வெண்ணம் இச்சமயம் நிறைவேறியது கண்டு மிக மகிழ்கின்றேன். மாணவர்கள் பலர் இப்பள்ளியில் சேர்ந்து உயர்மக்களாக வெளிவர வேண்டுமென விரும்புகிறேன்.

இக் குருகுலத்தில் உணவு இடம் முதலிய வசதிகளுடன் இலவசக் கல்விபோதிக்க இப்பாடசாலையார் விரும்பினராயினும் செல்வநிலை இடந்தாராமை கருதி உணவு, சம்பளம், இடம் ஆகிய எல்லாச் செலவுகட்கும் சேர்த்து மாதக்கட்டணம் ரூபா ஆறுமட்டுமே விதித்துள்ளனர். இது மிகச் சிறிய தொகை என்பதில் சந்தேகமில்லை.

தற்போது இதில் சேர்ந்துள்ள மாணவர்களில் நமது வகுப்பினரும் சிலர் இருக்கின்றனரெனக் கேட்டு என் உள்ளம் பூரிக்கின்றது. எல்லா ஜில்லாக்களி லிருந்தும் ஊருக்கு ஒருவரேனும் வந்து சேரவேண்டுமென்பது என் அவா.

ஊக்கமும், சுறுசுறுப்பும், கல்வியில் ஆர்வமுமுடைய இளைஞர்கள் உண்மையிலேயே ஆதரவற்றவர்களாய் மிக்க ஏழ்மை நிலையில் இருப்பராயின் அவர்களைக் குறைந்த விகிதத்தில் சேர்த்துக் கொள்ளவோ, இயன்றால் இனாமாகச் சேர்த்துக் கொள்ளவோ என்னாலானவரை முயற்சிக்க நான் தயாராக இருக்கிறேன். சௌகரிய முடையவர்கள் தமது சிறுவர்களைத் தாராளமாய் இந்துமத பாடசாலையில் சேர்க்க முன் வரவேண்டுமென மீண்டும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

காஞ்சீபுரம் }
19-7-33 } இங்ஙனம்
பி. சே. மாணிக்கவாசகன்.

விவரங்கட்கு எழுதவேண்டிய விலாசம்:—
"செயலாளர், இந்துமத பாடசாலை,
வாலாஜாபாத், S. I. Ry."

158911

## நன்கொடை

வாரியங்காவல் சித்திவிநாயகர் கோவில் வீதி திருநாவுக்கரசு சுவாமிகள் செங்குந்தர் சங்கத்தின் அங்கத்தினர் பி. வீ. இரத்தின முதலியார் அளித்த வரவேற்பு நன்கொடை ரூ. 0—4—0

வாரியங்காவல் சோதிட வித்வான் சா. சிதம்பர வைத்திலிங்க முதலியார் நமது சங்கப் பிரசாரகர் 'வரவேற்பு' நன்கொடையாக மனமுவந்து அளித்த நன்கொடை ரூ. 0—4—0

வாரியங்காவல் இரட்டை விநாயகர் கோவில் வீதி ஆ. நா. சிதம்பர முதலியார் வரவேற்பு நன்கொடையாக மனமுவந்தளித்த ரூ. 0—4—0

வாரியங்காவல் இரட்டை விநாயகர் கோவில் வீதி பூ. சி. விசுவநாத முதலியார் வரவேற்பு நன்கொடையாக மனமுவந்தளித்த ரூ. 0—4—0

மருதூர் நூல் வியாபாரம் S. S. இராமலிங்க முதலியார் அவர்கள் வரவேற்பு நன்கொடையாக மனமுவந்து வழங்கிய ரூ. 0—4—0

திருச்சி ஜில்லா, கரூர் தாலுக்கா, உன்னியூர் செங்குந்தர் சங்கக் காரியதரிசி அவர்கள் நமது சங்கப் பிரசாரகர் ச. நா. குமரகுரு முதலியார் சைவசித்தாந்த தமிழ்ப் புலவர் அவர்கள் வரவேற்பு நன்கொடையாக வழங்கிய ரூ. 0—4—

விஷயமாய் வரவேற்புத் தலைவராகிய சபாபதி வள்ளாருக்குண்டான சமயோசித அறிவும், தாராள சிந்தையும் மிகவும் பாராட்டத் தக்கவையாகும்.

இம் மகாநாட்டிற்கு நமது குல மகாத்மா விஜயஞ் செய்து இடையிடையே அரிய உபதேசங்கள் செய்தது மறக்கற்பால தன்று நமது கல்வி நிதியை விருத்தி செய்யும் பொருட்டுச் சுபகாரியங்களில் ஷை நிதிக்கு ஒரு ரூபாய்க்குக் குறையாத நன்கொடை கொடுப்பதன்றி வியாபாரிகள் மகமை கொடுக்கவேண்டு மென்றும் தக்க ஏற்பாடுகள் செய்தது இம் மகாநாட்டினால் உண்டான மற்றொரு பெருநன்மை யாகும். அடுத்த மகாநாடு எங்கே கூடுவது என்று இடந்தேடுவது போய் ஐந்தாவது மகாநாட்டை வடஆற்காடு ஜில்லாவிலும், ஆறுவது மகாநாட்டைத் திருநெல்வேலி ஜில்லாவிலும் கூட்டுவதாக அவ்வச்சில்லாத் தலைவர்கள் ஒப்புக்கொண்டிருப்பது மிகவும் போற்றத் தக்கது. சேவற் கைக்கோள னருளால் நமது சங்கமும், மித்திரனும், மகாநாடுகளும் அவற்றாலுண்டாகும் நன்மைகளும் நீடூழி வாழ்க!

திருவாரூர் செங்குந்த கோட்டத்தில் நடைபெற்ற

## "செங்குந்தர் நான்காவது மகாநாட்டின் வைபவக் கும்மி"

[திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

சீர்திகழ் செங்குந்த மாதர்களே! யொன்றாய்ச்
சேர்ந்து திருவீதி சூழ்ந்து நின்று
வார் குழல் கவிந்திட்ட வதனம் மலர்ந்திட
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி. 1

ஐங்கரப் புத்தே ளடிபணிந்து திரு
வாரூரிற் சீராய் நடைபெற்ற
செங்குந்தர் நான்காவது மகாநாட்டின்
செய்தியைப் பாடி யடியுங்கடி. 2

ஆரூரிற் செங்குந்த கோட்டத்திலே யிந்த
ஆண்டில் மகாநா டழகுறவே
சீரூருந் தியாக னருளால் முடிவுற்ற
சீர்த்தியைப் பாடி யடியுங்கடி. 3

சேர சோழ பாண்டி தேசங்களில் வளர்
செங்குந்தர்கள் தொண்டை நாட்டுளோரும்
பாரிலுயர் சென்னை யாழ்ப்பாணம் லங்கை
பதியினின்றும் பலர் வந்தனரே. 4

எண்டிசையி லிருக்கும் நம் மரபினர்
எல்லாந் திரண்டு குழுமினரே
கண்டவ ருள்ளங் களிக்கத் திருவாரூர்
ககனாட்டின் கோலங் காட்டியதே. 5

நங்குலத் தொண்டர் படையினர் கூடியே
நல்வர வேற்றனர் நம்மவரை
அங்கவர் செய்த அருந்தொண்டினைச் சொல்ல
யாரால் முடியுமென் றடியுங்கடி. 6

சேணுயர் மாட நெடுவீதிதனில்
செங்குந்தர் யாவருஞ் சூழ்ந்து வர
மாணுயர் நங்குலத் தலைவர்கள் வலம் வரும்
மாட்சியை யென் சொல்வேன் மாதர்களே! 7

வடிவேற்றுஞ் செங்குந்தர் கோட்டத்தின் முன்பாக
வானளாவித் திகழ் கம்பமதில்
குடியேற்றம் வா ழெம். ஏ. வேலாயுதனார்நங்
கொடியேற்றினா ரென்று கும்மியடி. 8

செங்குந்த மித்திர னுபபத்தி ராதிபர்
ஜெ. தங்கவேலு சிறப்புறவே
எங்கும் புகழ்பெறு நங்குலச் சீர்க்கொடி
யின்கவி பாடி யரங்கேற்றினார். 9

தஞ்சை ஜில்லாவர வேற்புக் கமிட்டியுஞ்
சற்குண வள்ளல் சபாபதியும்
செஞ்சொன் மலர்மாலை சூட்டிவரவேற்க
சேர்ந்தனர் செங்குந்தர் கோட்டமதில். 10

எத்திசையும் புகழ் பிரெஞ்சிற் புதுவை
யெழிலரசாங்க வுபதலைவர்
சித்த மகிழுநம் முத்தைய மாமுதல்
திறந்தார் சமூக மகாநாட்டை. 11

சென்னை தலைச்சங்க வமைச்சராஞ் சீர்பெறு
செங்குந்த மித்திர னாசிரியர்
மன்னிய சண்முக சுந்தர நாமங்கொள்
மகிபர் தலைமை வகித்தனரே. 12



தலைமை வகித்தவர் சமூகமுன் னேறிட
சாற்றிய பேருரை கொஞ்சமல்ல
நிலைமையாய்ச் செங்குந்தர் கல்வி நிதியொன்றை
நிறுவ வேண்டு மென்று நிகழ்த்தினரே. 13

பெண்கள் கல்விமிக அவசிய மாமென்று
பேசினா ரொற்றுமை மாமணந்தான்
கண்ணிய மாயிளங் கைம் பெண் விரும்பிடில்
கலியாணஞ் செய்தலே தகுதி யென்றார். 14

அன்னதற் பின் வர்த்தகர் மகாநாடுதான்
ஆரம்ப மாயிற் றதை மகிழ்வாய்
தன்னிகரில் திருப்பத்தூர் தாலுக்போர்ட்
தலைவர் சண்முகனார் திறந்து வைத்தார். 15

செங்கோட்டையாவென்று செப்பிடு நங்குலச்
சீமா னிதற்குத் தலைமை கொள
நங்கோட்ட முற்றிலு மவருரை வாசகம்
நாலு திசையு மொலித்தனவால். 16

கைத்தொழில் வர்த்தகங் கல்வி விருத்தியுங்
கடுகி முன்னேறிடக் காணுதலே [று
மெய்த் தொண்டாம் நங்குல மேலோர்களுக்கென்
விளம்பினா ருள்ளங் குளிர்ந்திடவே. 17

ஆங்கதன் பின்ன ரிளைஞர் மகாநாடு
ஆரம்ப மாகக் கோபாலசாமி
ஓங்கிடு மாங்கிலப் பேருரை யால
துவங்கிடுமாறு திறந்து வைத்தார். 18

தென்னை மலிதிரு வனந்தபூர் சயன்ஸின்
திறம்வளர் கல்லூரி யாசிரியர்
பன்னிரு கைப்பெருமாள் முதலியாராம்
புாக்கியவான் தலைமை வகித்தார். 19

அமுதம்போல் சொற்பொழி வாற்றுகையில் வெகு
ஆர்வமாய் நங்குல வாலிபர்கள்
சமூகமுன் னேற்றமா மேணியின் படிகளாய்ச்
சமைந்திட வேண்டுமென்றே யுரைத்தார். 20

தீதறு முத்தைய வள்ளல் திருப்படந்
திறக்கையில் மீனாட்சி சுந்தரரும்
கோதறு மார்வத்தா லன்னவரைச் செங்
குந்த மகாத்துமா வென்று சொன்னார். 21

ஆர்வமுடன் மகா நாட்டிற்கு வந்தோ
ரனைவர்க்கும் பற்பொடி பூதிகளும்
சீரான சிற்றுண்டி யறுசுவைப் போசனந்
தேநீருந்தவுந் தானளித்தார். 22

கைம்மாறு வேண்டாமல் காசொன்றும் வாங்காமல்
கற்பகம் போல்நின் றுதவினர்க்கு
இம்மா னிலம்புகழ் கும்மியின் பாடலோ
ஏற்ற பரிசாகு மேந்திழையீர்! 23

ஜில்லா தொறும் பத்துப் பிரதி நிதியாக
தேர்ந்தெடுத்தோர் கூட்டம் கூட்டி யதில்
பல்லோர்கள் நஞ்சாதி முன்னேற்ற விஷயமாய்ப்
பலபல தீர்மானங் கொண்டு வந்தார். 24

வெற்றி கொண்ட பல தீர்மானம், சில
வீணாகத் தோல்வி யடைந்தனவால்
கற்றவர் கூடி விஷயா லோசனை
முற்றுறச் செய்தனர் காணுங்கடி. 25

பின்னர் தலைச்சங்க வைந்தாம் பொதுக்கூட்டம்
பெருமையாய் நடந்தது கோட்டமதில்
மன்னிய தலைவர்கள் யாவர்க்கும் வந்தனம்
வாழ்த்துபசாரம் மலர் மாலை 26

சந்தன தாம்பூலம் வழங்கி மகாநாட்டை
சண்முக னருளினால் பூர்த்தி செய்தார்
வந்தவர் யாவர்க்குந் தலைவர்கள் பேருரை
வழங்கினார் சிறு சிறு புத்தகமாய். 27

செங்குந்த ரூக்கத்தைச் சோதிப்பான் போலவே
தெய்வசங் கற்பம் மழை பொழிய
தங்குத லில்லாமல் கூடி மகாநாட்டைச்
சமர்த்தாய் நடத்தினார் பாருங்கடி. 28

மழையா லிடைஞ்சல்கள் நேர்ந்தும் மகாநாட்டை
வழக்கம்போல் யாவருங் களித்திடவே
விழைவாய் நடத்திய ஆரூர் சபாபதி
வீரத்தைப் பாடி யடியுங்கடி. 29

வாழி சபாபதி வள்ளல் தலைவர்கள்
வாழி செங்குந்தர்கள் தொண்டர் படை
வாழி திருவாரூர் செங்குந்தர் கோட்டமும்
வாழி மகாநாடு வாழியவே. 30

சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்கித மங்கள மெங்கு மிலங்குக!

## சிறு கதை

# திருட்டுக்கேற்ற தண்டனை

[ஜெ. த.]

துப்பு துரைசாமி பிள்ளை வீட்டில் திருடு போயிற்று என்றால் யார்தான் ஆச்சரியப் படமாட்டார்கள்? பூசாரியிடத்திலேயே சைத்தான் வாலையாட்டிற்றென்றால் மகத்தான ஆச்சரியந்தானே? வடவேங்கடம் முதல் தென்குமரி வரையுள்ள தமிழ்நாட்டிலே தமிழணங்கு தனியரசு செலுத்துகிறாளென்றால், அந்தப் பரந்த எல்லையிலடங்கிய துப்பு உலகத்தில் துரைசாமி பிள்ளையினுடையது தான் ஏகாதிபத்தியம். திருடு, கொலை, மர்மம், மாயம் என்னும் வார்த்தைகளில் ஏதாவதொன்று காதிற் பட்டால் கூடவே பிள்ளையவர்கள் பெயர்தான் அடிபடும். நூற்றுக்கணக்கான மர்மங்களில் ஈடுபட்டிருக்கிறார்—துப்பறியும் வேலையே அவருடைய குத்தகைதானென்றால் கேட்பானேன்?—எதிலும் முன்வைத்த காலைப் பின்வைத்தது கிடையாது. மனத்தாலும் பாவனை செய்ய முடியாத மாயச் செயல்களிலும் படிப்படியாக விளக்கங் கண்டுகொண்டே சென்று கடைசியாகக் கண்டோர் கேட்டோரெல்லாரும் பிரமிக்கும்படி ஜெயக்கொடி நாட்டும் பெற்றி வாய்ந்த பிள்ளையவர்களைப் பற்றித் தமிழ் நாட்டு மக்கள் கேட்டதெல்லாம் வெற்றி, வெற்றிதான். பல சொல்லி விரிப்பானேன்? துப்பு என்றால் துரைசாமிதான், துரைசாமி என்றால் துப்புதான். எந்த வேளையிலே எந்தப் பாட்டி எந்த வாயால் பெயர் வைத்தாளோ, அந்த இரண்டு முதலெழுத்துக்களும் அவ்வளவு நெருங்கி உறவாடின. அப்படிப்பட்ட சமர்த்தரிடமிருந்து ஒரு கைக்கடிகாரம் களவுபோயிற்றென்றால் யார்தான் விந்தை கொள்ளமாட்டார்கள்? 'என்ன கலிகாலம்! தண்ணீருக்கே தாகமெடுத்துக்கொண்டது போலிருக்கிறதே' என்றனர் சிலர்; 'திருமகளையும் தரித்திரம் பிடிக்குமா?' என்றனர் சிலர்; 'சூரியனிடம் ஒளியைத் திருடியதுபோலல்லவோ இருக்கிறது இந்தக் கதை?' என்றனர் சிலர். யார் எவ்வளவு ஆச்சரியப்பட்டென்ன? யார் எவ்வளவு புகழ்ந்து பேசியென்ன? நாட்களும் மூன்றாயின; மர்மமொன்றும் விண்டபாடில்லை; துரும்பளவும் துப்பு துலங்கியபாடில்லை.

* * *

சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த பிள்ளையவர்கள் கவலையின் பிம்பமே போல் தோன்றினார். கவலையின் சாரத்தையெல்லாம் திரட்டியுருட்டி மூக்கும் விழியுமாய் உருவாக்கியது போலிருந்தது அவர்முகம். அவர் அப்படிக் கவலையிலாழ்ந்திருந்தது அந்தக் கடிகாரத்துக்காகவென்று எண்ணுகிறீர்கள்? இல்லவே இல்லை. போனால் போகிறது அந்த அற்பக் கைக்கடிகாரம்! பத்தரை மாற்றுத் தங்கமானால்தானென்ன? அந்த இருநூற்றைம்பது ரூபா யென்ன வரவா, செலவா? ஒரு நாள் 'ஜோல்னா' வாடகைக்காக அந்தக் குடுகுடுப் பாண்டிக்குக் கொடுத்தது கூடக் காணாது. அந்த இருநூற்றைம்பது ரூபா கடிகாரமல்ல, அதுபோல இருநூற்றைம்பது கடிகாரங்கள் போயிருந்தாலும் அவர் அவ்வளவு கவலை கொண்டிருக்க மாட்டார். ஆனால் அவ்வளவு துணிவுக்கும் அந்தஸ்துக்கும் காரணமாயிருந்த அவரது திறமை—அதனால் அவர் சம்பாதித்த ஒப்பற்ற பெயர்—இப்போது எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டதே. இல்லை; அத்தகைய திறமைக்கு அகப்படாது ஒளிந்துகொண்டதே அந்த மர்மம். அது தான் அவர் மனத்தை ரம்பம்போல் அறுத்தது. அதுவரை பிள்ளையவர்கள் அகராதியில் 'தோல்வி' என்பதே கிடையாது. சென்ற விடமெல்லாம்—எடுத்த முயற்சியிலெல்லாம்—திறமைதான், துலக்கம்தான், வெற்றிதான், பெயர்தான், புகழ்தான். 'சீச்சி! எத்தனையோ மகாமகா மலையையெல்லாம் தகர்த்தெறிந்தாயிற்று; இந்த அற்பக் கூழாங்கல்லுக்குத் தோற்றுச் சளைப்பதா?' என்று தான் பிள்ளை வருந்தினார்.



மூன்று நாட்களில் அவர் முருங்கைக்காய் வற்றல் போல் வாடிவிட்டார். உள்ளே சென்று குளித்துவிட்டு வருவதற்குள் மேஜையின் மேல் கழற்றிவைத்த கைக்கடிகாரம் காணாமற் போகவே அவர் ஸ்தம்பித்து நின்றுவிட்டார். ஆனால் அடுத்த நிமிஷமே அவர் முகம் வீரக் களையுடன் ஜொலித்தது. "சீ! இதென்ன அற்பம்! மலை விழுங்கி மாரியாயிக்கு உரலெம்மாத்திரம்! எந்தப் பயலாயிருந்தாலென்ன? ஒரு நொடியில் ஊதித்தள்ளாவிட்டால் என்பெயரைத் திரைசாமி என்று மாற்றிக்கொள்ள மாட்டேனா!" என்று கனன்று குதித்தெழுந்தார். மேஜையினருகே சென்று மூலையையும் முடுக்கையும் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். 'இன்ச்டேப்' எடுத்து அளந்தளந்து எழுதினார். எந்த இடத்திலே தூசு எப்படிக் கலைந்திருக்கிறதென்று உற்றுக் கவனித்தார். அடுத்தாற்போல் தமது பூதக் கண்ணாடியின் உதவியால் தரையைச் சோதித்தார். பிறகு மேஜையிலிருந்து தெருவரை தரையை முகர்ந்து முகர்ந்து பார்த்தார். சுவரையும் ஜன்னலையும் ஏற இறங்கப் பார்த்தார். எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு யோசனையிலாழ்ந்தார். ஆனால், எல்லாக் குறிப்புக்களும், எல்லாச் சோதனைகளும், காலுக்கும் கைக்கும், கண்ணுக்கும் மூக்குக்கும், பென்சிலுக்கும் காகிதத்துக்கும் வீண் சிரமமாகத்தான் முடிந்தன. பிறகு வேறு உபாயங்களைக் கையாண்டார். 'அம்மா பிச்சை' யாகவும், வளையல்காரனாகவும், குடுகுடுப்பாண்டி யாகவும் உருமாறி இரவு பகலாக அண்டையிலும் அயலிலும் சுற்றிச் சுற்றி யலைந்தார். ஒன்றும் பயன் பட்டபாடில்லை. மூன்றே மணி நேரத்தில் மிகமிகச் சிக்கலான மர்மத்தையும் கண்டறிந்த அநுபவமுள்ள பிள்ளையவர்கட்கு மூன்று நாட்களாக முப்பத்தெட்டு வேஷம் போட்டும் முந்நூற்றெட்டு யோசனை செய்தும் எள் மூக்கத்தனையும் மர்மம் விளங்கியபாடில்லை. அவர் கவலையே உருவாகச் சாய்ந்து கிடந்தாரென்பதில் ஆச்சரியமென்ன?

"ஆஹா! இத்தனை நாளாக எடுத்த பெயரெல்லாம் எங்கோ போயிற்றே! பிழைத்த பிழைப்பெல்லாம் பாழாய்ப் போயிற்றே" என்றெண்ணிக்கொண்டு அழ மாட்டாத குறையாகக் கண்களை மூடிக்கொண்டிருந்தார். 'வாத்தியார் பிள்ளை மக்கு; வைத்தியர் பிள்ளை சிக்கு' என்ற கதையாய் முடிந்தது அவர் பாடு. ஊருக்கெல்லாம் உளவு கண்ட அவருக்குத் தன் வீட்டுக்குத் தகவல் கிடைக்கவில்லை யென்றால் அதைவிட அவமானம் வேறென்ன வேண்டும்? வேறு யாரையாவது யோசனை கேட்கலாமா என்றும் அவர் மனம் எண்ணிற்று. ஆனால் வைத்திய ரத்னாகரத்துக்கே வாதம் வந்தால் மருந்து கொடுப்பவரார்? சோதிடப் புலிக்கே திசை தடுமாறினால் பலன் சொல்லுவாரார்? கடல் நீரே வெதும்பிக் கொதித்தால் அதை ஆற்றுவதெந்நீரால்? அது மட்டுமா? 'சீச்சீ, அப்புறம் ஒரு விநாடி கூட இந்தக் கூட்டில் அடைபட்டுக் கிடக்க மாட்டேன்' என்றது அவராவி; "ஆமாம், மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்று ஆமோதித்தது அவர் மனம்.

இத்தகைய குழப்பத்துக்கிடையே, அருகில் துப்பும் அறியாது துன்பமும் அறியாது நிம்மதியாகக் கண்ணயர்ந்துகொண்டிருந்த உருவத்தின் நிர்மலமான வதனத்தின்மீது சென்றது அவர் பார்வை. ஏகபுத்திரி. இரண்டு காளையர்களைப் பறிகொடுத்த பின் தவங்கிடந்து பெற்றெடுத்த பெரும் பேறு. தத்தித் தத்தித் தளர்நடை நடந்து தந்தையின் மனதைக் களிப்பிக்கும் தங்கக் கட்டி. மதலையும் குதலையும் மருவிக் கொட்டி மாதாவை மகிழ்விக்கும் மலர்ச்சோலை. அவளது அரிய வதனத்தின் கதிரொளி பட்டவுடனே பிள்ளையவர்கள் அகத்தையும் முகத்தையும் கப்பிக்கொண்டிருந்த கவலைக் காரிருள் பறந்தது. ஆனால் அடுத்த கணமே அது இரட்டிப்பாக வந்து மோதிக் கௌவிற்று. முகத்தை மற்றொரு புறம் ஆயாசத்தோடு திருப்பினார். "ஆஹா! என் செல்வத்தை விட்டு எப்படிப் பிரிவது! வாழைக் குருத்துக்கள் போன்று வாரிவாரிக் கொடுத்து வாடி வதங்கிக் கிடந்த நமக்கு அன்புத் தண்ணீர் வார்த்து ஆறுதலளிக்க வந்த கண்மணியன்றோ இவள்! இவளன்றோ தொழிலிலும் வாழ்க்கையிலும் எனக்கு உற்சாகமூட்டி வந்தவள்! அப்பனையே உரித்துக்கொண்டு வந்துவிட்டாளென்று பார்த்தோரெல்லாம் பாராட்டும் இப்பாலகியை—பாலப் பருவத்திலேயே அறிவு நுணுக்கங் காட்டும் இப் பைங்கிளியை—என்னுடைய துறையிலேயே பழக்கவன்றோ நான் புதுப்புது நூல்களை வாசித்துப் புதுப்புது முறைகளை ஆராய்ந்து வருகிறேன்? 'உலக சரித்திரத்திலேயே பெண்களுள் முதன் முதலாகத் துப்புத் துலக்க முன்வந்த தீரமணி வஸந்தா என்னும் வனிதையே' என்

னும் திவ்விய வாக்கியம் துப்புச் சரித்திர புத்தகங்களில் துலங்கவேண்டுமென்றல்லவோ நான் இந்த இரண்டரை வருஷங்களாக இத்துணைப் பாடுபட்டு வருகிறேன். ஆ! இந்தப் பச்சைப் பசுங்கிளியைப் பால்மண மாறாத இப்பருவத்தில் விட்டுப் பிரிந்தால் இதன் நிலை என்னவாகும்! என் மனோபீஷ்டம் என்னவாகும்! உலகத்தார் கொண்டாடும் என் திறமையும் அனுபவமும் என்னோடல்லவோ மாண்டு மடிந்துபோம்! ஆனால் என்செய்வது? பேரெல்லாம் இழந்து, புகழெல்லாம் துறந்து, கேவலம் என் வீட்டிலேயே நடந்த ஒரு அற்பக் கடிகாரத் திருட்டைக் கண்டுபிடிக்க இயலாமல் 'ஆனைக்கும் அடிசறுக்கும்' என்பதற்கு எடுத்துக்கட்டாக பிறர் சொல்லிக்கொள்ளும்படி கிடந்து உயிரைத் தாங்கியிருப்பதினும் மாள்வதே மேல். என்னவோ, பார்ப்போம். இறைவனிச்சையிருந்தால், இந்தப் பெண்ணின் அதிர்ஷ்டமும் நல்லதாயிருந்தால், இந்த மர்மம் வெளியாகட்டும். என் முயற்சி திருவினையாகட்டும்" என்று எண்ணிக்கொண்டு குழந்தையின் பக்கம் திரும்பினார். உடனே அவர் மனத்தில் பாசப் பறவை அன்பலை வீசிப் பொங்கி எழுந்தது. திடீரென்றெழுந்து குழந்தையை வாரியெடுத்து, "கண்ணே, கற்கண்டே, கட்டிக் கரும்பே" என்று கொஞ்சி முகத்திலும் மார்பிலும் அணைத்துக்கொண்டார். வஸந்தாவும் அரைத் தூக்கத்தில் "டிக் டிக்—டிக் டிக்—டிக் டிக்" என்றாள். தந்தையின் கவலை எங்கோ பறந்தோடிற்று. கையிலிருந்த குழந்தையுடன் கொஞ்சிக்கொண்டே மீண்டும் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தார். பெற்ற மனப் பித்துடனே, "செல்லக் குட்டி! கண்ணுக் குட்டி! பட்டுக் குட்டி! வஸந்தாக் குட்டி! நீ நல்ல சமுத்துக் குட்டியல்ல? நீகூட அப்பாவெப் போலெ துப்பு கண்டு பிடிப்பேல்லெ? எதோ, இப்போ கண்டுபிடி, பார்க்கலாம். கண்டுபிடிக்கறெயா?" என்று கொஞ்சிக்கொண்டே அந்த நாண்மலர் மீது ஓர் அன்பு முத்தமிட்டு இன்பத்தேன் பருகினார். வஸந்தா, "உங்கா—அப்பா—உங்கா—டிக் டிக்—டிக் டிக்" என்று என்னவோ நகைபோடும்படி கேட்பது போல் ஜாடை காட்டி மீண்டும் குதூகலத்துடனே "டிக் டிக்—டிக் டிக்" என்று பாட ஆரம்பித்தாள். "என்னதம்மா அது? என்னமோ கேக்கறெயே! நகையா வேணும் உனக்கு! எதோ, என்ன நகை வேணுங்காட்டு! எங்கிருக்கு? ஓடிப்போய் எடுத்துவா! ஓடு!" என்று குழந்தையைக் கீழே விட்டார். அவளும் நாலுகால் சவாரியில் தவழ்ந்துகொண்டோடிப் போய் ஒரு சிறிய சோப்புப் பெட்டியைக் கொண்டுவந்தாள். அதைப் பார்த்தவுடன் பிள்ளையவர்கள் பொங்கிப் பூரித்தார். "என்ன கண்ணு அது? உன் நகைப் பெட்டியா? எதோ காட்டு நகையெ" என்று எழுந்தோடி அதை வாங்கிக்கொண்டார். திறந்து பார்த்தார்; திடுக்கிட்டுப் போனார். "அடா டா டா! பலே ஆசாமியாயிருக்கெயே நீ! திருட்டுப் பொண்ணு! அம்மா!" என்றார். வஸந்தா, 'அப்பா-உங்கா-டிக் டிக்' என்று கையைக் காட்டினாள். அடுப்பண்டையில் உட்கார்ந்து அரிசியை உலையிலிட்டுவிட்டு, கடிகாரத்தையும் களவையும், துப்பையும் துரைசாமி பிள்ளையையும், பேரையும்புகழையும் சேர்த்துக் கதம்பம் பண்ணிக்கொண்டிருந்த சண்பகம் 'திருட்டுப் பொண்ணு' என்னும் குரல்கேட்டுத்திடீரென்று ஹாலுக்கு ஓடிவந்தாள். துரைசாமி பிள்ளை பொங்கிப் பொங்கிச் சிரித்துக்கொண்டே "பார்த்தையா சண்பா இந்தத் திருட்டுப் பொண்ணெ! இதுதான் இந்தக் கடியாரத்தெத் திருடி வச்சிண்டு என்னை இப்படி அலைச்சல் காட்டித்து. அதுக்குச் சரியான தண்டனை விதிக்கணும் இப்போ" என்றார். சண்பகம், "இதோ நா இப்பவே விதிச்சூட்டறே" என்று சொல்லிக்கொண்டே வஸந்தாவைத் தூக்கி எடுத்து அவள் கன்னத்தில் அழுத்தியொரு முத்திரையிட்டாள். அதற்குள், கஷ்டப்பட்டுத் திருட்டைக் கண்டுபிடித்த துரைசாமி பிள்ளையும் ஆத்திரத்துடன் அந்தத் 'திருட்டுப் பொண்ணு'வின் இரண்டு கைகளுக்கும் சேர்த்து அவள் திருடிய சங்கிலியையே விலங்கு மாட்டிவிட்டார். அதோடாவது நின்றதா? பாவம்! அந்த வஸந்தா அப்புறம் அரை மணி நேரம் அப்பா தோள்மீதிலேயே கடுங்காவலில் வைக்கப்பட்டாள்.




## "எல்லாம் செத்துப் போற கதை"

"பாப்பா"

"அப்பா அப்பா! வெகுநாளாச்சு
அழகான ருசியான கதை சொல்லும்"

"என்ன கதை சொல்வேன் எது கதை சொல்வேன்
என்னேரம் பார்த்தாலும் கதைதானா?
பொம்மை தாரேன் பொட்டணந் தாரேன்
பொன்போலாடித் தூங்கிவிடு."

"பொம்மையும் வேண்டாம் திம்மையும் வேண்டாம்
பொன்னும் எனக்குத் தெரியாது.
பொட்டணம் வேண்டாம் கிட்டணம் வேண்டாம்
போங்களப்பா விடமாட்டேன்."

"என்ன சொன்னாலும் விடமாட்டாய் நீ
எந்த மாதிரி கதை வேண்டும்?"

"எங்களப்பா நல்லப்பா!
எல்லாம் செத்துப் போற கதை."

"ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு நாளிலே......"

"ஊரிலுள்ள ஜனமெல்லாம்
உயிரை விட்டுவிட்டாரா?"

"இல்லையம்மா ஒரு கூட்டம்
இன்னொரூருக்குப் போயிற்று."

"மூஞ்சியிலெல்லாம் கரி பூசிக்கொண்டு
முக்காடிட்டுப் போனார்களா?"

"சீச்சீ! சொகுசாய்த் தலைப்பா யணிந்து
சிங்காரமாகப் போனார்கள்."

"ஆந்தை யொன்று அருகே வந்து
அலறி அலறிக் கத்திற்றா?"

"இல்லை இல்லை; பாண்டு வாத்தியம்
இடிபோலிடித்து முழங்கிற்று.
அப்புறம் அவர்கள் மலைமேலேறி....."

"அடுக்கடுக்காய் விழுந்தார்களா?"

நடுவே நடுவே கேள்விகள் கேட்டால்
நான் சொல்லமாட்டேன் தூங்கிவிடு."

"இல்லையப்பா இனிமேலில்லை
இனிமே லொன்றுங் கேட்கவில்லை."

"மலைமேலேறி மடுவைத் தாண்டி
மதில்மேலேறிக் குதித்தார்கள்."

"தங்கம் போன்ற கதை இதுதான்
தங்கக்கட்டி எங்களப்பா."

"ஒருவ ரொருவராய் மதிலுக்குள்ளே
ஒதுங்கி ஒதுங்கிச் சென்றார்கள்."

"அப்புறம்? அப்புறம்? சொல்லுங்களப்பா
ஆஹா! ஜோரான கதை இதுதான்."

"மதிலுக்குள்ளே ஊருண்டு
ஊருக்குள்ளே ஜனமுண்டு
ஒதுங்கி ஒதுங்கிப் போனவர்கள்
ஊருக்குள்ளே புகுந்தார்கள்."

"ஊருக்குள்ளே புகுந்த வுடன்
உருண்டு சுருண்டு செத்தார்களா?"

"ஊரிலிருந்த ஜனமெல்லாம்
உருண்டு சுருண்டு மடிந்தார்கள்."

"எப்படி யப்பா மடிந்தார்கள்?
எத்தனை ஜனங்கள் மடிந்தார்கள்?"

"இருந்த ஜனங்கள் எல்லாரும்
இருபதினாயிரம் பேரம்மா.
மதிலைத் தாண்டிப் போனவர் கையால்
மாண்டு மடிந்து போனார்கள்."

"போங்களப்பா அத்தனைப் பேரைப்
போனவரெப்படிக் கொல்வார்கள்?
போன்வரிடத்தில் இருந்தவரெல்லாம்
பொம்மையைப் போல் தலைநீட்டினரா?"

# பாப்பாவுக்கு

## சேவலாட்டம்

குழந்தைகளா, ஓடி வாருங்கள். நாங்கள் விளையாடின விளையாட்டைச் சொல்கிறேன்.

ஒரு நாள் இரவு எங்கே பார்த்தாலும் ஒரே வெளிச்சமாகப் பளிச்சென்று நிலவு காய்ந்துகொண்டிருந்தது. எங்கள் வீட்டுக்கெதிரே குப்பலாகக் கொட்டி வைத்திருந்த மணலின்மேல் போய் நான் உட்கார்ந்தேன். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் எதிர்வீட்டு ஏகாம்பரம் வந்தான். பிறகு அண்டை வீட்டு ஆறுமுகம் வந்தான்; பக்கத்து வீட்டுப் பழனி வந்தான்; மூன்றும் வீட்டு முத்து வந்தான்; நான்காம் வீட்டு நாகன் வந்தான்; ஐந்தாம் வீட்டு அம்பியும் வந்தான். எல்லாரும் ஒன்றுய்க் கூடிப் பேசிக்கொண் டிருந்தோம். திடீரென்று "வாருங்களடா சேவலாட்டம் ஆடலாம்" என்றுன் முத்து. அது கேட்டு எல்லாருமாகச் "சரியடா, நீதான் சேவலா யிருக்க வேண்டும்" என்ருேம். அவன் 'கொக்கரகோ' என்று கத்திச் சம்மதித்தான். உடனே நான் காக்கையானேன்; ஆறுமுகம் குருவியானுன்; பழனி கொக்கானுன்; நாகன் நெருப்புக்கோழி ஆனுன்; அம்பி பருந்தானுன்; ஏகாம்பரம் மயிலானுன். இப்படி மாறிய உடனே எல்லாரும் பிரிந்தோம். நான் 'கா கா' என்று கத்திக்கொண்டே ஓடினேன்; குருவி 'கிச் கிச்' என்று கத்திக்கொண்டே ஓடிற்று; கொக்கு 'கொக் கொக்' என்று கத்திக்கொண்டே எகிறி எகிறி ஓடிற்று; நெருப்புக்கோழி தாவித் தாவி ஓடிற்று; பருந்து பறந்து பறந்து சென்றது; மயில் அசைந்து அசைந்து ஆடிச் சென்றது; சேவல் மட்டும் அங்கேயே 'கொக்கரகோ' வென்று கத்திக்கொண்டு திரிந்துகொண்டிருந்தது.

சிறிது நேரங் கழித்து எல்லாரும் கத்திக்கொண்டே ஓடிவந்து சேர்ந்தோம். சேவல் ஆசையாசையாக ஓடிவந்து என்னிடம் 'காக்கா என்ன கொண்டு வந்தாய்?' என்றது. நான் 'சுள்ளி ஒடித்து வந்தேன்' என்றேன். குருவியிடம் போய்க் 'குருவி நீ என்ன கொண்டு வந்தாய்?' என்றது. அது 'அரிசி பொருக்கி வந்தேன்' என்றது. கொக்கினிடம் போய்க் 'கொக்கே, நீ என்ன கொண்டு வந்தாய்?' என்று கேட்டது. கொக்கு, 'தண்ணீர் மொண்டு வந்தேன்' என்றது. நெருப்புக்கோழியிடம் போய், 'அண்ணு, நீ என்ன கொண்டு வந்தாய்?' என்றது, அது 'நெருப்பு கொண்டு வந்தேன்' என்று பதில் சொல்லிற்று. பருந்தினிடம் போய்ப் 'பருந்தே என்ன கொண்டு வந்தாய் என்று கேட்டது' 'அது பானை' என்றது. கடைசியாக மயிலினிடம் சென்று 'மயிலே நீ என்ன கொண்டு வந்தாய்?' என்று கேட்டது. மயில் 'விசிறி கொண்டு வந்தேன்' என்று பதில் சொல்லிற்று. பிறகு எல்லோருமாகச் சேர்ந்து சேவலைப் பார்த்து, 'நீ என்ன கொண்டு வந்தாய்?' என்ருேம். அது 'கொக்கரகோ' என்று கத்திக்கொண்டு தலையைத் தூக்கி நின்றது.

உடனே சேவலை மட்டும் விட்டுவிட்டு மற்றெல்லாரும் ஒன்றுய்ச் சேர்ந்தோம். பருந்து பானை கொடுத்தது; குருவி அரிசி கொடுத்தது; கொக்கு தண்ணீர் கொடுத்தது; நெருப்புக்கோழி நெருப்பு கொடுத்தது; நான் சுள்ளி கொடுத்தேன்; மயில் விசிறியால் விசிறிற்று. நெருப்பை மூட்டி அரிசியைப் பொங்கி எல்லோரும் பங்கிட்டுக்கொண்டு ஆனந்தமாகச் சாப்பிட ஆரம்பித்தோம். ஏங்கி நின்ற சேவல் என்னிடம் வந்து 'காக்கா கொஞ்சம் சோறு கொடேன்' என்றது. நான் 'சோம்பேறிச் சேவலே சீச்சீ போ' என்று கொத்தி அனுப்பினேன். குருவியினிடம் போய்க் 'குருவி கொஞ்சம் சோறு போடேன்' என்றது. அது 'துஷ்டச் சேவலே தூரப்போ' என்று விரட்டி யனுப்பிற்று. பிறகு கொக்கினிடம் சென்று 'கொக்கே கொஞ்சம் சோறு போடேன்' என்றது. கொக்கு 'திமிர் பிடித்த சேவலே தீண்டாதே' என்று துரத்திற்று. பிறகு பருந்தினிடம் போய்ப் 'பருந்தே கொஞ்சம் சோறு போடேன்' என்று கேட்டது. அது 'வேலை செய்யாச் சேவலே விலகிப்போ' என்று ஓட்டிற்று. மயிலினிடம் போய் 'மயிலே கொஞ்சம் சோறு போடேன்' என்று கேட்டது. மயில், 'மானங் கெட்ட சேவலே மறைவாய்ப் போ' என்று மடக்கிற்று. கடைசியாகச் சேவல் நெருப்புக்கோழியிடம் போய், 'அண்ணு நீதான் கொஞ்சம் சோறு போடேன்' என்று கெஞ்சிற்று. 'அண்ணுவுமாச்சி, கிண்ணுவுமாச்சி; அண்டாதே இங்கே; அடிப்பேன் போ' என்று அது அலறவடித்தது. பாவம் சேவல் ஏங்கி நின்று 'கொக்கரகோ' என்று அலறியழ ஆரம்பித்தது.

அதற்குள், 'அடே சோமு!' என்று எங்களம்மாள் கூப்பிட்ட சப்தம் கேட்டது. எல்லாரும் ஓவென்று கத்திக்கொண்டு ஓடினேம்.

குழந்தைகளே, நன்றுயிருக்கிறதல்ல இந்த விளையாட்டு? நீங்கள் எப்போதாவது இந்த ஆட்டம் ஆடியிருக்கிறீர்களா?

"ஐயோ பாவம்! அறியாத பெண்ணே
ஆய்ந்தோய்ந்து பார்க்க அறியாய் நீ."

"என்ன அப்பா ஊரிலிருந்தவர்
இருபதினுயிரம் பேரலவோ?
அத்தனைப் பேரைக் கொல்வதற்கு
இத்தனைப் போரால் முடிந்திடுமோ?"

"எத்தனைப் பேர்கள் போனர்கள்?
ஏமாந்த பெண்ணே கேட்டாயோ?
போனவரெல்லாம் எண்ணிப் பார்த்தால்
பொறுக்காய் முப்பதினுயிரம் பேர்."

"தூ தூ! பெரிய மோசக்காரர்
தவிட்டுக்கட்டி எங்களப்பா!
எல்லாம் செத்துப் போற கதை
இதுவல்ல; ஏதுவோ சண்டை இது."

"ஆமாம், ஆமாம், அறியாத பெண்ணே,
அதைவிட அழகான ருசியான
'எல்லாம் செத்துப் போற கதை'
எனக் கொன்றும் வேறே தெரியாதே!"



## தெய்வம் பலியை விரும்புகிறதா?

(ஆனந்த போதினியில் கண்டது)

நம் நாட்டில் சில தெய்வங்களுக்கு உயிர்ப் பலி கொடுப்பது ஒரு கொடிய வழக்கமாயிருக்கிறது. பலியிடுகின்றவர்களை 'நீங்கள் ஏன் அவ்வாறு செய்கின்றீர்கள்? உயிர்ப் பலி தருவது பாவமாயிற்றே?' என்று நாம் கேட்டால், அதற்கு அவர்கள், 'தெய்வம் பலியை விரும்புகின்றது; பலியிடும்படி சொல்கின்றது. நாங்கள் அது சொல்லுகிறபடியே செய்யாவிட்டால் அதற்குக் கோபம் வந்துவிடும்' என்று பதில் அளிக்கின்றுர்கள். ஆனால் உண்மையில் தெய்வம் பலியை விரும்புகின்றதா என்பதை ஆராய வேண்டும். 'தெய்வம் பலியை விரும்புகின்றது என்பதற்கு என்ன சாக்ஷி? அது எப்படித் தன் எண்ணத்தைத் தெரிவிக்கின்றது?' என்று கேட்டால் மனிதர் மூலம் ஆவேசம் வந்து தன் எண்ணத்தைத் தெரிவிக்கின்றது என்று கூறுகின்றுர்கள். அவ்வாறு ஆவேசம் வருவது உண்மைதானு என்றுலோ, உண்மை அன்று. ஏனெனில், நாம் அநேக நண்பர்களை விசாரித்தும் அநேக சாமி ஆடிகளை நேரில் சோதித்தும் பார்த்தோம். ஓர் இடத்தில்கூட உண்மையாகச் சாமி வரவேயில்லை.

தெய்வம் ஆடுகின்றவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். தெய்வ மாடுவதே தொழிலாக உடையவர்கள் ஒரு வகையார்; யாதாமொரு தெய்வத்தினிடத்து நம்பிக்கையும் பயமு முடையவர்கள் மற்றொரு வகையார். தெய்வமாடுதலையே தொழிலாக உடையவர்கள் நிரம்பப் புலாலைப் புசித்துவிட்டுக் கள்ளையும் சாராயத்தையும் குடித்துவிட்டு வெறிகொண்டு தங்கள்பேரில் சாமி வந்ததாகச் சொல்லிக்கொண்டு மனம் போனபடி யெல்லாம் ஆடுகின்றுர்கள். இவர்கள் செய்கையும் சொல்லும் முற்றும் பொய்யே. இவர்கள் மிரட்டி விழிப்பதையும் அதட்டிப் பேசுவதையும் உரத்திக் கத்துவதையும் பார்க்கின்ற ஜனங்கள் இவர்களிடத்து ஏதோ தெய்வம் வந்துவிட்டதாக நம்பி இவர்கள் சொல்லுகின்றபடியே செய்ய ஒப்புக்கொள்ளுகின்றுர்கள். ஐயோ இது என்ன அறியாமைத்தனம்!

மனிதரைக் காட்டிலும் உயர்ந்ததாகிய தெய்வம், ஒழுக்கமற்றவர்களும் புலாலையும் கள்ளையும் உட்கொள்ளுகின்றவர்களுமாகிய துஷ்டர்கள் மீது வருமா? வாராது! வாராது!! இவ்வாறு தெய்வமாடுகின்ற ஒருவனைப் பலவிதத்தாலும் சோதிக்க வேண்டும். அவ்வாறு சோதித்துப் பார்க்கின் அது முழுப்புரட்டாகவே ஏற்படும்.

ஆனால், யாதாமொரு தெய்வத்தினிடத்து நம்பிக்கையுள்ள சிலர், பெரும்பாலும் பெண்கள், கள் முதலியன குடிக்காவிட்டாலும் ஆவேசம் வந்து ஆடுகின்றார்களே, இவர்களும் பொய்யர்களா என்று சிலர் கேட்கக் கூடும். அதற்கும் யாம் கொடுக்கக்கூடிய பதில் ஒன்றே. அஃதாவது, ஆம்; அவர்களும் பொய்யர்களே. ஆனால் அவர்களுடைய பொய்யை அவர்கள் உணர்கின்றதில்லை. மிரண்டவன் கண்ணுக்குஇருண்டதெல்லாம் பேய் என்ற பழமொழிப்படி தெய்வம் மனிதர்பேரில் வந்து பேசுகின்றது என்று அவர்கள் முழுதும் நம்பியிருத்தலாலும் தங்கள்பேரில் வரக்கூடும் என்று எண்ணி யிருத்தலாலுமே அவர்கள் தங்களை மறந்து அவ்வாறு செய்கின்றார்கள். ஆனால் நன்றாக ஆராய்ச்சி செய்து பார்க்கையில் அவர்கள் செய்கையும் பொய்யென்றே வெளிப்படையாகப் புலனாகும்.

தெய்வங்கள் பலியை விரும்புவதும் விரும்பாததும் தெரியவேண்டுமானால் தெய்வத்தின் முன்பாக உயிர்ப் பிராணியை நிறுத்திவிட்டு, 'ஓ தெய்வமே உனக்கு உயிர்ப்பலி உண்மையாகவே விருப்பமா யிருந்தால் இந்தப் பிராணியின் உயிரை எடுத்துக்கொண்டு உடலைத் தள்ளு' என்று கேட்போமானால் எந்தத் தெய்வமும் அவ்வாறு செய்யாது; அவ்வாறு செய்யவும் முடியாது. அவ்வாறு செய்ய முடியுமானால் மனிதர்கள் உயிர்களை வெட்டி மாய்க்க வேண்டிய அவசியமே இராது, தெய்வமும் மாமிசத்திற்காக மனிதனை எதிர்பார்த்துக் கொண்டிராது. ஆகையால் தெய்வம் பலியை விரும்புகின்றது என்று சொல்வது உண்மையன்று. தெய்வம் பலியை விரும்ப வில்லை என்று 'ஜீவரட்சகன்' ஆசிரியர் எழுதுகிறார்.

---

# பேய் பிசாசென்பது உண்டா ?

[பம்பாய் அறிவு விளக்கச் சங்கத்தாரின் வேண்டுகோளின் மீது அதன் தலைவர் ஸ்ரீ எ. எம். சுந்தரதாஸ் எழுதியது]

பேய் பிசாசு என்பதில் உண்மை ஒன்றுமில்லை. இல்லாததை உண்டு என்று பீதியால் நம்புவதே பேய் எனக் கொள்ளப்படுகிறது. மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று சொல்லப்படுவதிலிருந்தே மிரண்டவர்களுக்குத்தான் பேய் என்பது தோன்றுகிறதென்றும் நல்ல அறிவுடனும் புத்தி சுவாதீனத்துடனும் இருப்பவர்களுக்கு அத்தகைய உணர்ச்சியே ஏற்படுகிறதில்லை என்றும் தெரிகிறதல்லவா ? அறியாமை நிரம்பிய ஜனங்கள் சிலர் பேய் பிசாசு பயங்கரமாக இருக்கும் என்று யாரோ சொல்லிவிடுவதைக் கேட்டுப் பீதியடைந்து அந்தப் பீதியால் சதா அதையே மனதில் நினைத்துக்கொண்டு அதற்கு ஒரு உருவையும் தங்கள் மனக் கண்ணில் ஏற்படுத்திவிடுவதால் அவர்கள் பேயைப்பற்றி நினைக்கும்போது அந்த உருவம் எதிரில் நிற்பதுபோல் நினைத்து அஞ்சுகின்றனர். சிலர் தற்கொலை செய்துகொண்டவர்களும் வேறு துர் மரணங்களை அடைந்தவர்களும் பேய், பிசாசுகளாக மாறி ஜனங்களைத் துன்புறுத்துவதாகக் கூறினர். அதுவும் தக்கபடி ஆராய்ச்சி செய்து பார்த்தால் பொய்யாகும். பஞ்ச பூதங்களாலாகிய இவ்வுடல் எரிக்கப்பட்டு அழிந்ததும் பஞ்ச பூதங்களும் அதனுடன் கலந்துவிடுகின்றன. ஆன்மா உடனே பிறக்கவேண்டும் அல்லது சூஷ்ம உலகில் இருக்க வேண்டும். உண்மை இவ்வாறிருக்க எப்படி இறந்தவர்களின் ஆன்மா இதரர்களைத் தொந்தரை செய்ய முடியும்? உருவமில்லாப் பேய் பிசாசுகள் எப்படி அடிக்கவும் நடக்கவும் முடியும் ? ஆகவே பேய் பிசாசென்பதெல்லாம் அறியாமையாலும், மூடத்தனத்தாலும், அச்சத்தாலும் நினைக்கப்படும் பொய் வஸ்துவேயன்றி வேறொன்றுமில்லை.

ஆண்களையும் பெண்களையும் பேய் பிடித்திருக்கிறதென்று சொல்லி மந்திரவாதி, பூசாரி முதலியவர்களிடம் ஒப்பித்துப் பணம் செலவிடுவதும். அதை இன்னும் ஆடல் பாடல்களால் அதிகப்படுத்திவிடுவதும் இதனால் எவ்வளவோ துன்மார்க்கங்களும் மோசடிகளும் நடப்பதும் நமது அறியாமையையே காண்பிக்கிறது. நானும் சுமார் 24 வருஷங்களாக வைத்தியனாகவும், மந்திரவாதியாகவும், மெஸ்மெரிசம் முதலிய மனோவசிய சக்தியுடையவனாயும் இருந்து பல சந்தர்ப்பங்களில் பல விஷயங்களை ஆராய்ந்திருக்கிறேன். இவ்வனுபவத்தின் பயனாகப் பேயோ பிசாசோ நிச்சயமாக இல்லை யென்றும், வியாதி காரணமாகச் சிற்சிலருக்குச் சிற்சில சமயங்களில் மூளைக் கொதிப் பேறிவிடுவதால் அப்படிப் பட்டவர்கள் சித்த ஸ்வாதீனமின்றிப் பைத்தியம் பிடித்தவர்கள்போல் ஆடவும் பாடவும், பிறரை அடிக்கவும் ஏதேதோ உளறவும் செய்வர் என்றும் கண்டறிந்தேன். அப்படிப் பட்டவர்களுக்குப் பிசாசு பிடித்திருக்கிறதென்று மந்திரவாதிகளிடம் அழைத்துச் செல்வதால் அதிகப் படுவதே யொழியக் குறைவதில்லை. எப்போதோ மூளை சாந்தமடையும்போது குறைந்தது போல் காணப்படும். அது கண்டு பிசாசு சிறிது ஓய்ந்ததென்று நினைப்பர். ஆகவே நல்ல வைத்தியத்தால் அவ்வியாதியைத் தீர்த்துவிடலாம். பேய் பிசாசுகள் கிடையாது.



---

158911

# கோவைச் சகோதரர்களே! இன்னும் உறக்கமா ?

[சின்ன பழனியப்பன்]

நமது முதல் மகாநாட்டை ஈரோட்டில் வெகு ஆடம்பரமாய்க் கூட்டியதை நோக்கி, உங்கள் குலாபிமானத்தையும், விழிப்பையும், கிளர்ச்சியையும் பற்றி நமது மித்திரனிலும், பிற பத்திரிகைகளிலும், மிக்க விமரிசையாகப் பலர் பல சமயங்களில் எழுதி யிருந்ததைப் பார்த்து என்னைப் போலவே பல சகோதரர்கள் அவை யாவும் உண்மை யென்றே கொண்டிருந்தார்கள். இப்போது அதற்கு மாறான அபிப்பிராயத்தையுடையவனா யிருக்கிறேன். காரணம் கேட்பீர்களோ ? சொல்லுகிறேன்.

நம்மிடையே சென்ற ஐம்பது அறுபது வருஷங்களாக இருந்துவரும் உறக்கம் இன்னும் நம்மை விட்டகலாமல் இருந்துகொண்டுதா னிருக்கிறது. நாம் விழிப்படைந்து முன்னேற்றப் பாதையில் செல்ல ஆரம்பித்திருக்கிறோம் என்பதற்கான அறிகுறி ஒன்றையும் இதுவரையில் காணோம். ஆனால் இன்னுங்கூட நித்திரையிலிருந்து விழித்தெழுந்தோ மில்லை என்பதற்கான அடையாளங்கள் மாத்திரம் நிரம்பவிருக்கின்றன. இதனால் நமது பத்திரிகை, சங்கம், மகாநாடு முதலியவற்றா லுண்டாகக் கூடிய பயனைப் பெரும்பாலார் அடைந்தாரில்லை எனத் தெரிகிறது. தட்டி எழுப்பினும் எழுந்திருக்கிறார்களில்லை. ஒரு சமயத்தில் ஒன்றாய்க் கூடுவதும் அச்சமயம் ஏதோ ஒரு காரியத்தைச் செய்வதும், பின்னர் அது எவ்வாறாயிற்று என்று ஏறெடுத்துப் பார்க்காம லிருந்துவிடுவதுமான துர்வழக்கம் இன்றும் இருந்துகொண்டேதா னிருக்கிறது.

கோவை சேலம் ஜில்லா வாசிகள் சம்பந்தப்பட்ட ஒரு விஷயத்தைப்பற்றி முன்னர் கூறுகிறேன். ஈரோடு மகாநாட்டிற்காகச் சுமார் பதினையாயிரம் ரூபாய் வரையில் வசூல் செய்யப் பெற்றதென்பதைச் சகோதரர்கள் அனைவரும் அறிவார்கள். அதிற் செலவானது போகச் சுமார் நாலாயிரம் ரூபாய் வரையில் மீதம் நின்றது. அப் பணத்தை நமது தலைச் சங்கத்தின் சட்டதிட்டப் பிரகாரம் தலைச்சங்கத்திற்கே கொடுத்திருக்கவேண்டும். இதே எண்ணத்தோடுதான் பணம் வசூலிக்கப் பெற்றது. பணம் கொடுத்தவர்களும் இவ்வாறே சொல்லப் பெற்றார்கள். இது யாவரும் அறிந்த உண்மை. அதே மகாநாட்டுப் பந்தரில் கூடிய தலைச்சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் இக்கேள்வி வந்தபோது கோவை ஜில்லாத் தலைவர்களில் சிலர் மீதமான பணம் எங்களிடத்திலேதா னிருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஆகவே அத்தொகை பொது நன்மைக்கு உபயோகப்படுவதானால் எங்கிருந்தாலென்ன வென்ற பெருநோக்கத்தோடு தலைச்சங்கத்தினர் சட்டதிட்டங்களையும் அதற்கேற்ப அப்போதே மாற்றிக்கொண்டார்கள். அதே கூட்டத்தில் மீதமான பணம் வசூலிக்கப் பெற்ற ஜில்லாக்களின் கிளைச்சங்கப் பிரதிநிதிகளடங்கிய ஒரு கமிட்டியாரால் பரிபாலிக்கப் பெற்று வரவேண்டும் என்று தீர்மானிக்கப் பெற்றது.

ஆகவே அத்தொகையைச் சரிவரப் பரிபாலித்துப் பொது நன்மைக்கு உபயோகப்படுத்த வேண்டியது கோவை, சேலம் ஜில்லாச் செங்குந்தர்களின் பொறுப்பே யாகும். அன்றியும் அந்நிதி சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விபரமும் சிறப்பாக நமது மித்திரனிலும் பொதுவாகப் பிற பத்திரிகைகளிலும் பிரசுரஞ் செய்யவேண்டியது மிகவும் அவசியமாகின்றது. ஆனால் இன்று வரை அத்தொகை யாரிடமிருக்கிறதென்றும், அதனால் வரும் வட்டி மூல தொகையைப் பெருக்கிக் கொண்டு வருகிறதோ? அல்லது வேறு எவ்விதம் உபயோகிக்கப்பட்டு வருகிறதோ? அல்லது வட்டியின்றி யாரிடமாவது மூலைக்கு முட்டாய்க் கிடக்கிறதோ? மேற்கூறிய கமிட்டி அங்கத்தினர்கள்

யாரோ? கமிட்டிக் கூட்டம் எங்கெங்கு எவ்வெப்போது கூடிற்றோ? அக்கமிட்டியின் தலைவர் யாரோ? காரியதரிசி யாரோ? என்ற விஷயங்களைப்பற்றியும் அறிந்துகொள்ள சர்வ சுதந்தரமுமுள்ள சகோதரர்கள் ஒரு சிறிதும் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். நமது மித்திரனில் இந்தத் தொகையின் பரிபாலனத்தைப்பற்றி மாத்திரம் இரண்டொருதடவை யாரோ விசாரித்திருந்தார்கள். அதற்குப் பதிலும் அதில் வரக்காணோம். யாரைக் கேட்பினும் விபரந் தெரியவில்லை. இது விஷயமாக நமது தலைச்சங்கத்தைக் கேட்டாலோ அவர்களுக்கும் விபரந் தெரியவில்லை. பின்னர் நடந்த மகாநாடுகளிலும் இதைப்பற்றிப் பிரஸ்தாபமே ஒன்றுமில்லை. அந்தோ பரிதாபம்! இதை நோக்கின் நாம் இன்னும் உறங்குகிறோம் என்னலாமா? அல்லது விழிப்படைந்தோம் என்னலாமா? கோவை, சேலம் ஜில்லா ஏழைச் செங்குந்த மாணவர்களுக்கு ஷை நிதியிலிருந்து ஒரு பைசாவும் கொடுப்பதில்லை யென்றும், சென்னையிலுள்ள கல்விநிதியிலிருந்தே அச்சில்லா மாணவர்கள் உபகாரச் சம்பளம் பெற்று வருகிறார்களென்றும் விசாரித்துப் பார்த்ததில் தெரியவருகிறது.

வெகு ஜனங்கள் கூடிய கூட்டத்தில் அப்பணம் வசூல் செய்யப்பெற்ற ஜில்லாவாசிகளிடமே இருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்ற பிறகு அதைப்பற்றித் தலைச் சங்கத்தாரைக் கேட்பதில் யாதொரு பயனுமில்லை. உறங்கிக் கிடக்கும் கொங்கு நாட்டுச் செங்குந்தர்களே! இப்போதாவது உறக்கத்தினின்று விழித்தெழுந்து அத்தொகை இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து அதைப் பரிபாலிக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அல்லது பலரிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்தை ஒருவர் பணமாக்கினாலும் ஆக்குங்கள்.

இதே சமயத்தில் வேறு ஜில்லாக்கள் சம்பந்தமான இரண்டொரு விஷயங்களையும் பொது ஜனங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். காஞ்சீபுரத்தில் இரண்டாவது மகாநாடு கூடுவதற்குத் தேவையான பணத்தை வசூல்செய்வாரின்றி இரண்டு வருஷகாலம் கழிந்தன. பின்னர்த் தலைச் சங்கத்தாரால் அனுப்பப்பெற்ற பிரதிநிதிகள் ஊரூராகச் சென்று நிரம்பக் கஷ்டப்பட்டுப்பணம் வசூலித்தார்கள். அதைக் கொண்டு மகாநாடு நிறைவேற்றப்பெற்றது. அதில் மீதமானதொகையைத் 'தலைச்சங்கத்திற்கே அனுப்பிவிடுகிறோம்' என்று மகாநாட்டுப் பந்தரில் தலைவர் வாக்களித்தும் இன்னும் அத்தொகை இருக்குமிடம் தெரியவில்லை. தலைச்சங்கத்திற்கு வந்து சேரவில்லை என்று மாத்திரம் எனக்குத் தெரியும்.

பழநிப்பதியில் நம்மவர்களுக்குரிய மடங்கள் மூன்று இருப்பதாகத் தெரிகிறது. அவை அடிவாரத்திலுள்ள செங்குந்தர் தண்ணீர்ப் பந்தல் மடம் 1; இம்மடத்திற்கு எதிர்வாடையிலுள்ள செங்குந்தர் மடம் 2; பழநி டவுனிலுள்ள மடம் 3. இம்மூன்று மடங்களின் வரலாறுகளைக் கூறப்புகின் மித்திரன் இடங்கொடான். ஆயினும் அடிவாரத்திலுள்ள 2-வது நெம்பர் மடம் பூராவும் நம்முடையதே. அதிலுள்ள கிணறு திருப்பூர் திரு. அருணப்ப முதலியார் அவர்களால் எடுக்கப்பெற்றது. அம்மடத்துப் பட்டயம் ஒன்று அதிலுள்ள முத்துக்குமார பண்டாரத்தினிடம் இருக்கிறது. அப்பண்டார சந்நிதி அங்குச் செல்லும் செங்குந்தர்களுக்கு யாதொரு சௌகர்யமும் செல்வதில்லை யென்றும், நம்மவர்களுக்கே இடமில்லாத போதும் பிற இனத்தவர்க்கு வேண்டிய இட சௌகர்யங்கள் செய்து கொடுக்கிறாரென்றும் சொல்லிப் பல விதமான புகார் அவமீது சொல்லக் கேட்கிறேன், இதனால் அப் பண்டாரம் நம்முடைய மடத்தைத் தம்முடைய தாக்கிக் கொள்வதற்கான வேலை செய்து வருகிறாரென்று தோன்றுகிறது. பழநிக்குப் போகும் பிரமுகர்களாவது, பழநியிலுள்ள சகோதரர்களாவது ஒற்றுமை உணர்ச்சியோடு இவ்விஷயத்தைக் கவனித்தார்களா! உள்ளூரால் பரிபாலிக்கப் பெற்று வருவதாகச் சொல்லப்படும் தண்ணீர்ப் பந்தல் மடவிஷயமே தகராறி விருக்கிறதென்றால் இம் மடத்தைக் கவனிப்பார் யார்? சமீபத்தில் மதுரைச் செங்குந்தர்கள் இந்த இரண்டா நெம்பர் மடத்தின் ஒருபாகத்தைக் கட்டி அதாவது தாங்கள் அதைக் கட்டினதாக யாதொரு ரிகார்டுகளின்றியும், கட்டி நம்மவர்களுக்குச் சரியான உத்தரவு சொல்லாத ஷை பண்டாரத்தினிடமே விட்டுவைத்திருக்கிறார்கள். பெருந் தொகை செலவு செய்த மதுரைச் செங்குந்தர்கள் அதிலிருக்கும் ஷை ஆசாமியிடம் குடிக்கூலி முதலிய யாதாமொரு அக்ரிமெண்டாவது எழுதி வாங்கினார்களா? இல்லவே இல்லை. இவை யாவும் நம் முறக்கத்தைக் காட்டுகின்றனவா அல்லவா? நீங்களே சொல்லுங்கள்.

# உறக்கம் இழுக்கம் விளக்கும்
# ஊக்கம் இழுக்கம் களையும்



# "அண்டத்திலுள்ளது பிண்டத்தில்"

[S. சுந்தரன் அவர்கள், அசனம்மாபேட்டை]

"அண்டத்திலுள்ளது பிண்டத்தில்" என்பது பண்டைக் காலந் தொட்டு நந்தண்டமிழ் நாட்டில் வழங்கிவரும் ஒரு பொருள் பொதிந்த பொன் மொழியாகும்.

அண்டமென்பது, விரிந்து பரந்த வெளியுலகம். பிண்ட மென்பது, உடல். விரிந்து பரந்த வெளியுலகத்துள்ள பொருள்கள் யாவும், குறுகித் திரண்டு, கருவினுருவாகிவந்து வயதளவிலே வளர்ந்து வரும்படியான உடலிலும் உண்டென்பதே மேற்குறித்த பொன் மொழியின் பொருளாகும்.

உலகம் மண், நீர், தீ, கால், வெளி என்னும் ஐம்பெரும் பூதங்களாலாயது. உடலும் அவ்வைந்திறும் பூதங்களாலேயே ஆக்கப்பட்டுள்ளது. உடலந்தாங்கிய உயிர்களனைத்தும் உலகத்து வாழ்தற்கு ஒரு சிறந்த இலக்கு (குறிக்கோள்) இருந்தே தீரவேண்டும். இன்றேல், உயிர் உடலில் தங்கியிராது. அவ்விலக்கு தான் யாதாயிருக்குமெனநுணுகி நோக்குமிடத்து இன்பம் என்று சொல்லாமலே விளங்கும்.

அவ்வின்பந்தான் எத்துணைப் பகுதியையுடையதெனின், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என ஐம்பகுதியை யுடைய தென்க. இவ்வைவகைத்தாகிய வின்பத்தைத் துய்ப்பதற்கே, மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம் பொறிகள் உடலில் அமைந்துள்ளன. இவ்வைந்தான வின்பத்தைத் துய்ப்பதற்கே உலகில் வாழும் ஒவ்வொரு மகனும் படாத பாடெல்லாம் படுகின்றான்; உறாத துயரமெல்லாம் உறுகின்றான். என்றாலும் எல்லோருமே இவ்வைந்தான வின்பத்தையும் ஐம்பொறிகளும் ஆரத் துய்க்கின்றார்களா வென்று பார்க்குமிடத்து அது தான் இல்லை.

இவ்வின்பங்களுக்குப் புறம்பாய் இவற்றோடு ஒரு சிறு தொடர்புடைத்தாய், உண்ணல், உறங்கல் என்னும் இவ்விரண் டின்பத்தைத் தவிர உலகத்து வேறோரின்பம் உண்டென்பதையு மறியாத மக்கள் பலருளர். இவர்களொரு சாரார். மற்றொரு சாரார், உண்ணல், உறங்கல் என்னும் இவற்றோடு மகளிரை மருவுதலுஞ் செய்கின்றனர் என்றாலும்,

"மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப் படுவார்"

என்றபடி, எங்கோ ஒரு சிலரை யன்றி மற்றையோர் மகளிரிடமிருந் தெய்தக் கூடிய வின்ப முழுவதையும் எய்துகின்றார்களில்லை. எதனால் எய்துவதில்லை யெனின்,

"காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு
பட்டதே யின்பம்"

என்றாராகலின். ஒத்த பண்பும், ஒத்த அழகும் ஒத்த கல்வியும் உடைய ஒருவனும் ஒருத்தியும் தம்மிற் காதலித்துக் கூடுதலின்றான் முழு இன்பம் உண்டாகும். அவ்வாறு ஒத்த ஒருத்தியோடு கூடி இன்பந் துய்த்த ஒருவன்,

"கற்கண்டு வெற்பின் மதுக்கொண்டல்
[பெய்து கரைந்தொழுகி
நிற்கின்ற வாறொக்கு நீக்கற் றிரண்டற்ற
[நேச மொடு
... ...................................
பொற்கென்ற பூண்முலை யாளைக் கலந்து
[புணர்ந்ததுவே"

என்று கூறுகின்றான். அதாவது, "கற்கண்டு மலையிலே, தேன்மழையை மேகங்கள் பொழிய அவ்விரண்டும் சேர்ந்து கரைந்து ஒருவன் வாயிலொழுகினால் எவ்வாறிருக்குமோ அதனைப் போன்றிருந்தது யான் எனது காதலியைக் கலந்து புணர்ந்ததனா லுண்டாய வின்பம்' என்பதாகும்.

இவ்வாறன்றித் தங்களுக்குள்ளே காதலென்பதின்றி, தாய் தந்தையர்களாலும் மற்றையோராலும் கூட்டிவைக்கப்பட்ட (மணமுடிக்கப்பட்ட) பொருத்தமற்ற இருவர்க்குள் இன்பமென்பது எங்கிருந்து உண்டாகும்? அஃது,

"இருட்டறையில் ஏதிற்பிணந் தழீயற்று"

என்பது போலல்லவா விருக்கும்? இவை நிற்க.

இனி, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் இவ்வைந் தின்பப் பொருள்களும், அண்டத்திலுள்ளதையும் பிண்டத்திலுள்ளதையுங் காண்போம்.

"தனித்தனி முக்கனி பிழிந்து வடித்
[தொன்றாய்க் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியு மிகக்
[கலந்தே
இனித்த நறுந்தேன் பெய்து இளஞ் சூட்டி
[னிறக்கி
எடுத்திடு சுவைக் கட்டி"

போல்வன அண்டத்திற் காணும் சுவையுடைப் பொருள்கள். கற்றார்க்கும் கல்லாதார்க்கும் களிப்பருளுங் களிப்பாய் விண்ணிலெழுந்து தண்ணென வொளிரும் வெண்ணிலாவும், விண்டுரைக்கவும் அறிதற்கும் அரியதாய், விரிந்து நின்ற வான வெளியும், அவ்விரிந்த வான வெளியிலே நில்லாது சுழன்றோடித் திரியும் பல்லாயிரங்கோடி யண்டங்களாகிய விண் மீன்களும், நீலத்திரைக்கடலும், அந் நீலத்திரைக் கடலிற் காலை நேரத்திற் றோன்றுங் கதிரவனும், விண்ணையிடிக்குந் தலையிமயமே முதலா, அளக்கலாகா வளவும் பொருளும் துளக்கலாகா நிலையுந் தோற்றமும் வறப்பினும் வளந்தரும் வண்மையும் வாய்ந்த

மலைகள் பலவும் பச்சைப் பசே லெனப் பசந்து தோன்றும் நறும் பொழில் பலவும், மலரும், நீல வானும், மாதரார் முகங்களும் இன்னோரன்ன பிறவுங் காட்சிப் பொருள்களாம்.

அனிச்சமும், அன்னத்தின் தூவியும் பூவா லியன்ற பொங்கெழி லமளியும், வெண்ணிலாவின் தண்ணிய கதிர்களும், வேனிற்காலத்து வீசு தென்றலும், ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரும் போன்றன ஊற்றின்பம் பயக்கும் பொருள்களாம். குழலும், யாழும், குயிற்கூவலும் சேணின்றிழிதரு மருவியின் இழுமெனு மொலியும் பிறவும் ஓசைப் பொருள்களாகும். நாளமும், நல்ல வகிலினின் றெழும் புகையும், மான்மதச்சாந்தமும், மல்லிகை, முல்லை, மருக்கொழுந்து போன்ற மலர்களும் நாற்றப் பொருள்களாம். ஈண்டு ஐம் பொருள்களையும் ஒருவாறு சுருக்கிக்கூறப்பட்டது. ஒவ்வொன்றனையும் விரிக்கிற் பெருகும்.

இவ்வாறு ஐந்தாகிய பொருள்களைத் துய்ப்பதற்குரிய தொழில்களைக் காண்டல், கேட்டல், உண்டல், உயிர்த்தல், உற்றறிதல் என்பர். மக்கள் இன்பந் துய்த்தற்குச் செய்யுந் தொழில்கள் இவ்வைந்தேயாம்.

இவ்வைந் தின்பங்களையும் ஒருவன் அண்டத்திலெய்த வேண்டுமென்றால், ஐந்தனையும் ஒருசேர ஒரே காலத்தில், ஒரேயிடத்தில் எய்துதல் அருமையினும் அருமை. ஆனால் பிண்டத்திலோ (உடல்) வென்றால் ஐந்தனையும், ஒரு சேர, ஒருங்கே, ஒரே காலத்தில் ஐம்புலன்களும், ஆரத் துய்த்தல் கூடும். என்றால் வியப்படைவீர்களல்லவா? வியப் பொன்று மில்லை. வாருங்கள்; எப்பாலவரு மியைந்தேற்றுக்கொள்ளும்படியான முப்பாலுலைத் தட்டித் திறவுங்கள். காமத்துப் பாலை யெடுத்துக்கொள்ளுங்கள்.

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியு
[மைம்புலன்
ஒண்டொடி கண்ணே யுள"

என்னும் குறளைக் காண்பீர்கள். அதன் பொருளென்ன? கண்ணாற் கண்டும் காதாற் கேட்டும், வாயாலுண்டும், மூக்கா லுயிர்த்தும், மெய்யாலுற்றறிந்தும் எய்தும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தான வின்பங்களும் ஒண்டொடியின் பிண்ட மொன்றிலேயே யுண்டென்பதல்லவா?

இனி, இவ்வைந்தான வின்பங்களையும் ஒண்டொடியின் பிண்ட மொன்றிலேயே எவ்வாறு எய்த முடியுமெனின், சிலப்பதிகாரத்தை யெடுத்துக்கொள்ளுங்கள். நாகலோகத்துப் போகமும் விண்ணுலகத்துப் புகழும் மன்னியதாகிய புகார் நகரத்துக் கைம்மாறு கருதாக் கடப்பாடுடைய மாரி போன்று வரையாது கொடுக்கும் வள்ளலாகிய மாநாய்கன் குலக்கொம்பர் கண்ணகியோடு, கலந்து மகிழ்ந்த ஏசாச் சிறப்பி னிசை விளங்கு பெருங்குடி மாசாத்து வாணிகன் மகனாகிய கோவலன் கூறும்,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே"

என்னும் மொழிகளைக் காண்பீர்கள். கண்ணுக்கினிமை பயத்தலால் மாசறவோடிய பொன்னை யொப்பாய்; ஊற்றின் இன்பத்தால் வலம்புரி முத்தை யொப்பாய் (தண்ணெனுந்தன்மை); உயிர்ப்பின் இனிமையாற் குற்றமற்ற விரையை யொப்பாய்; சுவையினினிமையாற் கரும்பை யொப்பாய்; இனிய மொழியை யுடைமையாற் றேனை யொப்பாய் என்பது இதன் பொருளாகும்.

கண்ணுக்கினிமை பயத்தலில் மாசறு பொன்னே போல்வதன்றி, ஓவியத் துறை கைபோய ஒருவனால் தீட்டப் பெற்ற ஒப்பற்ற படிமையும் போல்வாய் என்பதையும் சுவை யினிமையாற் கரும்பே போல்வ தன்றி, உண்டார் உயிரை நெடுநாளைக்கு நிலை பெறுத்துவதான அமுதமும் போல்வாய், என்பதையும் விளக்க "அரும் பெற்ற பாவாய் ஆருயிர் மருந்தே" என்று கூறுகின்றான். மேலும், மலையிடைப் பிறக்கும் மணிகுழையாமையின் அதிற் பிறவாத மணியே யென்பேனோ? அலையிடைப் பிறக்கும் அமிர்தத்திற்கு இவ்வடி வின்மையின் அதனிற் பிறவாத அமுதே யென்பேனோ? யாழ்கட்கின்னா தாகலின் அதனிடைப் பிறவாத இசையே யென்பேனோ வென்பதை,

"பெருங்குடி வாணிகன் பெருமடமகளே
[நின்னை
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலை யிடைப் பிறவா வமுதே யென்கோ
யாழிடைப் பிறவா விசையே யென்கோ"

என்று கூறுகின்றான். மாவினவிர்தளிர் புரையு மேனியும் அவர் தொறும் பொன்னுரை கடுக்கும் திதலையு முடைய ஒரு ஒண்டொடியின் உடம்பு கட்கினிமை பயத்தலால் மாசறு பொன்னே போல்வதில் வியப்பென்னை? தூயதண்ணீரிற் றோய்ந்து தூயகாற்றிலும்சூரியவொளியிலும் மூழ்கித் தூய உணவுண்டு தூய்மையேபயிலும் ஒரு ஒண்டொடியின் உடம்பும், உயிர்ப்பும், வலம்புரி முத்தே போறலும் காசறு விரையே போறலும் இயற்கையே யன்றோ? "பணிமொழி வாலெயி றூறிய நீர் பாலொடு தேன் கலந்தற்றே" என தெய்வப் பாவலரே திருவாய் மலர்ந்தருளிப் போயினர். காதலி யுரைக்கும் கனிந்த சொற்கள் குழலும், யாழும், அமிழ்தும்; குழைத்தன்ன மழலைக் கிளவியாகலின் அவை காதலருக்குத் தேனெனப் பாகெனத் தித்திப்பது மியல்பே.

இத்தகைய மழலைக் கிளவிகள் பிறத்தற் கிடமாகிய வாயிலுள்ள வாலெயிற்றினின்று ஊறும் நீர், வானவ ரமுதத்தினும் சிறந்ததாய் எற்புத்துளை தொறு மினிக்கச் செய்யுமென்பது வற்புடையதே யன்றோ?

இதுகாறுங் கூறியவற்றால் அண்டத்திலுள்ள ஐம்பூதங்களும், ஐஞ்சுவைப் பொருள்களும், மக்களுடம்பிலும் ஒண்டொடியின் பிண்டத்திலும் உண்டென்பது உண்மையே யன்றோ?






# ஐயோ பாவம்!

"அகக்கண்"

ஒண்கதிரும் தண்மதியும் வாதாடும் சமயம். மல்லிகை மொட்டுகள் மெல்லவே வாய் திறந்து நறுமண வாழ்த்துக் கூறி வெண்ணிலவை வரவேற்றன. இளந்தென்றல் தளர்நடை நடந்தது. வண்டுகளின் ரீங்காரமும் ஏனைய சிறு பிராணிகளின் ஒலியும் செவிக்கு விருந்தூட்டின. மரங்களிலிருந்த வித விதமான கூடுகளில் பேடைகள் தமது துணையின் வரவு நோக்கி ஆவலுடன் கத்திக்கொண்டு காத்திருந்தன. சாந்தாவின் வீட்டுத் தோட்டம் இன்ப நிலையமாய் விளங்கியது.

ஒரு மூலையில், தழைத்துச் செழித்த புங்க மர நிழலி லமைந்திருந்த மேடையின்மீது கால்களை மடக்கிக்கொண்டு ஒரு புறம் சாய்ந்திருந்தாள் சாந்தா. அவளுக் கெதிரே ஒரு அழகிய தட்டில் பலவித மலர்கள் குவிந்திருந்தன. அருகே ஒரு சிறு பட்டை வாழைநாரும் ஒரு கிண்ணத்தில் சிறிது ஜலமும் இருந்தன. அவள் தட்டிலிருந்த மலர்களினின்றும் சிறந்தவற்றை ஆய்ந்தாய்ந்து எடுத்து அழகுறத் தொடுத்துக் கொண்டிருந்தாள். அவள் வாயினின்றும் உள்ள நெகிழ்ச்சியைக் காட்டும் தொனி பிறந்தது.

"எப்போ வருவாரோ, எந்தன் கலி தீர" என்று ஆர்வமும் அன்பும் தோய்ந்த குரலில் பாட ஆரம்பித்தாள். அப்பாட்டு முடிவதற்குள் மாலையும் முடிவை நெருங்கிற்று. பாட்டை முடித்தவண்ணம் இடது கைப்புறம் மெல்லத் திரும்பிப் பார்த்தாள். தான் எதிர்பார்த்ததைக் காணாமல் ஆயாசத்துடன் திரும்பினாள். ஏமாற்றமும் சந்தேகமும் அவள் முகத்தில் குடி புகுந்தன: பழுத்து முதிர்ந்து சாரம் நிரம்பி யிருக்கும் பழம்போல் கண்கள் நீரொடு விம்மின. ஒருவாறு தேற்றிக்கொண்டு மாலையை முடிக்கலானாள். மாலையும் முடிந்துவிட்டது. அதைத் தன் கழுத்தில் சூடிப் பார்த்தாள். உடனே அவளது கண்கள் 'இனி பொறுக்க மாட்டோ'மென நீரைச் சொரிந்தன. அவள் வாய், "இன்னம் பாராமுகமேனோ" எனத் தேம்பித் திணறிப் பாட ஆரம்பித்தது. அப்படியே பின்புறம் சாய்ந்தாள்.

அடுத்த க்ஷணமே துள்ளி எழுந்தாள். "விடுங்கள், விடுங்கள்; போதும் உங்கள் ஆட்டம்" என்று கூறிக்கொண்டே தன் கண்களை மூடிக்கொண்டிருந்த கைகளை விலக்கப் பார்த்தாள். ஆனால் அக்கைகள் சிறிதும் நகராது பின்னும் பலமாக அவள் முகத்தைப் பிடித்துப் பின்னாலிருந்த வாயினிடம் கொண்டுபோயின. கஷ்டப்பட்டு அவற்றை விலக்கிவிட்டுச் சாந்தா வெற்றியோடு கீழே குதித்தாள். ஆனால் குதித்த உடனே அவள் வெற்றி எங்கோ பறந்தோடியது. அவள் தலை தோல்வியுற்றதே போல் குனிந்துகொண்டது. இடது கையை மேடையின் மீது ஊன்றிய வண்ணம் அவள் நாணிக் கோணி நின்றாள்.

எதிரே இருந்த உருவம் புன்னகையுடனே அவளை அணுகியது. "நன்றாகச் சிரித்தீர்கள்! இந்த ஆண்களுக்கே இதுதான் வழக்கம்! மனத்தைக் குழப்பி வாட்டுவதில் உங்களுக்கு என்ன வருமோ தெரியவில்லை." என்று நாணமும் போலிக் கோபமும் ததும்புங் குரலில் பேசினாள் சாந்தா.

"இவ்வளவு கோபமா! பெயர் மட்டும் வெகு சாந்தமா யிருக்கிறதே!" என்று கேலி செய்தான் மோகனன்.

"கோபமா? நீங்கள் ஒரு பெண்ணாய்ப் பிறந்து காத்துக் காத்து, ஏங்கி ஏங்கி அலுப்பு வித்துப் பார்த்தால் தெரியும்."

"அட பைத்தியமே! உனக்குக் கண்ணில்லை! எத்தனை நாழியாக நான் உன் பின்னால் நின்றிருந்தேன்."

"ஆமாம், புளுகக் கூடக் கற்றுக்கொண்டீர் போலிருக்கிறது!"

"இல்லை சாந்தா, உண்மைதான். அரைமணி நேரத்துக்குமேலிருக்கும்; அதோ அந்த மரத்தின் பின்னால்தான் ஒளிந்திருந்து உன் வேடிக்கையை யெல்லாம் பார்த்துக்கொண் டிருந்தேன்."

"நல்ல வேலை செய்தீர்! ஒளிந்துநின்று நான் வருந்தப் பார்த்ததில் எவ்வளவு லாபம் சம்பாதித்தீர்?"

"இதோ, இவ்வளவும் அதன் பலன்தான். அதுவும் உங்கள் மாமியார் புண்ணியத்தால் கிடைத்த................"

"சும்மா விளையாடாதீர். மாமியாரும் மருமகளும்!"

"உண்மையாகச் சொல். சற்று முன்பு இங்கு வந்தவள் உன் மாமியா, அல்லவா?"

"இப்படி யெல்லாம் விளையாடாதீர்கள். வீணாக என் மனத்தைக் கலக்க வேண்டாம்."

"இல்லை, இல்லை; இந்தா. கோபித்துக்கொள்ளாமல் இப்படி வந்து உட்கார்."

நாணத்தோடும் சந்தோஷத்தோடும் சாந்தா தனது ஆருயிர்க் காதலன் அருகில் வந்து உட்கார்ந்தாள். அவள் கரங்களை மெல்லெனப் பற்றிய வண்ணம் மோகனன் அவளோடு வார்த்தையாடலானான்.

"சாந்தா, உனக்கேன் மாமியா ரென்றால் இப்படிக் கோபம் வருகிறது?"

"மாமியாரென்று தங்களைப் பெற்ற தாயைச் சொன்னால் என் உள்ளளங் களிக்கும்; யார் யாரையோ ஏன் சொல்லுகிறீர்கள்?"

"அவளுடைய மகன்தானே உன்னை மணந்துகொண்டான்."

"மணமுமாயிற்று, பிணமுமாயிற்று. யார் கண்டது அவனை?"

"தாலி கட்டினவன் வேறொருவனாக என்னையெப்படி நீ காதலிக்கலாம்?"

"தாலியைத்தான் யார் கண்டது? அதென்னவோ என் தாய் சொல்லுவதைத்தான் கேட்டிருக்கிறேன். எப்பொழுதோ எவனோ கட்டினானாம். ஒரு வருஷத்திற்குள் அதை நான் அறுத்தெறிந்துவிட்டேனாம்."

"பார்த்தனையா? அவன்தான் உனக்குக் கணவன். அவனை நீ கனவிலும் மறக்கலாகாது."

"அதென்னவோ அந்த நியாயமெல்லாம் எனக்குத் தெரியாது. மூஞ்சியும் தெரியாது, மோரையும் தெரியாது; கனவில் கூடக் கண்டதில்லை. அவன்தான் கணவனும்."

"பின்னை யார்தான் உன் கணவன்?"

"எனக்கு மனம் என்பது ஏற்பட்டது முதல் அதைக் கொள்ளைகொண்ட உத்தமர் தான்."

"சரி, கிடக்கட்டும்; இந்த மாலை எதற்கு?"

"அது என் இன்னுயிர்க் காதலருக்கு."

"இன்னுயிர்க் காதலருக்கா? அவர்தான் உன்னிடம் விடைபெற்றுக்கொண்டு எத்தனையோ வருஷங்க ளாயினவே?"

"இப்படிக்கூடவா விளையாடுவார்கள்? என் மனதை இப்படிப் புண்படுத்துவது தர்மமல்ல."

"பின்னை உன் காதலர் எங்கே?"

"அவர் என் கண்ணில் களிந்திருக்கிறார்; என் மனதில் மகிழ்ந்து வாழ்கிறார்."

"அதென்னவோ எனக்கொன்றும் புரியவில்லை. ஏதோ உன் காதலருக்கு அந்த மாலையைச் சூட்டு பார்ப்போம்."

சாந்தாவின் முகம் அன்பாற் கனிந்தது; அவள் அதரம் துடித்தது; கண்களில் நீர் மோதிற்று. ஏதோ ஒரு தெய்விக சக்தியின் வயப்பட்டவள்போல் அவள் மெய்ம்மறந்து தனக்கு எதிரில் நின்ற மோகனன் கழுத்தில் தன் கையிலிருந்த மாலையைச் சூட்டிவிட்டு அவன் தோள்மீது சாய்ந்தாள். "கண்ணே, கருமணியே, காத லுருவமே, உன்னோடு வேடிக்கையாக விளையாடாவிட்டாலும் எனக்குத் திருப்தியில்லை; உன் பைத்தியக்கார மனத்தைக் கண்டாலும் என்னால் சகிக்க முடியவில்லை. சாந்தா, என் இதயத்தைப் பிளந்து பார். அதிலே என் ஆருயிர்க் காதலி சாந்தா அன்பு ததும்பப் புன்னகை புரிந்து நிற்பதை........"

"சீச்சீ! எழுந்திரு, எழுந்திரு! முண்டெப் பொண்ணுக்கு என்னடி இவ்வள நாழி தூக்கம்? எழுந்து உள்ளே ஓடடி. விழிச்சி எழுந்து வர்ரவாளுக் கெல்லாம் தரிசனந் தாரையோ!"

ஐயோ பாவம்! சாந்தா கண்ணை நிமிட்டிக்கொண்டே எழுந்து விழுந்தடித்துக் கொண்டு உள்ளே ஓடினாள்.






உபாத்: பிள்ளைகளே! 'பொறுமை கடலினும் பெரிது; பொறுத்தவர் பூமி யாள்வார்!' என்பனபோன்ற முதுமொழிகளை ஆழ்ந்து யோசியுங்கள். பொறுமையைக் கடைப்பிடிக்கின் எத்தகைய நிலையிலும் மேன்மை யுறுதல் திண்ணமாகும். ஆதலால் பொறுமைப் பூஷணத்தைப் பூணுவதே நமது முதல் நோக்கமாயிருக்கவேண்டும்.

ஒரு மாணவன்: சார், அதற்குதாரணமாக ஏதாவது..............

உபா: சீ! மடையா! என்ன அவசரம்! கொஞ்சமாவது பொறுமை யிருக்கிறதா! உட்காரு, கழுதையே.

* * *

கணவன்: மெய்யாகத்தான் நீ ரொம்பவும் அழகி.

மனைவி: அதனால்தான் இவ்வளவு ஆசையாக இத்தனை நகை செய்து போட்டுவிட்டீரோ?

கணவன்: யோசியாமல் பேசாதே; அழகுக் கழகு செய்வா ருண்டா!

* * *

குருவி: ருதுக்கள் எத்தனை சொல் பார்ப்போம்.

காக்கா: ஆறு.

குருவி: என்னென்ன சொல் பார்ப்போம்.

காக்கா: ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு, அஞ்சி, ஆறு!

* * *

உபாத்தியாயர் இராமாயணக் கதையைச் சொல்லும்போது இராவணனை வர்ணித்துக் கொண்டே வந்தார்: "இராவணனுக்குப் பத்துத் தலைகளுண்டு இருபது கைகளுண்டு................ "டே கோபு, என்ன முழிக்கிறே"

கோபு: ஒன்றுமில்லை சார், ஒரே ஒரு சந்தேகம்.

உபா: என்னடா அது?

கோபு: இராவணன் எப்படி ஸார் ஜிப்பா போட்டுக்கொள்வான்?

* * *

புது எஜமான்: சரி, நீ முன்பு வேலை செய்த இடத்தில் என்ன சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தாய்?

புது வேலைக்காரன்: மாதம் 25 ரூபாய்.

பு. எஜ: அதற்கு என்ன அத்தாக்ஷி?

பு. வே: உங்களிடம் அதைவிட அதிகமாகக் கேட்பதுதான்.

* * *

ஒரு வீரவைஷ்ணவர் வீட்டுத் திண்ணையில் ஒரு சைவர் போய் உட்கார்ந்தார். அவர் எழுந்து வந்த உடனே அந்த இடத்தில் வீட்டுக்காரி சாணி கொண்டு மெழுகினாள். அதைக் கண்ட சைவர் "வீடெல்லாம் சிவ சிவ" என்று உரக்கக் கத்தினார்.

ஐயோ பாவம்! எங்கிருந்து சாணி தேடினாளோ?

* * *

நண்பன்: ஏன் இப்படிக் குடித்துத் தொலைகிறாய்?

குடியன்: மறந்திருப்பதற்காகத் தான்.

நண்பன்: எதை மறப்பதற்காக?

குடியன்: எதை என்பது கவனமில்லை.

* * *

தந்தை: என்ன நாகரிகமம்மா இது? இந்த வயதில் இந்த கௌனெல்லாம் தகுமா உனக்கு?

மகள்: சற்று இருங்கள் வருகிறேன்; அம்பட்டன் காத்துக்கொண் டிருக்கிறான்.

* * *

சிறுவன்: அம்மா, ரங்கன் வீட்டில் என்ன விசேஷம்? என்னென்னவோ பலகாரமெல்லாம் செய்கிறார்களே?

தாய்: அவன் அப்பாவுக்குத் திதி.

சிறுவன்: என் அப்பாவுக்கு எப்போ திதி?

* * *

கணவன்: காதலென்றால் என்னவென்று நீ இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை.

மனைவி: எல்லாம் தெரியும்: மனைவியின் சாதலுக்குப் பின் கணவன் மனத்தில் உதிப்பது தான்.

* * *

காதலன்: கண்ணே, உன்னைப் பிரிந்தால் உயிர் பிரியும்.

காதலி: காதலரே, உயிர் பிரிந்தால் உங்களைப் பிரிவேன்.

# புருஷோத்தமன் திருமணம்

"தங்கம்"

பாப்பாரப்பட்டி
28-4-33.

எனதுள்ளத்துறையும் சரோஜா,

உன்னை விட்டு வந்து சுமார் ஒரு வார மாகியும் கடித மொன்றும் எழுத முடியாமைக்கு வருந்துகிறேன். அது காரணமாக உனக்கு நானளித்த ஏமாற்றத்தையும் மனக்கஷ்டத்தையும் நினைக்கும் பொழுது என் வருத்தம் பன்மடங்காகிறது. ஆயினும், நீயே என் உள்ள முழுதும் நிறைந்திருக்கிறு யென்பதை நீ உணர்வாயாதலால் கடிதம் எழுதாததன் காரணம் நான் உன்னை மறந்திருந்ததாளென எண்ணமாட்டாயென்றும், அதனால் நான் அனுமானிக்கும் அவ்வளவு ஏமாற்றத்தை யடைந்திருக்க மாட்டாயென்றும் நம்புகிறேன். இங்கு வந்த சில நாட்களாக வயிற்றுப் பாட்டைப் பொறுத்த அலுவல்கள் சிலவற்றில் அழுந்திக் கிடந்ததே தவக்கத்துக்குக் காரணமாகும்.

பரீக்ஷையைப்பற்றி அங்கிருந்து வரும்போதே உன்னிடம் சொல்லிவிட்டு வந்தேனாகையால் அதைப்பற்றிக் கவலை யொன்றுமில்லை. முதல் வகுப்பில் தேறுவதிலொரு ஆனந்த மிருக்குமாயினும் பரீக்ஷைக்கு முன் சில தினங்கள் வீண் தொந்தரவுகளில் தலையிட்டுக் கிடந்ததால் அத்தகைய ஆனந்தத்துக்கு இடமிருக்குமோ என ஐயுறுகிறேன். ஆயினும், இக்காலத்தில் பரீக்ஷையிற் கிடைக்கும் பட்ட மொன்றினாலேயே பெரிய உத்தியோகங்களும் அந்தஸ்தும் கிடைக்கின்றனவெனக் கூறுவதற்கில்லை. மேலும், நான் ஆடம்பர வாழ்க்கையில் விருப்பமற்றவனென்பதையும் அன்பு கனிந்த அமைதியான இல்வாழ்க்கையே எனது கோரிக்கை என்பதையும் நீ அறிவாய். அத்தகைய நல்வாழ்க்கைக்கேற்ற துணையாக நாடியிருக்கும் நீயும் அதே மனநிலை பெற்றிருப்பது எனது பாக்கியமே யாகும். எனது ஆருயிர்ச் சரோஜா எனக்குச் சொந்தமா யிருக்கிற வரையில் எத்தகைய அந்தஸ்திலும் என் வாழ்க்கை இன்ப நிலையமாகவே திகழும் என்பதி லையமில்லை.

என் தந்தையும் மணப் பேச்சை யாரம்பித்திருப்பதால் அத்தகைய நிலைமையையும் சீக்கிரத்திலேயே எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம் உனது அன்பைப் பெற்ற
பாக்கியவானான புருஷோத்தமன்.

திருச்சி
30-4-33.

ஆருயிரே,

தாங்கள் நெடுநாள் கடிதமெழுதாத குற்றத்தினின்றும் தப்பித்துக்கொள்வதற்குச் செய்யும் முயற்சி வெகு வேடிக்கையாகத்தா னிருக்கிறது. நீட்டி நீட்டி, மழுப்பி மழுப்பி எவ்வளவு சமாதானம் சொன்னாலும் குற்றம் குற்றம்தான் என்னும் தீர்ப்பை தாங்கள் மாற்ற முடியாது; அதற்கேற்ற தண்டனையினின்றும் தாங்கள் தப்ப முடியாது. அந்தச் சமாதானத்திற்காக அரைக் கடிதத்தைச் செலவழித்துவிட்டதே தங்கள் குற்றத்திற்குத் தாங்கள் விதித்துக்கொண்ட தண்டனை யாகும். என்னுடைய கடிதம் சுருங்கி யிருப்பதே நான் விதிக்கும் தண்டனை யாகும்.

இங்கேயும் அப்பா பேச்சு ஆரம்பித்திருக்கிறார். இரு தரத்தாரும் இணங்கினால் நாம் எதிர்பார்க்கும் நாளும் சீக்கிரத்தில் நெருங்கிவிடும். ஆனால், அதற்குப்பின் நம்மிடை யிருக்கக் கூடிய அன்பையும் இன்பத்தையும்விட இப்பொழு திருக்கும் அன்பும் இன்பமும் எந்த விதத்திலும் குறைவாகத் தோன்றவில்லை. அதனால், நாட்களைப் பற்றிக் கவலை யென்ன? ஆனால், ஒருவேளை உமது "அலுவல்கள்" ஒரு வாரத் தவக்கத்தை அதிகப்படுத்துமோ எனவும், 'உள்ளத்திலேயே உறையும்' சரோஜாவுடன் அளவளாவக் காகிதச் செலவெதற்கு என்று எண்ணுவீரோ எனவுந்தான் அஞ்சுகிறேன். அப்படி அஞ்சினும், தாங்கள் எவ்வளவு காலங் கழித்துக் கடிதம் எழுதினும் நான் அதுவரை காத்திருக்கத் தயாரா யிருக்கிறேன். ஏனெனில், நான் உங்களுக்குச் சொந்தமான
சரோஜா.

பாப்பாரப்பட்டி
3-5-33.

எனதின்பப் பொக்கிஷமே,

நான் விதித்துக்கொண்ட தண்டனையின் கஷ்டம் பெரிதாக இருந்ததென்பது உண்மையே. ஆயினும், நீ விதித்துள்ள தண்டனையிலிருந்து உனக்குத் தண்டனை விதிக்கத் தெரியாதென நினைக்கிறேன். என் புறக்கண் கண்டு ஏமாறிய அக் கடிதத்தில் மிகப் பெரிய விஷயங்கள் பலவற்றை என் அகக் கண் கண்டு களித்தது.

எதிர்கால வாழ்க்கையைப் பற்றி நான் எழுதிய போது உன் அபிப்பிராயத்தை ஆவலுடன் எதிர்பார்த்தேன். நீ அதை அடியோடு மறந்துவிட்டதால் நான் பெரிதும் ஏமாற்ற மடைந்துள்ளேன். அடுத்த கடிதத்திலாயினும் நீ உன் மனத்தைத் திறப்பாயென நம்புகிறேன். கருத்தொருமிப்பதிலேயே இன்ப மடங்கி யிருக்கிறதல்லவா?

இங்ஙனம் வாழ்க்கையில் உனது
துணையை நாடும் புருஷோத்தமன்.

திருச்சி
5-5-33

எனது இன்னுயிரே,

இச் சிறுமியின் 'துணை'யையும் அபிப்பிராயத்தையும் தாங்கள் நாடுவது எனக்கு விந்தையாகவே இருக்கிறது. ஆயினும் அது தாங்கள் என்பால் கொண்டுள்ள அளவிலா அன்பையே காட்டுவதால் அதுபற்றி எனது அபிப்பிராயத்தையும் வெளியிடுகின்றேன்.



பரீக்ஷை முடிவு இன்னும் ஒன்றும் தெரியாததால் அதை யடிப்படையாகக் கொண்ட விஷயங்களைப்பற்றி முன்னதாகவே யோசிப்பதில் பயனென்னவென எண்ணுகிறேன். மேலும், எத்தகைய வாழ்க்கையேனும் அதனை இன்பகரமானதாக்கிக்கொள்ளலா மென்னும் தைரியமுடைய தங்களுக்கு அதைப்பற்றிய விசாரமெதற்கு? அமைதியான சாதாரண வாழ்க்கையில் எனக்கு விருப்பமுண்டா என்பதைப்பற்றித் தாங்கள் இப்போது என்னைக் கேட்பது ஆச்சரியமாகத்தானிருக்கிறது. உயிரிரண்டும் ஒன்றுபட் டிருக்கையில் மனம் இசைந்திருப்பதைப்பற்றிச் சந்தேகமேனோ? புனல் வழியே புல் சாய்வதுபோலும் தங்கள் மனம் போகும் போக்கையே என் மனமும் நாடுமென்பதைக் கூறவும் வேண்டுமோ? மேலும் உண்மையான இன்ப வாழ்க்கையை மேற்கொள்ள விரும்புவோர்க்கு இன்ப சுரபியான ஈசனும் அருள்புரிவான் என்னும் திடநம்பிக்கை எனக்கிருக்கிறது. எதை நிச்சயிப்பதற்கும் பரீக்ஷை முடிவு ஏதுவாகுமென எண்ணுகிறேன்.

அப்பாவும் நமது அன்பை ஆதரிப்பதாகத் தெரிகிறது. சங்கீதத்தில் தாங்கள் விருப்பம் அதிகங் காட்டுவதால் எனக்குள்ள சொற்ப சங்கீத ஞானத்தை விருத்தி பண்ணிக்கொள்ள முயல்கிறேன். தற்காலத்துக்கு அவசியமாகத் தோன்றும் ஆங்கில பாஷையையும் சிறிது பயின்று வருகிறேன். ஏனெனில் தங்கள் வாழ்வை ரம்மியப்படுத்தக் கூடிய உபகரணங்களில் ஒன்றாக உதவவேண்டு மென்பதே எளியேனது வாழ்க்கையின் இலக்ஷியமாகும். இங்ஙனம்
தங்களுக்குச் சொந்தமான சரோஜா.

திருச்சி
30-5-33.

உயிர்க்குயிரான காதலரே,

இங்ஙனம் தங்களை அழைக்கும் உரிமையும் பாக்கியமும் உண்டோவென அஞ்சுகிறேன். தங்கள் திருமுகங் கண்டு இருபத்தாறு நாட்களாகின்றன. ஒவ்வொரு நாளும் ஒரு யுகமாகவே கழிகின்றது. பனிமுகங் காணாப் பயிர் போல நான் வாடி யிருக்கிறேன். இத்தனை நாட்களும் கதிரவனைக் காணாத உலகம் போலவே இருள் மயகாகக் கழிந்திருக்கின்றன. இனியும் இருளில்தான் வாழ்க்கை நடத்தவேண்டுமோ என்னும் அச்சம் மனத்தை வாட்டுகின்றது.

பரீக்ஷையின் முடிவைப்பற்றித் தங்களிடமிருந்து கேட்கவேண்டு மென்று நான் கொண்டிருக்கும் ஆவலுக்கு அளவேயில்லை. முடிவு தெரிந்து சுமார் 2 வாரங்களாகியும் தாங்கள் ஒன்றும் தெரிவியாதிருப்பதை நினைக்கும்போது என் இதயம் உடைந்துவிடும்போ லிருக்கிறது. ஒருகால் என்னை அடியோடு மறந்துவிட்டீரோ, உமது உள்ளத்தி லுறைந்த சரோஜா அதைவிட்டு அடியோடு அகன்றுவிட்டாளோ என நடுங்குகிறேன். நீர் மறந்தாலும் நான் மறக்க முடியாதெனத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனெனில் நான் வாழ்நாளைத் தங்களுக்கே அற்பணம் செய்துவிட்டுத் தங்களையே நம்பியிருக்கும்
சரோஜா.

பாப்பாரப்பட்டி, 12-6-33.

என் உள்ளத்தைப் பகிர்ந்துகொண்ட சரோஜா,

ஆத்திரமும் துடிதுடிப்பும் நிறைந்த உன் கடிதம் உன் அன்பையே காட்டுகின்றது. நான் உன்னை அடியோடு மறந்துவிட்டதாக நீ எண்ணுவது பைத்தியக்காரத்தனமாகும். இங்கே பலவித அபிப்பிராயங்களும் என் மனத்தைப் பிடித்திழுக்கின்றன. அதனாலேயே உனக்குக் கடிதமெழுதத் தவக்க மேற்பட்டது.

பரீக்ஷையின் முடிவைப்பற்றி நீ முன்னமே உன் தந்தை மூலம் அறிந்திருப்பாய் என எண்ணினேன். அதிர்ஷ்டவசமாக முதல் வகுப்பிலேயே தேறியிருக்கிறேன். உயர்ந்த உத்தியோகங்கள் சிலவற்றிற்காக முயன்று வருகிறேன்.

நமது மணவிஷயமாக உன் தந்தையினது அபிப்பிராயத்தை அறிய என் தந்தை விரும்புகிறார். ஆதலால் அவர் என் தந்தைக்கு நேரே ஒரு கடிதம் எழுதுவது நலமெனத் தோன்றுகிறது. மற்றைய பேச்சுக்களுக்கு அக்கடிதம் அவசியமெனக் கருதுகிறேன். இங்ஙனம் உன் அன்பான
புருஷோத்தமன்.

திருச்சி, 4-6-33.

அன்புருவான காதலரே!

உங்கள் உள்ள முழுதும் நிறைந்திருந்த சரோஜா "உள்ளத்தைப் பகிர்ந்துகொண்ட சரோஜா"வாக மாறியதன் காரணம் புலப்படவில்லை. ஒருவேளை உங்களுள்ளத்தில் சரோஜாவுக்கு விடப்பட்டிருந்த இடத்தில் ஒரு பகுதி வேறு யாருக்காவது விடப்பட்டிருக்கிறதோ என அஞ்சுகிறேன்.

தாங்கள் கூறியபடியே அப்பாவிடமிருந்து தங்கள் தந்தையாருக்கு ஒரு கடிதம் போவதற்கு அம்மா மூலம் ஏற்பாடு செய்துள்ளேன். நமது காதலை யறிந்து எளியேனைத் தங்களுக்கே அற்பணம் செய்ய வேண்டுமென அப்பா திடமாகத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. பிறகு நடக்க வேண்டியது தங்கள் முயற்சிதான். தங்களைப் பல நாளாகக் காணாதிருப்பதும் தங்களிடமிருந்து வெகுநாட்கள் செய்தி யொன்றுங் கேளாதிருப்பதும் எனக்குச் சகிக்கொணாத் துயரைத் தருகின்றன. இங்ஙனம் தங்களுக்குரிய சரோஜா.

திருச்சி, 5-6-33.

திருவாளர் பா. அரங்கநாத முதலியாரவர்கட்கு.

அன்பு சான்ற ஐயா,

நம்மிருவரது குடும்பங்கட்கும் இடையே ஏற்பட்ட சம்பந்தம் சில நாட்களுக்குள் பலத்துவிட்டது நம்மிருவரது அதிஷ்ட வசமுமாகும். தங்கள் புதல்வர் திரு. புருஷோத்தம முதலியார் பி.ஏ. பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறியதற்காக

எனது மனமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

படிப்பு ஒருவாறு முடிந்துவிட்டதால் அவரது மணத்தைப்பற்றிய பேச்சு ஆரம்பித்திருப்பீர்களென்றெண்ணுகிறேன். காலமும் கலியாண காலமாயிருப்பதால் ஒரு வேளை இரண்டொரு மாதத்திற்குள்ளேயே மணம் முடிந்தாலும் முடியலாமென நினைக்கிறேன். அத்தகைய நல்வினையை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

தங்கள் புதல்வர் படிப்புக்காக இங்கு வந்து தங்கியிருந்த காலத்தில் அவருக்கும் எங்கள் குடும்பத்துக்கும் நெருங்கிய சம்பந்த மேற்பட்டிருந்ததைத் தாங்கள் அறியாதிருக்க முடியாது. அதன் பயனாக எங்கள் குழந்தை சரோஜனியும் உங்கள் புதல்வரும் ஒருவரையொருவர் விரும்புவதாகத் தெரிகிறது. இருவரும் ஒருவர்க்கொருவர் மிகவும் பொருத்தமாக இருப்பதோடு இருபாலும் விருப்பமும் இருப்பதால் அவர்களது விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதிலும் மேலான கடமையைப் பெற்றோராகிய நாம் செய்ய முடியாதெதன எண்ணுகிறேன். இது விஷயமாகத் தங்களபிப்பிராயத்தைக் கூடிய சீக்கிரம் அறிவிக்க வேண்டுகிறேன். தாங்களும் என்னபிப்பிராயத்தையே ஆதரிப்பீரென எதிர்பார்க்கிறேன். ஒத்த பண்புகளும் கருத்தொருமிப்புமே சதிபதிகளுக்குள் அவசிய மல்லவா?

இங்ஙனம் தங்களன்பன்
தி. ஜகந்நாத முதலியார்.

பாப்பாரப்பட்டி, 7-6-33.

திருவாளர். தி. ஜகந்நாத முதலியாரவர்கட்கு.

அன்பார்ந்த ஐயா,

தங்கள் கடிதங் கிடைத்தது. என் புத்திரனது தேறுதல் பற்றித் தாங்கள் தெரிவித்த மகிழ்ச்சிக்காக நன்றி செலுத்துகிறேன்.

தாங்கள் அனுமானித்தபடியே அவனுக்கு மணம் முடிப்பதைப் பற்றிய பேச்சு நடந்து கொண்டுதானிருக்கிறது. எப்படியும் ஆனிமாதத்திற்குள் முடித்துவிடுவதெனத் தீர்மானித்திருக்கிறேன். தாங்கள் கூறிய விஷயம் சரியெனத்தான் தோன்றுகிறது. ஆயினும் இன்னும் சில விஷயங்களைப்பற்றி ஆலோசித்தபின் தங்களுக்கு முடிவு கூறலாமென எண்ணுகிறேன்.

உடையார் பாளையத்திலுள்ள திருவாளர் இரத்தினசபாபதி முதலியார் தமது ஏகபுத்திரியை நமது புதல்வனுக்கு மணமுடிக்க வேண்டுமென வற்புறுத்துகிறார். பெண் மிகவும் லக்ஷணமாக இருக்கிறதாம். அவரும் தமக்குள்ள ஆஸ்தியை யெல்லாம் பெண்ணுக்கே எழுதி வைப்பதாகக் கூறுகிறார். புருஷோத்தமனும் இந்த விஷயத்தில் சற்று விருப்பங் காட்டுவதாகத் தெரிகிறது. வேறு பலரும் பெருந்தொகைகள் கொடுப்பதாகவும் அவனைச் சீமைக்கு அனுப்புவதாகவும் கூறுகின்றனர். இந்த நிலையில் மனம் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. எதற்கும் இன்னும் சில நாட்களுக்குப் பின் முடிவைத் தெரிவிக்கிறேன்.

இங்ஙனம் தங்களன்பன்
பா. அரங்கநாத முதலியார்.

திருச்சி 10-6-33.

எனதன்புக் குறைவிடமானவரே,

நான் கொண்ட சந்தேகம் உண்மையாய்விட்டதாகத் தெரிகிறது. பலர் பலவிதமாகக் கூறித் தங்கள் மனத்தைக் கலைப்பதாகக் கேள்விப்படுகிறேன். தங்களது திடசித்தத்திலும் தளரா அன்பிலும் பூரணமான நம்பிக்கை எனக்கிருக்கிறதாயினும், தற்போதைய உலகப் போக்கைக் காணும்போது எதிலும் திடநம்பிக்கை கொள்ளுதல் கூடாதெனத் தோன்றுகிறது. இதற்குள் எத்தனைக் காதலிகள் தங்கள் உள்ளத்தைப் பகிர்ந்துகொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை. ஆயினும் நமது நெடுநாளைய அன்பு—வேரூன்றிய காதல்—தற்போது தோன்றும் புதிய அன்புகட்கு இடந்தராதென நம்புகிறேன். அப்படி ஏதாவது என் அன்பைப் புறத்தே தள்ளிப் புகுந்துகொள்ளுமாயின் என் மனம் முறியு மென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. ஆசாபங்கமும் நம்பிக்கைத் துரோகமும் லேசானவையல்ல வென்பதை மட்டும் ஞாபகமூட்டுகிறேன்.

இங்ஙனம் தங்களிடம்
தளரா நம்பிக்கை கொண்டுள்ள சரோஜா.

பாப்பாரப்பட்டி
13-6-33.

அன்பான சரோஜா,

உன் கடிதம் என் மனத்தைக் குழப்புகின்றது. பலபேர் தமது பெண்களைத் தருவதாகக் கூறுவது உண்மைதான். ஆயினும் யான் இன்னும் ஒருவருக்கும் இடந்தரவில்லை. இருந்தாலும் தற்காலப் போக்கில் பணமில்லாதவன் பிணத்துக்குச் சமானமாகவே மதிக்கப்படுவானென்று தெரிகிறது. ஆகையால் அதைப்பற்றி எனது தந்தை சிறிது யோசித்துக்கொண்டிருக்கிறார். பணத்தின் மீது எனக்கு அவ்வளவு மோகமில்லையாயினும், விவாக விஷயத்தில் பணவரவைப் பிரதானமாகக் கவனிக்கலாகாதென யான் உணர்கிறேனாயினும் என் தந்தையின் அபிப்பிராயத்துக்குக் குறுக்கே நிற்பதும் சரியல்லவென்றுதோன்றுகிறது. யோசித்துப் பார்க்கின் உண்மைக் காதலுக்கு இவ்வுலகத்திலிடங் கிடைப்பது அருமையினும் அருமையென்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது.

எதற்கும் நீ வீணே மனக்கிலேசமுற்று வருந்தாதே. நானே உன் அன்பை நழுவவிட்டுவிட்டதாகக் கருதாதே. நடப்பதைப் பார்த்துக் கொண்டே செல்வோம். இங்ஙனம் அன்பன்
புருஷோத்தமன்.

பாப்பாரப்பட்டி, 14-6-33.

திருவாளர் தி. ஜகந்நாத முதலியாரவர்கட்கு.

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் முன்பு எழுதியிருந்த விஷயத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்தேன். அவசியமான விஷயங்களைப்பற்றிப் புருஷோத்தமனையுங் கலந்தாலோசித்தேன். முன்பு சொன்ன திரு. இரத்தினசபாபதி முதலியாரவர்களது பெண் விஷயத்தில் அவனுக்கு விருப்ப மிருப்பதாகத் தெரிகிறது. ஆயினும் உங்கள் பெண்ணிடம் கொண்டுள்ள அன்பும் குறையவில்லை. இந்தக் காலத்தில் பணத்தையுங் கவனிக்க வேண்டியது அவசியமென்பதைத் தாங்கள் மறுக்கமாட்டீரென்றெண்ணுகிறேன். திரு முதலியாரவர்கள் சுமார் நாற்பது ரூபாய் சொத்துடையவர். பெண்ணும் அழகும், ஆங்கிலக்கல்விப் பயிற்சியும் அமைந்ததாயிருக்கிறது. பையன் விஷயத்திலும் அவருக்கு நிரம்பவும் பிடிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவனும் பி. ஏ.-வில் கௌரவத்தோடு தேறியிருப்பதால் மேல் படிப்புக்காகச் சீமைக்குச் செல்ல விரும்புகிறான். தற்போது எனக்கோ அச் செலவைத் தாங்கச் சக்தியில்லை. கல்யாணத்தால் சுலபமாக அவனுடைய சிறந்த மனோபீஷ்டம் நிறைவேறுமாயின் அதை நிறைவேற்றி வைப்பது என் கடமையென எண்ணுகிறேன்.

ஆயினும் தங்கள் நட்பும் என் மனத்தை ஒருபுறம் இழுத்தலைக்கின்றது. தங்கள் புத்திரிக்கும் என் புதல்வனுக்கும் நெடுநாளாக ஏற்பட்டிருந்த அன்பைப் பாழ்படுத்துவதுங் கூடாதெனத் தோன்றுகிறது. ஆங்கிலம் படித்த பெண்தான் கட்டவேண்டுமென என் மைத்துனரிருவரும் வாதாடுகின்றனர். பெண்ணின் அன்புக்குக் குறை நேரக்கூடாதெனத் தாங்களும் யோசிப்பீரென எண்ணுகிறேன். பையனது மனோபீஷ்டத்துக்கு அனுகூலமாக ஏதாவது ஏற்பாடு செய்வதாயின் மற்ற விஷயங்களை ஒருவாறு புறக்கணிக்கலாமெனத் தோன்றுகிறது.

இப்பொழுதுள்ள நிலையில் கலியாணச் செலவு முதலியவற்றைத் தாங்கிக்கொள்ள என்னால் முடியாது. பெண்ணுக்குப் பரியமாக இடுகேட்ட வேண்டிய நகையும் பெரிய தொன்றும் எதிர்பார்க்க மாட்டீரென்று எண்ணுகிறேன். பெண்ணுக்குக் கூடுமானவரை எல்லா நகைகளும் அழகுற அமைந்திருக்க வேண்டுமென்பது என் புதல்வன் அபிப்பிராயமாகும். மண வாழ்க்கையில் இறங்கிய பின்பு ஒழுங்காகக் குடும்பம் நடத்துவதற்கு வேண்டிய சாமான்கள் முதலியவையும் வாழ்க்கையை இனிமைப்படுத்துவதற்கு வேண்டிய சாதனங்களும் இருக்க வேண்டுமென அவன் விரும்புகிறான். ஆனால் நான் முன்னமே சொன்னதுபோல எந்தச் செலவை ஏற்றுக்கொள்ளவும் எனக்கு இப்போது சக்தியில்லை. சீக்கிரமே மணத்தை முடித்துவிடவேண்டு மென்னும் தங்கள் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்கக்கூடாதென்வும் எனக்குத் தோன்றுகிறது.

இவற்றை யெல்லாம் தீர யோசித்துக் கூடிய சீக்கிரம் முடிவைத் தெரிவிக்க வேண்டுகிறேன். திரு. இரத்தினசபாபதி முதலியாருக்கு நான் இன்னும் தீர்மானமாக ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவரென்னவோ 'உம்' என்பதற்காகத் தான் காத்துக்கொண்டிருக்கிறார்.

இங்ஙனம் அன்பன்
பா. அரங்கநாத முதலியார்.



உ

## திருமணத் திருமுகம்

திருவாளர் { பா. அரங்கநாத முதலியார், பா. அ. புருஷோத்தம முதலியார், பி. ஏ. } அவர்கட்கு

அன்பு சான்றீர்,

ஸ்ரீ வள்ளிலோலன் திருவருளை முன்னிட்டு நிகழும் சீமுக ஆண்டு ஆனித் திங்கள் 30-ஆம் நாள் (13-7-33) முற்பகல் $10\frac{1}{2}$ மணிக்குமேல் 12 மணிக்குள்ளாக,

| | |
|---|---|
| எனது செல்வப் புதல்வி<br>சௌபாக்கியவதி<br>சரோஜனி தேவிக்கும் | சேலம் பிரபல வர்த்தகர்<br>திரு. நா. செந்திலாண்டவ முதலியார்<br>செல்வப் புதல்வர் சிரஞ்சீவி<br>செ. தேவநாதமுதலியார், B. Com. (Lond.)<br>அவர்கட்கும், |

சேலம் சூரப்ப முதலி தெருவிலுள்ள 'செந்திலக'த்தில் திருமணம் நடைபெறும். அது சமயம் தாங்கள் தங்கள் நண்பருறவினருடன் வந்திருந்து மணமக்களுக்கு ஆசிகூற வேண்டுகிறேன்.

திருச்சி
1—7—33.

இங்ஙனம் தங்களன்பன் :
தி. ஜகந்நாத முதலியார்.

உடையார் பாளையம்
1—7—33.

திருவாளர் பா. அரங்கநாத முதலியாரவர்கட்கு.

அன்பினீர்,

மணவிஷயமாக நாம் இத்தனை நாளாகப் பேசிவந்த பேச்சை இன்றோடு நிறுத்தவேண்டியிருப்பதற்காக வருந்துகின்றேன். திருச்சி திரு. ஜகந்நாத முதலியாரவர்கள் புத்திரி விஷயமாகத் தாங்கள் யோசித்துக்கொண் டிருப்பதாகத் தெரிகிறது. என் மகளுக்கும் எங்களூர் பிரபல ஜவுளி வியாபாரியான திரு. வே. ராமநாத முதலியார் குமாரர் திரு. ரா. லக்ஷ்மணசாமி முதலியார்மீது நெடு நாளாக விருப்ப மிருப்பதாகத் தெரிகிறது. அவரும் அதன்மீது தளராத அன்பு கொண்டிருக்கிறார். நமது யோசனை இரண்டு பலத்த அன்புகளுக்குக் குறுக்கே நின்றது. உண்மையான அன்புக்குப் பங்கம் விளைப்பதினும் கொடிய பாபமில்லையென எனக்குத் தோன்றுகிறது. ஆகவே திரு ராமநாத முதலியார் குமாரருக்கே என் புதல்வியைக் கொடுக்கத் தீர்மானித்துள்ளேன். திருமணம் 18-ஆம் தேதி எனதில்லத்தில் நடைபெறும். பத்திரிகையும் இத்துடன் அனுப்பியுள்ளேன். தாங்களும் தங்கள் புத்திரரும் கட்டாயம் வந்திருந்து மணமக்களுக்கு ஆசிகூற வேண்டுமென விரும்புகின்றேன்.

இங்ஙனம் அன்பன் உ. இரத்தினசபாபதி முதலியார்.

---

# நமது அபிப்பிராயம்

"இந்தக் கடிகாரம் ஒரு ஆயுட்காலம் முழுதும் சிறிதும் பிசகாது மணி காட்டும்"

—விளம்பரம்

கடிகாரத்தின் ஆயுட்காலம் முழுதும் போலும்.

* *

பி. ஏ. வகுப்பு தமிழ்ப் பரீக்ஷையில், "'மாசில் வீணையும்' என்னும் பாடல் எந்தச் சமயத்தில் பாடப்பட்டது?" என்னும் கேள்வி கேட்கப்பட்டிருந்தது. ஒரு மாணவர் "சைவ சமயத்தில்" என்று எழுதினாராம்.

சமயம் என்பது ஒன்று உண்டென்பதை அறிந்தெழுதிய மாணவருக்கு 100-க்கு 150 மார்க் தரலாமெனச் சிபார்சு செய்கிறோம்.

* *

தமது மனைவியின் கோடிக் கணக்கான ஆஸ்தியில் தமக்குச் சேரவேண்டிய பாகத்தை உதறிவிட்ட இளவரசர் ஒருவர், "நான் எந்தப் பத்திரத்திலேனும் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போடுவேன். ஏனெனில் நான் பார்பாராவைக் காதலிக்கிறேன்." என்றார்.

இதுவரை காமத்துக்குத் தான் கண்ணில்லை என்றெண்ணி யிருந்தோம்; காதலுக்கும் கண் கிடையாதென இப்பொழுது கண்டுபிடித்து விட்டோம்.

* *

"கமிஷனர் வந்தவுடன் தடியடி நிறுத்தப் பட்டது." —பத்திரிகைச் செய்தி.

அதற்குள் தடிகள் முறிந்துபோ யிருக்க வேண்டுமென நம்புகிறோம்.

"ஜாக்கிரதை! இதைத் தொட்டால் உடனே இறக்க நேரிடும். அத்து மீறித் தொடுபவர்கள் தூக்குத் தண்டனைக்கு உள்ளாவார்கள்."

—மின்சாரத்தைப் பற்றிய எச்சரிக்கை

வானுலகத்திலும் தூக்கு மேடை இருக்கிறது போலும்.

* *

"லக்ஷ்மிக்கு லக்ஷ்மி கடாக்ஷம்"

—பத்திரிகைத் தலைப்பு

இரண்டு லக்ஷ்மிகள் உண்டென்றெண்ணி ஒரு லக்ஷ்மி பூஜை பலிக்காதவர்கள் மற்றொரு லக்ஷ்மியைத் தேடவேண்டாம். முதல் லக்ஷ்மி ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் பெய ராகும்.

* *

கணக்கற்ற பொது விஷயங்களில் கலந்து கொள்ளவேண்டி யிருந்ததால் இளவரசிக்கு அபாரமான அசதி ஏற்பட்டிருக்கிறது.

—தினசரி

உரலில் தலை கொடுத்தால் உலக்கை இடி தப்புமா? அரச குமாரியாய்ப் பிறந்தது சும்மா விடுமா?

* *

"உங்கள் பற்களின் நிலைமை சரியாயில்லை என்பதைப் பல்வலியாலும் இரத்தம் வருவதாலும் இயற்கை எச்சரிக்கின்றதென்று உங்கள் பல் வைத்தியர் சொல்லுவார்......"

—விளம்பரம்

பல் வைத்தியர் மிகவும் கெட்டிக்காரராகத்தா னிருக்கவேண்டும்.



# செங்குந்தர் கல்விநிதி

## உபகாரச் சம்பளம்

சென்ற வருஷம் போலவே இவ்வருஷமும் உயர்தரக் கல்வியை நாடும் சில ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பள மளிக்க நமது கல்விநிதி தீர்மானித்திருக்கிறது. உபகாரச் சம்பளத்தை நாடும் ஏழைச் செங்குந்த மாணாக்கர்களின் பெற்றோராவது பாதுகாப்பாளராவது அடியில் கையொப்ப மிட்டிருப்பவருக்கு ஆகஸ்டு 20-தேதிக்குள் மனு எழுதியனுப்பவேண்டும். செப்டம்பர் மாதத்திய செங்குந்த மித்திரனில் கல்விநிதிக் காப்பாளர் சபையின் தீர்மானம் வெளியிடப்படும்.

மனுவில் குறிப்பிட வேண்டியவை:—

1. பிள்ளையின் பெயர்
2. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் பெயரும் விலாசமும்
3. பிள்ளை பிறந்த இடமும் தேதியும்
4. பிள்ளை படிக்கும் வகுப்பும் கலாசாலையும்
5. சென்ற பரீக்ஷையில் பெற்ற மார்க்குகள்
6. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் தொழில், வருமானம், சொத்து முதலியன
7. மனுதாரர் குடும்பத்து நபர்களின் தொகையும் அவர்களின் ஜீவனோபாயங்களும்
8. அவர் குடும்பத்தில் படிக்கும் இதர பிள்ளைகளின் தொகையும் வகுப்பும்
9. நாடும் ஒத்தாசையின் தன்மையும் அளவும்
10. ஏற்கெனவே வேறு ஒத்தாசை பெற்றிருந்தால் அதன் தன்மையும் அளவும்
11. உதவிக்குப் பாத்திரர் என்பதை நிரூபிக்கக்கூடிய இதர விவரங்கள்
12. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் கையொப்பம்
13. பள்ளிக்கூடத்துத் தலைவரின் சிபார்சுக் குறிப்பும் கையொப்பமும்

மனு செய்துகொள்வோர் கவனிக்கவேண்டிய முக்கியமான நிபந்தனைகள்:—

1. (a) மேற்குறிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் உண்மையென்பதற்கு அத்தாட்சியாக மாணவர் படிக்கும் கலாசாலை அதிகாரியின் கைச்சாத்திட்ட சிபார்சுக் குறிப்பு ஒன்று ஒவ்வொரு மனுவுடனும் வாங்கி யனுப்புதல் வேண்டும்.

(b) உண்மைச் செங்குந்தர் சங்கங்கள் உள்ள இடங்களிலிருந்து மனு அனுப்புவோர் தம் மனுவோடு அவ்வச் சங்கத்தின் தலைவர் சிபார்சையும் காரியதரிசி சிபார்சையும் தனித்தனியே வாங்கி யனுப்புதல் வேண்டும்.

2. இதுவன்றி, ஒவ்வொரு பிள்ளைக்கும் மனுவோடு இரண்டு பிரபலமான கனவான்களுடைய சிபார்சுக் கடிதங்கள் வாங்கி அனுப்புதல் வேண்டும். சங்கமில்லாத இடங்களிலிருந்து மனு அனுப்புவோர்கட்குச் சிபார்சு செய்பவரில் ஒருவர் உண்மைச் செங்குந்தராகவும், மற்றொருவர் வேறு சாதியினராகவும் இருத்தல் வேண்டும்.

3. உபகாரச் சம்பளத்தை நாடும் மாணாக்கர்கள் சம்பளம் பெற்று இடையில் அசிரத்தையினாலோ தப்பு நடத்தையினாலோ படிப்பை நிறுத்திவிட நேரிடில், அவர்கள் அதுவரை பெற்ற சம்பளத்தைக் கல்வி நிதிக்குத் தாம் ஈடுகட்டித் தருவதாகச் சிபார்சு செய்யும் கனவான்களில் ஒருவரிடமிருந்து ஜாமீன் கடிதம் ஒன்று வாங்கி மனுவோடு அனுப்புவதோடு, மனு செய்துகொள்ளும் பெற்றோராவது பாதுகாப்பாளராவது தாமும் அவ்விதம் ஈடுகட்டித் தருவதாக ஒப்புக்கொள்ளல் வேண்டும். கையொப்பமிடுவோர் மாணவர் நின்ற மூன்று மாதங்கட்குள் வாங்கிய பணத்தைக் கல்விநிதிக்கு ஈடுகட்டித் தரத் தவறினால் அத்தொகை ஜாமீன் கொடுத்தவரிடமிருந்து வசூலிக்கப்பெறும்.

4. உபகாரச் சம்பளம் பெறும் மாணாக்கர்கள் தமது கலாசாலை அதிகாரிகளால் எப்போதாவது துர்நடத்தைக்காகத் தண்டிக்கப்படுவரேல் அன்னவர்களுக்கு உபகாரச் சம்பளம் அதுமுதல் நிறுத்தப்படும். அதுவரை கொடுத்துள்ள பணமும் மேற்கூறிய முறையில் வசூலிக்கப்பெறும்.

5. உபகாரச் சம்பளம் பெறும் மாணாக்கர்கள் நமது தலைச்சங்கத்தையாவது கிளைச்சங்கங்களையாவது, அவற்றின் நோக்கங்களையும் தொண்டுகளையுமாவது, பொதுவில் உண்மைச் செங்குந்தர் இயக்கத்தினையாவது தாக்கி அவற்றிற்குப் பாதகமாக நடந்துகொண்டாலும் அவர்களுக்கு அது முதல் உபகாரச் சம்பளம் நிறுத்தப்படும்.

6. கல்விநிதியிலிருந்து உபகாரச் சம்பளம் பெறும் ஒவ்வொரு மாணாக்கரும் தான் பெறும் உதவிக்குப் பிரதியுபகாரமாகக் கீழ்க்கண்ட விதங்களில் தம் குலாபிமானத்தை விளக்குவதாக ஒரு தனிக் கடிதத்தில் எழுதித் தரவேண்டும்:—

(a) தலைச்சங்கத்தின் நோக்கங்களையும் செயல்களையும் பாமர ஜனங்களுக்கு அறிவித்து அவர்கள் குல முன்னேற்ற விஷயத்தில் ஈடுபடுமாறு பிரசாரஞ் செய்து தமது கல்வி தம் ஆயுள் பரியந்தம் பொது நலத்துக்கு உபயோகமாகும்படிச் செய்ய வாக்குறுதி தர வேண்டும்;

(b) தாம் வாழ்க்கையில் ஈடுபட்டுச் சம்பாத்தியம் செய்யும் சமயத்தில் தாம் கல்வி கற்ற சமயம் கல்வி நிதியிலிருந்து பெற்ற உதவிக்கு நன்றியறிதலாகச் செங்குந்தர் கல்விநிதிக்குத் தமது வருமானத்தில் குறைந்தது ரூபாய்க்குக் காலணாவாவது இடைவிடாது நன்கொடையாக வழங்கிவர வாக்குறுதி செய்யவேண்டும்;

(c) நமது 'மித்திரன்' ஓங்குமாறு ஒத்தாசை புரியவேண்டும்.

7. மனுவில் மேற்குறித்த விவரம் எதுவேனும் விடுபட்டிருந்தாலும் உண்மைக்கு மாறாக இருந்தாலும் அம்மனு தள்ளிவிடப்படும்.

உதவி பெறுவோர் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்:—

I. உபகாரம் பெறும் ஒவ்வொரு மாணவர்க்கும் அனுமதிக்கப் பெற்றுள்ள தொகை செப்டம்பர் மாத முடிவில் ஒன்றும், நவம்பர் முடிவில் ஒன்றும், பிப்ரவரி முடிவில் ஒன்றுமாக மூன்று தவணைகளில் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்பெறும்.

II. முதல் தவணைக்கு மாணவர் அனுப்பும் மனுக்கள் பேரில் தேர்ந்தெடுத்தவர்களுக்கு எல்லாம் பணம் அனுப்பப்படும். மற்ற தவணைகளுக்கு இரண்டு வாரம் முன்னதாகவே ஒவ்வொரு மாணவரும் தமது கலாசாலை அல்லது கல்லூரித் தலைவரிடமிருந்து தமது மார்க்குகளையும், தமது நடத்தையையும், தாம் படிப்பில் அடைந்துள்ள விருத்தியையும் குறித்து ஒரு நற்சாட்சிப் பத்திரம் வாங்கி அனுப்ப வேண்டும். இந்த நற்சாட்சிப் பத்திரமின்றிப் பணமனுப்பப்படாது.

III. புத்தகச் செலவுக்கு உபகாரம் பெறுவோர் தாம் வாங்கிய புத்தகங்களின் பில்களைத் தமது கலாசாலைத் தலைவர்களது அங்கீகாரக் கையெழுத்தோடு அனுப்பிய பிறகே பணங் கொடுக்கப்பெறுவர்.

☞ முக்கிய கவனிப்பு: இதுவரை பல மாணவர்களிடமிருந்து பல மனுக்கள் வந்திருக்கின்றனவாயினும், அவற்றுள் மேற்காணும் விஷயங்க ளெல்லாம் வேண்டியபடி தெளிவாகக் குறிப்பிடப்பட் டிராததால் அம்மனுக்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. அம்மனுதாரரும் மீண்டும் எல்லா விவரங்களும் அடங்கிய முறையான மனுவொன்றைக் குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

2/17, பவழக்காரத் தெரு, சென்னை. 1933ஞு ஆகஸ்ட்மீ 1உ } ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அமைச்சர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.

## செங்குந்த திலகர் கவிச்சக்ரவர்த்தி

# ஒட்டக்கூத்தர் திருநாள்

ஸ்ரீமுகஞு ஆவணிமீ 17உ (1—9—33) வெள்ளிக்கிழமை உத்திராட நக்ஷத்திரத்தில் வருகிறது.

இத் திருநாளைச் செங்குந்த ரனைவரும் மேற்குறிப்பிட்டுள்ள தினத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடிக் கல்வி, செல்வம் முதலிய எல்லாவற்றின் பெருக்கையு மடைந்து இன்புறுவாராக.

ஒட்டக்கூத்தர் படம் 'செங்குந்த மித்திரன் ஆபீஸ், 2/17, பவழக்காரத்தெரு, சென்னை' என்னும் விலாஸத்திற் கிடைக்கும். விலை—தாபாற்கூலியுள்பட ரூ. 1-4-0.

## நன்கொடை

மணவை திரு. ச. ந. குமரகுரு முதலியார் மூலம் வசூலான நன்கோடை விவரம்

5-5-33 தென்னாற்காடு ஜில்லா விருத்தாசலம் தாலுக்கா பெண்ணாடம் ரைஸ்மில், ஷராப் கடை, M. பாவாடை முதலியார் "செங்குந்தர் கல்விநிதி"க்கு அளித்த நன்கொடை ரூ. 0—8—0

7-5-31 திருச்சி ஜில்லா உடையார் பாளையம் தாலுக்கா குவாகம் சா. பாவாடை முதலியார், சங்கப் பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக அளித்த ரூ. 0—4—0

குவாகம். நாட்டாண்மை, பே. கு. சின்னதம்பி முதலியார் சங்கப் பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக அளித்த ரூ. 0—4—0

16-5-33 வாரியங்காவல் வாகீச பக்தஜன சபை என்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் சங்கத்தார் பூ. வே. ஏகாம்பர முதலியார் "செங்குந்தர் கல்விநிதி"க்கு அளிக்க நன்கொடை



154911

# கிளர்ச்சி

## காஞ்சீபுரம் செங்குந்த வாலிபர் சங்கம் ஆண்டு நிறைவுவிழா

மேற்படி சங்க ஆண்டு நிறைவிழா புதுவை, பிரெஞ்சு அரசாங்க வரவு செலவு இலாகாத் துணைத்தலைவர் திரு. ஆ. வே. முத்தைய முதலியார் B.A.,B.L. அவர்கள் தலைமையில் 16-4-33உ ஞாயிற்றுக்கிழமை மிக்க சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை 7½ மணிக்குத் தலைவர்கள் ஆடிசன் பேட்டை ஜவுளிக்கடைச் சத்திரத்தில் வரவேற்கப்பட்டு மோட்டார் வாகனங்களில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். ஊர்வலத்தில் ஏராளமான ஜனங்கள் கலந்து கொண்டனர். பல வகை வாத்தியங்களும் சின்னங்களும் முழங்கின. கோயில் குடைகள் பல இருமருங்கும் அலங்கரித்துச் சென்றன. யானை, குதிரைகள் ஊர் வலத்தின் முன்பு சென்றன. ஜே முழக்கம் வானைப் பிளக்க முழங்க, 7½ மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம் பல முக்கிய வீதிகளின் வழியே சென்று 9½ மணிக்கு ஆண்டுவிழா நடைபெற வேண்டிய இடத்தை அடைந்தது. வழி நெடுக தோரணங்களும் வளைவுகளும் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீதியிலும் பல இடங்களில் தலைவர்கட்கு மாலைகள் சூட்டி மரியாதை செய்யப்பட்டது. ஊர்வலம் வந்து சேர்வதற்குள் விழா நடைபெற வேண்டிய இடமுழுதும் மக்கள் குழுமிவிட்டனர். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள் ஸ்ரீமான்கள் புதுவை. ஆ. வே. முத்தைய முதலியார் B.A.,B.L., திருவாரூர் நகரசபைத் துணைத்தலைவர் திரு. நா. சபாபதி முதலியார், காஞ்சீபுரம் நகர சபைத்தலைவர் ம. த. சாமிநாத முதலியார், முனிசிபல் கவுன்சிலர்கள் C. சுப்பிரமணிய முதலியார், M. பொன்னுசாமி முதலியார், குப்புசாமி நாயுடு, M. கெங்காதர முதலியார், குடியேற்றம் நகர சபைத்தலைவர் M. V. பீமராஜ முதலியார், வாலாஜா நகர சபைத்தலைவர் முத்து, சப்ரிஜிஸ்டிரார் இராமலிங்க முதலியார், காஞ்சீபுரம் சப்ரிஜிஸ்டிரார் ஆறுமுக முதலியார், சிவபுரம் W. T. மாசிலாமணி முதலியார், ரிடையர்டு மிலிடரி அக்கவுண்டண்டு W. T. பஞ்சாட்சர முதலியார், தக்கோலம் அ. ரா. செல்லப்பா, சென்னை மா. அ. கனகசபை முதலியார், தி. அ. சண்முக முதலியார் பண்டிதர் திருஞான சம்பந்த முதலியார், க. வச்சிரவேல் முதலியார் B.A.,L.T. முதலியோராவர்.

நகர சபைத்தலைவர் ஸ்ரீ ம. சாமிநாத முதலியாரவர்கள் புதுவை ஸ்ரீ ஆ. வே. முத்தையா முதலியாரவர்களைத் தலைவராகப் பிரேரேபித்தனர். தலைவரவர்கள் ஆசனத்தமர்ந்ததும் கடவுள் வணக்கம் பாடப்பட, பின்னர் தலைவருக்கு வரவேற்பு கல்லுரை வழங்கப்பட்டது. தலைவர் தக்கபடி பதில் கூறுமுகத்தான் எக்காரியமும் குறித்த காலத்தில் தொடங்கப்பெற வேண்டுமென்றும், ஆண்டு விழாக்களுக்கு இத்தகைய ஆடம்பரச் செலவுகள் செய்தல் கூடாதெனவுங் குறிப்பிட்டனர். பின்பு சங்க அறிக்கை வாசிக்கப்பட்டதும் சென்னை மா. அ. கனகசபை முதலியார், தி. அ. சண்முக முதலியார் இருவரும் முறையே 'உலக மாற்றத்தின் வேகமும் சமூக மக்களின் உறக்கமும்', 'கால நிலைக்கேற்ற கண்ணிய தருமம்', என்பனபற்றி உபந்யசித்தனர். பின்பு இடைவேளை போஜனத்திற்காகக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

குறித்தபடி சரியாக 3 மணிக்குக் கூட்டம் துவக்கப்பட்டதும் ஸ்ரீ க. வச்சிரவேல் முதலியார் B.A.L.T., ஸ்ரீ அ. ரா. செல்லப்ப முதலியார் இவர்கள் முறையே 'இளைஞர் எழுச்சிக்கு இடையூறுகள் யாவை?' "பெண்மக்கள் பெற்றிக்குத் தடையாவார் யாவார்?" என்னும் பொருள்பற்றி மிக்க விளக்கமாக விரிவுரை நிகழ்த்தினர். அதன் பின் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீ தி. நா. சபாபதி முதலியாரவர்கள் 'முன்னேற்றப் பந்தயத்தில் முதன்மை யுறுதற்கேற்ற உபாயங்கள்' என்ற விஷயமாக நீண்ட சொற்பொழிவாற்றினர். பின்பு, சங்கச் சார்பில் வாசகசாலையொன்று நிறுவுதல் வேண்டுமெனவும், மாணவர்களின் பொருட்டு விளையாட்டுச் சாலைகளும், இலக்கியச் சங்கப் பிரிவும் அமைக்க வேண்டுமெனவும், இரண்டாவது செங்குந்தர் மகாநாட்டு மிச்சப் பணத்தைத் தலைச் சங்கத்தின் கல்விநிதியில் சேர்க்குமாறு மகாநாட்டு வரவேற்புக் கழகத்தாரை வேண்டுவதாகவும், செங்குந்தர்கள் வரதர் தேரை இழுப்பதால் மானக்கேட்டிற்கும் வீண் நஷ்டத்திற்கும் உள்ளாக வேண்டியிருப்பதால் அவ்வழக்கத்தை நிறுத்தும்படி தலைவர்களை வேண்டுவதாகவும், காஞ்சிபுரம் ஜவுளிக்கடை மகமைப்பணம் ஏழைகளுடைய பணமாதலின் அவர்கட்குப் பயன்படும்படி அதில் ஒரு பகுதியை உபகாரச் சம்பளம் வழங்குதல், உணவளித்தல், வாசகசாலை ஸ்தாபித்தல் ஆகிய விஷயங்களில் செலவிட முயற்சிக்க வேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிபுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூறப்பட்டு ஊர்வலமாகத் தலைவர்கள் தங்கியிருந்த ஜாகைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வந்திருந்த பிரதிநிதிகள் 200 பேர்கட்கும் தமது சொந்தச் செலவில் உணவளிக்க இசைந்த ஸ்ரீ ம. கெங்காதர முதலியாரவர்கட்கு சங்க உறுப்பினர் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## திருச்சி ஜில்லா

### உன்னியூர் செங்குந்தர் சங்கம்

நாளது வைகாசிமீ 16உ (29-5-33) திங்கள் கிழமை மாலை 4½ மணிக்குத் திருவாளர் கு. ஆ.

ஆனந்த முதலியாரவர்கள், தலைமையில் செங்குந்தர் சங்கக்கூட்டம் நடைபெற்றது. அன்று தலைச் சங்கப் பிரசாரகராகிய, திருவாளர் ச. நா. குமரகுரு முதலியாரவர்கள், சமூக முன்னேற்றம் என்பதுபற்றி ஓர் விரிவுரைப் பிரசங்கம் செய்தார். தலைவரவர்கள் முடிவுரைக்குப் பிறகு வந்தனோபசாரத்துடன் இரவு 8 மணிக்குக் கூட்டம் இனிது கலைவுற்றது.

### வாரியங்காவல் சித்திவிநாயகர் கோவில்வீதி செங்குந்த மகாஜனக் கூட்டம்

17-5-33 புதன்வாரம் பகல் சுமார் 2 மணிக்கு ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமி மடாலயத்தில் சக்கரை. சுந்தர முதலியார் குமாரர் வீரப்ப முதலியார் தலைமையின்கீழ் கூடிய பொதுக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறப்பெற்றன.

நமது சங்கத்திற்கு "திருநாவுக்கரசு சுவாமிகள் செங்குந்தர் சங்கம்" எனப் பெயர் அமைக்க வேண்டும்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சர் அவர்கள் இம்மனுவை ஏற்றுக்கொண்டு இச்சங்கத்திற்கு உரிமையான செய்திகளை அனுப்பி ஆதரிப்பதுடன் அடிக்கடி எங்கள் நடவடிக்கைகளை கவனித்து சமூக முன்னேற்ற விஷயமான சீர்திருத்த முறைகளை அறிவிக்க வேண்டும்.

இன்று முதல் ஒவ்வொரு தமிழ் வருஷ ஆண்டு முடிவிலும் விருப்பமும் முயற்சியும் இல்லாத அங்கத்தினர்களை விலக்கவும் புதிதாக அமைக்கவும் அப்போது உள்ள உத்தியோகஸ்தர்களின் மிதப்பட்டவர்களின்படி தீர்மானிக்க வேண்டும்.

இச்சங்கத்திற்கு சமூக முன்னேற்ற விஷயமாக ஊரில் நடக்கும் விசேஷ காலங்களில் அடுத்த கூட்டங்களில் ஏற்படும் தீர்மானப்படி நன்கொடை மூலமாக வசூலித்து ஷை சங்கத்திற்கு நிதியாக வைக்க வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் அம்மாவாசை பௌர்னமி கிர்த்திகை முதலிய விசேஷ காலங்களில் குறிப்பிட்ட இடத்தில் கட்டாயமாக இச்சங்கத்தார்கூடி சமூக முன்னேற்ற விஷயமாக செங்குந்த மித்திரனை வாங்கி வாசித்து சுற்றுப்புற ஊர்களிலும் பிரசாரம் செய்வதற்காக தீவிரமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேற்குறித்தபடி கூட்டங் கூடுவதற்கும் சங்கத்தின் சார்பான சாமான்களைப் பாதுகாப்பதற்கும் திருவிழாக் காலங்களில் சிவத்தொண்டாற்றுவதற்கும் சங்கத்திற்கு வரும் பிரதிநிதிகளை வரவேற்பதற்கும் குலப்பணியாற்றவும் சுமார் பதினைன்றுக்குக் குறையாத தொண்டர்படை இருக்க வேண்டும்.

## திருநெல்வேலி ஜில்லா

அம்பா சமுத்திரத்தில் சைவத் திருவாளர் S. S. அகஸ்திய முதலியார் அவர்கள் நன்முயற்சியால் 1108௵ தைமீ 18௳ திங்கள்கிழமை செங்குந்தர் இளைஞர்கள் பொதுக்கூட்டம் கூடிச் சாரதா சங்கம் என்னும் செங்குந்த வாலிபர் சங்கம் என்ற பெயருடன் ஒரு சங்கமும் ஏற்படுத்தி வாராவாரம் பொதுக்கூட்டங்கள் நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

### ஒற்றுமை மணம்

ஷை சங்கத்தின் முயற்சியால் ஷை யூர் பஞ்சாயத்துக் கோர்ட்டு மாஜி. பிரசிடெண்டு ஸ்ரீமான் அ. முத்துசாமி முதலியார் அவர்கள் புதல்வியை கோட்டார் பிரபல ஜவுளி வர்த்தகம் செங்குந்தர் விநாயகர் கோவில் தேவஸ்தானம் டிரஸ்ட்டி ஸ்ரீமான் சு. மாணிக்க முதலியாரவர்கள் புதல்வர் பழனியாண்டி முதலியார் அவர்களுக்கு ஒற்றுமைத் திருமணம் செய்ய உறுதி செய்யப்பட்டது.

### சங்கரநயினார் கோவில் செங்குந்த அபிவிருத்தி சங்கம்

1-1-33 ஞாயிற்றுக்கிழமை இரவு 8-மணிக்கு பொதுக்கூட்டம் திருவாளர் S. பழனியாண்டி முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முகவுரைக்குப் பின் மாணவர்கள் A. சண்முகம். S. சங்கரநாராயணன் முறையே கக்ஷிப் பிரதிகக்ஷிகள் சீர்திருத்தம் என்பவைபற்றிப் பேசினார்கள். ஆசிரியர் திரு. M. அருணகிரி முதலியார் அவர்கள் ஜீவகாருண்யமும் அன்பும் என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

22-1-33 ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்குத் திரு. சண்முகம் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் மாணவர்கள் S. சங்கரநாராயணன், A. தருமலிங்கம் முறையே சீர்திருத்தம் பெண்கல்வி என்பவை குறித்து விளக்கமாகப் பேசினார்கள். ஆசிரியர் திரு. M. அருணகிரி முதலியார் அவர்கள் குழந்தை வளர்ப்பு என்பது பற்றிப் பேசினார்கள்.

4-6-33 அன்று திருவாளர் T. சங்கரநமச்சிவாய முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிருவாக சபைக்கூட்டத்தில்,

சங்கத்தில் அங்கத்தினராக உள்ளவர்களும் சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேரவிரும்புவோர்களும் வருஷ சந்தா ரூ. 1-8-0 வருஷ ஆரம்பத்திலேயே செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேணுமென்றும் அப்படிக் கொடுக்கத் தவறியவர்களை சங்க பதவியினின்று நீக்கி விடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

ரா. திருவுடையா முதலியார் அவர்களை சங்கம் சம்மந்தமான யெல்லாக் காரியங்களையும் கவனித்து வரும்படியாக வேண்டிக் கொள்ளப்பட்டது.

செங்குந்தர் தருமர் கோவிலில் பத்து நாள் திருவிழா நடந்தபடியால் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்ட சங்கத்தின் மூன்றும் ஆண்டு விழாவை தலைச்சங்கத்தின் பிரசாரகர்களைக் கொண்டு நடத்தி வைக்கவேண்டும்.



## தென்னாற்காடு ஜில்லா

### கல்லாலம்பூண்டி செங்குந்த வாலிபர் சங்கம்

7-1-33-ல் கூடிய கூட்டத்தில் திரு. V. நாராயணசாமி முதலியார், திரு. S. பாலசுந்தர முதலியார், திரு. V. M. சிவப்பிரகாச முதலியார், திரு. V. பாலசுப்ரமண்ய முதலியார், திரு. S. மாரியப்ப முதலியார், திரு. K. அருணாசல முதலியார், திரு. K. பூங்காவன முதலியார், திரு. M. கிருஷ்ணசாமி முதலியார், திரு. M. சிங்கார முதலியார் ஆகியோர் முறையே "மனோராஜ்யம், குடியால் விளையும் கெடுதிகள், ஜீவகாருண்யம், ஜீவியத்தின் வாழ்க்கை, ஒற்றுமை, விபூதியின் மகிமை, காலமே பணமாம், கல்வி, தெய்வ வழிபாடு' என்னும் விஷயங்கள்பற்றி உபந்யசித்தனர்.

எட்டியாபுரத்தைச் சேர்ந்த 14-கிராமங்களிலுள்ள சவராமங்கல வம்மிச செங்குந்த முதலிமார்கள் நடாத்திவரும் கொடித் திருநாளும் 12-ந் திருநாளும் வெகு விமரிசையாக நடைபெற்றன.

## தஞ்சை ஜில்லா

### செங்குந்த வாலிபர் சங்கம், தேவூர்

செங்குந்தர்களின் முன்னேற்றத்தைக் கருதி 19-3-33 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை சரியாக 6 மணிக்கு செங்குந்த வாலிப சங்கமொன்று நாகையைச் சேர்ந்த தேவூரில் இனிது நிறுவப்பட்டது. முதன் முதலில் தலைவர்களும், காரியதரிசிகளும், கௌரவ அங்கத்தினர்களும் ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் தலைவரின் அக்ராசனத்தின்கீழ் ஷை சங்கம் ஆரம்பமானது. சங்கத்தின் நோக்கம் என்பதைப்பற்றி அங்கத்தினர்களும், தலைவரும் சொற்பொழிவு நிகழ்த்தினர். கல்வியின்மையே சமூக அபிவிருத்திக் குறைவுக்குக் காரணமாதலால் அதற்கேற்ற சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்றும், செங்குந்த மித்திரனை ஆதரிப்பதென்றும், உலக விஷயங்களை அறிவுறுத்த வேண்டி, தினப்பதிப்பாவது வாரப்பதிப்பாவது வரவழைப்பதென்றும், ஆங்கிலந் தெரியாதவர்களுக்கு சனி, ஞாயிறுகளில் அதைச் சிறுகச் சிறுகப் போதிப்பதெனறும், மற்ற குறைகளை அவ்வப்போது கூடும் சங்கத்தினிடையே கூறி அவசியமான சீர்திருத்தங்களைப் படிப்படியாகச் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஷை சங்கம் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் மாலை 6 மணிக்குக் கூடும்.

## கலவை

### ஸ்ரீ சுந்தரவிநாயகர் செங்குந்தர் சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவுவிழா

கட்சி ஒழிக்கப்பட்டது

17-4-33 திங்கட்கிழமை யன்று ஷை சங்கத்தின் ஆண்டு நிறைவிழா "செங்குந்தர் நிலையம்" என்னும் கொட்டகையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலையில் தலைவர்கள் தங்கியிருந்த இடத்தினின்றும் விமரிசையாகக் கொட்டகைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அனைவரும் ஒருங்கே கூடியபின், திரு. D. பாலசுந்தர முதலியாரால் கடவுள் வணக்கம் பாடப்பட்டது. பின்பு கலவை பஞ்சாயத்து போர்டு தலைவரும் ஜில்லா கோவாப்ரேடிவ் கௌன்சில் தலைவரும், சென்னை மாகாண பிரின்சிபல் கோவாப்ரேடிவ் யூனியன் எக்சிகுடிவ் மெம்பருமான ராவ்சாகேப் திரு. K. M. சிங்காரவேலு முதலியார் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துத் தரப்பட்டது. முதலியாரவர்கள் பதில் கூறி ஆண்டு விழாவைத் திறந்து வைத்தனர். பின்பு தலைவர் திருவாரூர் முனிசிபல் வைஸ்சேர்மன் திரு. T. N. சபாபதி முதலியாரவர்கட்கு வரவேற்பு நல்லுரை வழங்கப்பட்டதும், தலைவர் முன்னுரைகூற, சங்க அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்பு காஞ்சீபுரம் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரும் சென்னை திரு. மா. அ. கனகசபை முதலியாரும் முறையே 'செங்குந்த சமூகமும் உலகத்தின் போக்கும்' 'கட்சிப்பிணக்கு' என்ற விஷயமாக நீண்ட சொற்பொழிவுகள் செய்தனர். பின்புஇடை வேளை போஜனத்திற்கு கூட்டம் ஒத்திவைக்கபட்டது. மாலை 2 மணிக்கு மீண்டும் கூட்டம் கூடியதும், 'பெண்ணுலகு' 'தற்காலத்திற்குரிய தருமம்' சமத்துவம் என்ற பொருள்பற்றி அசனம்மாபேட்டை திரு. V. ஆரிமுத்து முதலியார், காஞ்சிபுரம் திரு. K. வஜ்ஜிரவேல் முதலியார் B.A.L.T., சென்னை, திரு. தி. அ. சண்முக முதலியார் ஆகியோர் உபன்னியசித்தனர். பின்னர் ஜில்லா போர்டு மெம்பர் திரு. கா. லோகநாத முதலியாரவர்களுக்கும், தாலுக் போர்டு மெம்பர்களான திருவோத்தூர் திரு. P. முத்துசாமி முதலியார் திமிரி. திரு. S. R. பொன்னுசாமி முதலியார், கலவை திரு. K. அப்பாஜி பிள்ளை, அசனம்மாபேட்டை திரு. K. S. குப்புசாமி முதலியார் ஆகியோர்களுக்கும் பாராட்டு நல்லுரை வழங்கப்பட்டது.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமானதாய் நிறைவேறின.

நான்காவது மகாநாட்டின் தீர்மானங்களை முழு மனதுடன் ஆதரிக்கிறது.

மகாநாட்டுத் தீர்மானப்படி நம்மூரிலுள்ள நம் குல வியாபாரிகள் கல்விநிதிக்கு மகமை வழங்க வேண்டுமென்றும் சுபகாரியங்களில் ஒரு ரூபாயிற்கு குறையாமல் நன்கொடை வழங்க வேண்டுமென்றும் அனைவரையும் வேண்டிக் கொள்ளுகிறது.

கூட்டுறவு சங்கமொன்று ஸ்தாபித்து நமது தொழிலை விருத்தி செய்தும் உற்பத்தி சரக்குகளை விற்பனை செய்தும் நமது சமூக கஷ்டநிலையைப் போக்க வேண்டும்.

திருவாரூர் T. N. சபாபதி முதலியார், கலவை K. M. சிங்காரவேல் முதலியார், சத்துவாச்சேரி T. K. சுக்கிரமணிய முதலியார், காஞ்சிவரம் K. வஜ்ஜிரவேலு முதலியார், அசனம்மாப்பேட்டை K. S. குப்புசாமி முதலியார், இவர்க

ளடங்கிய பஞ்சாயத்தின் முடிவுப்படி கக்ஷிப் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

இரவு போஜனம் முடிந்ததும் சுமார் 10 மணிக்கு கட்சியை ஒழிக்க நியமிக்கப்பட்ட பஞ்சாயத்தார் கூட்டங்கூடி இருகட்சி விவகாரங்களையும் விசாரித்துத் தக்க முடிவு செய்து ஏகமனதோடு கட்சியை ஒற்றுமை செய்து, பழைய பெரியதனக்காரர்கள் வயது முதிர்ந்து விட்டபடியால், புதிதாக திருவாளர்கள் த. ப. அப்பாசாமி முதலியார், சு. மாணிக்க முதலியார், சூ கந்தசாமி முதலியார், சை. கி. சுந்தரேச முதலியார், பு. பெ. பொன்னுசாமி முதலியார் இவர்களை பெரியதனக்காரர்களாக நியமித்து 5 வருஷத்துக் கொருமுறை பெரியதனக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் ஊர் விவகாரங்களை பெரும்பான்மையோரது அபிப்ராயத்தை தழுவி முடிவு செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்தனர். இவ்விழாவுக்குப் பஞ்சாயத்துச் சபையார் பல வசதிகளேற்படுத்திக் கொடுத்ததும், தொண்டர் பலர் ஆர்வத்துடன் உழைத்ததும் பாராட்டற்பாலனவாம்.

## சென்னை ஜில்லா

### திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கம்

5-4-33 இரவு 10 மணிக்குக் கூடிய கூட்டத்தில் திருவாளர். அ. சண்முகம் பிள்ளை அவர்கள் தலைமையில் திருவாளர். தி. அ. சண்முக முதலியார் அவர்கள் 'அருணகிரிநாதர்' எனும் பொருள்பற்றிப் பேசுகையில் அருணகிரிநாதர் செங்குந்த குலத்தில் மூதண்ட முதலியாருக்கு முத்தம்மையார் பால் உதித்தவர் என்றும், கந்தன் அருளால் சந்தத் திருப்புகழ் பாடத்தக்க பேறு வாய்க்கப் பெற்றவரென்றும், வில்லிபுத்தூரரோடு வாதம் புரிந்ததாகச் சொல்லப்படுவதற்குத் தகுந்த ஆதாரம் இல்லை என்றும், கிளியுருவம் எடுக்கவில்லை என்றும் இன்னோரன்ன பிறவும் தக்க சான்றுகளுடன் நீண்ட நேரம் வலியுறுத்தி நிலைநாட்டிய பின் மறைமலை யடிகளின் புதல்வர் திருவாளர் வித்[illegible] திருநாவுக்கரசு அவர்கள் 'சைவ [illegible] பற்றி பண்டைய சங்க நூல் [illegible] பிரமாண[illegible] கொண்டு வெகு அழகாக [illegible]ற்பெருக்காற்றின[illegible].

## கோவை ஜில்லா

### சன்மார்க்க செங்குந்த வாலிபர் சங்கம் பள்ளிபாளையம் ஈரோடு

இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் 6-2-33 அன்று செங்குந்த பவனத்தில் ஸ்ரீலஸ்ரீ இம்முடி பரஞ்சோதி குமாரதுங்க சுவாமிகள் தலைமையில் கூடிற்று. தலைவர் தமிழர் வரலாறு என்னும் விஷயமாக நீண்ட நேரம் தகுந்த உதாரணங்களுடன் சொற்பொழிவாற்றிய பின்னர் தாம்பூலம் வழங்கலுடன் கூட்டம் 10 மணிக்கு இனிது கலைந்தது.

## ராமநாதபுரம் ஜில்லா

### மண்டலமாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

26-3-33-இல் அம்பலம் வீ. சி. வீரபத்திர முதலியார் தலைமையிற் கூடிய 13-வது கூட்டத்தில், "இந்தியா" "சுதேச மித்தின்" பத்திரிகைகளை வாங்குதல் பற்றியும், உத்தியோகஸ்தர் தேர்தல் பற்றியும், சங்க சம்பந்தமான வேறு சில சில்லரை விஷயங்கள்பற்றியும் தீர்மானங்கள் நிறைவேறின.

### தலைச்சங்கப் பிரசாரம்

பிரசாரகர் திரு. ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் 29-4-33 அன்று புறப்பட்டுச் சூரப்பட்டு, திருவாமாத்தூர், திட்டைக்குடி, பெண்ணாடம் முதலிய ஊர்களிலும், திருச்சி ஜில்லாவில் குவாகம், அகரம், ஆண்டிமடம், கல்லாத்தூர், செயங்கொண்டம், சோழபுரம், செங்குந்தபுரம், வாரியங்காவல், மருதூர், பொன்பரப்பி, கொடுக்கூர், நல்லாம் பாளையம், மண்ணச்ச நல்லூர், துறையூர், மேட்டுப்பாளையம், ஆங்கியம், தாத்தய்யங்கார் பேட்டை, மோகனூர், உன்னியூர், கட்டிப்பாளையம், பொன்மலை, திருச்சினாப்பள்ளி, ஸ்ரீரங்கம், அரியலூர், லால்பேட்டை, புதூர் முதலிய ஊர்களிலும் பிரசாரம் செய்து 9-6-33-ல் தமதூருக்குத் திரும்பினார். ஆங்காங்கே அவருக்கு அளிக்கப்பட்ட உபசாரமும், நடந்த கூட்டங்களும் ஆராயப்பட்ட அரிய விஷயங்களும் நமது குலாபிமானிகளது ஆர்வத்தையும், அன்னாரிடையுள்ள கிளர்ச்சியையுமே காட்டுகின்றன. பிரசாரகருக்குப் பல துறைகளில் உதவிபுரிந்த குலச்சிலர்களுக்குத் தலைச்சங்கத்தின் நன்றி உரித்தாகுக.

---

15891

## நன்கொடை

[illegible]வரியங்காவல் ந. [illegible]சாமி முதலியார் செங்குந்தர் கல்விநிதிக்கு மனமுவந்து அளித்த நன்கொடை 0—4—0

வாரியங்காவல் சித்திவிநாயகர் கோயில் வீதி திரு. கு. [illegible] முதலியார் சங்கப் பிரசாரகர் நன்கொடையாக மனமுவந்தளித்த ரூ. 0—8—0

17-5-33 எலையூர், அ. பா. செல்லப்பர் முதலியார் தாலுக்கா போர்டு அங்கத்தினர் அவர்கள் நமது சங்கப் பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக மனமுவந்தளித்த ரூ. 0—4—0

வாரியங்காவல் இரட்டை விநாயகர் கோவில் வீதி, ஆண்டியப்ப ப. முருகேச முதலியார் அவர்கள் அளித்த வரவேற்பு நன்கொடை ரூ. 0—4—0

18-5-33 வாரியங்காவல் இரட்டை விநாயகர் கோவில் வீதி அ. ச. நாராயணசாமி முதலியார் உதவிய வரவேற்பு நன்கொடை ரூ. 0—[illegible]—0

## நன்கொடை

### மணவை ச. நா. குமரகுரு முதலியார் மூலம்

திருச்சி ஜில்லா ஸ்ரீரங்கம் கனம் ப. பெரியண்ண முதலியார் குமாரன் திருவளர் செல்வன் பழனியப்பனுக்கும், மார்க்கம்பட்டி சு. மு. பழனியப்ப முதலியார் குமாரத்தி திருவளர் நாச்சாயி அம்மைக்கும் 2-6-33-ல் நடந்தேறிய திருமண முகூர்த்தத்தில் நமது செங்குந்த 'மகாத்மா' அவர்கள் ஏற்படுத்திய புதிய வழக்கத்தைப் பின்பற்று முறையில் நமது தலைச் சங்கத்திற்கு மனமுவந்தளித்த நன்கொடை ரூ. 0—8—0

புள்ளம்பாடி தாலுகா புதூர் ஆ. பிச்சைக்கார முதலியார் அவர்கள் நமது சங்கப் பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக மனமுவந்தளித்தது ரூ 0—4—0

குவாகம், வா. மு. மாணிக்க முதலியார் நமது சங்கப் பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக அளித்த ரூ. 0—4—0

10-5-33 ஆண்டிமடம் விளந்தை, மளிகை, ஆ வே. நடராஜ முதலியார் செங்குந்தர் கல்வி நிதிக்கு அளித்த நன்கொடை ரூ. 0—4—0

11-5-33 எலையூர், கனம். கா. ச. துரைசாமி முதலியார் சங்கப் பிரசாரகர் வரவேற்பு நன்கொடையாக மனமுவந்து அளித்த ரூ. 0—4—0

### மணவை முத்துமாரியம்மன் விழா வைபவம்

ஸ்ரீமுகஸு வைகாசிமீ 31உ மங்களவாரம் விழுப்புரந் தாலுகா, மணவை கலியாணம்பூண்டி, கிராம முன்னேற்றங் கருதி, காலை 9 மணிக்கு "ஸ்ரீ முத்துமாரியம்மன்" சூலப் பிடாரி, ஐயனார் முதலிய தேவதைகளுக்கு அபிஷேகமும், 12 மணிக்கு தீபாராதனையும் இரவு 8 மணிக்கு சதுர்ப்பத விமானம் அரியூர்தி முதலிய வாகனாதிகளில் ஷை தேவதை யமர்த்தி ஊர்வலஞ் செய்வித்து 9 மணிக்கு 'வீரநாராயணர் விஜயம்'' என்னும் 'வல்லான் காவியம்'' சாராம்சம் எல்லாரு மகிழ, நாடகமாக நடிகர்களால் நடிப்பித்துக்காட்டி நம்மவர் வீரபராக்கிரமங்களை அனைவருங் கண்டு மகிழுமாறு நடத்திய திருவிழாவில் கிராமவாசிகள் நமது தலைச்சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை ரூ. 0—4—0

விழுப்புரந் தாலுகா, கலியாணம்பூண்டி சிறந்த குலாபிமானியும் சீர்செல்வச் சீமானுமாகிய "செந்தமிழ்ச் சரபம்" பொன். மு. வெ. முனிசாமி முதலியார் அவர்கள் ஸ்ரீமுகஸு ஆனிமீ 4உ சண்முகப் பெருமான் திருவடி நிழலை யடைந்ததை முன்னிட்டு 29-6-33 நடந்த "மோக்ஷ தீபாராதனை'ப் புண்ணிய காலத்தில் நமது தலைச்சங்கத்திற்கு வந்தன பூர்வத்துடன் வழங்கிய நன்கொடை ரூ. 0—8—0

---

ஆவரணி புதுச்சேரி திரு. சி. த. க. கோவிந்தசாமி முதலியார் அவர்கள் தமது புத்திரன் திருமணத்தின் போது கல்விநிதிக்கு அளித்த நன்கொடை ரூ. 1—0—0

---

### புதூர் திரு. கோவிந்தசாமி முதலியார் மூலம்

புதூர் கனக ஆறுமுக முதலியார் குமாரன் நமச்சிவாய முதலிக்கும் ஷையூர் நக. அண்ணாமலை முதலியார் குமாரத்தி சொர்ன காந்தி அம்மாளுக்கும் வைகாசிமீ 27உ நடந்த விவாக சுப முகூர்த்தத்தில் நமது மித்திரனுக்கு நன்கொடை அளித்த ரூ. 1—0—0

ஷை முகூர்த்தத்தில் கனக கயிலாச முதலியார் குமாரன் கோவிந்தசாமி முதலிக்கும் அம்மையப்பட்டு பாசாத்த முதலி குமாரத்தி அலமேலு அம்மாளுக்கும் நடந்த விவாகத்தில் நன்கொடை வசூல் ரூ. 0—12—0

---

ஆங்கீரஸஸு வைகாசிமீ 22உ சென்னை திருவல்லிக்கேணி மல்லன் பொன்னப்ப முதலி தெரு 36 நெ. இல்லத்தில் திரு துரைசாமி முதலியாருக்கு நடந்த திருமணத்தில் நமது தலைச்சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை ரூ. 0—8—0

ஆங்கீரஸஸு வைகாசிமீ 25உ வடஆற்காடு ஜில்லா திமிரி கிராமத்தில் தாலுக்போர்டு மெம்பர் திரு. சூரா. பொன்னுசாமி முதலியார் அவர்கள் புதிய இல்லமாகிய ஸ்ரீ ஷண்முகாநந்த விலாசத்தில் குடிபுகுந்ததை முன்னிட்டு நமது தலைச்சங்கத்திற்கு மனமுவந்து கொடுத்த நன்கொடை ரூ. 2—0—0

மதுரை சி. ந. பொன்னம்பல முதலியாருக்கும் திரு. சி. பெ. பொன்னுசாமி முதலியார் குமாரத்தி, சௌ. அமிர்தம என்கிற முத்திருளாழி அம்மைக்கும் ஆங்கீரசஸு பங்குனி மாதம் நடந்த திருமணத்தின் நன்கொடை ரூ. 1—8—0

தஞ்சை ஜில்லா ஆவரணி புதுச்சேரி S. T. U. கோவிந்தசாமி முதலியார் தமது மகன் கந்தசாமி முதலியார் திருமணத்தின் ஞாபகார்த்தமாக வழங்கிய நன்கொடை ரூ. 1—0—0

கோட்டார் ஐ. மாணிக்க முதலியார் அவர்கள் தமது குமாரன் திருமணத்தின்போது மித்திரனுக்கு வழங்கிய நன்கொடை ரூ 5—0—0

விக்கண்ணபுரம் ஆவரணி புதுச்சேரி சொக்கலிங்க முதலியார் அவர்களது குமாரன் திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 1—0—0

புதுவை முதலியால் பேட்டை சை. சுப்பிரமணிய முதலியார் அவர்களது குமாரன் V. S. இரத்தின முதலியார் திருமணத்தின்போது வழங்கிய நன்கொடை ரூ. 0—8—0

கிருதனம்பேட்டை சின்னப்ப முதலியார் குமாரர் ஆறுமுக முதலியார் திருமணத்திற்கு மணமகன் மணமகள் இருபாலாரும் திரு N. A. ஆதிமூலம் முதலியார் மூலம் வழங்கிய நன்கொடை ரூ. 1—8—0

12-5-33 எலையூர், கா. ச. து. முருகேச முதலியார் வீபூதி மான்மிய ஞாபகார்த்தமாக வழங்கிய நன்கொடை ரூ. 0—4—0

வாரியங்காவல் சித்திவிநாயகர் வீதி ந. ரா. மாணிக்க முதலியார் செங்குந்தர் கல்விநிதிக்கு

Registered No. M. 1514

# ஜாதக கணிதம்

என்னும்

## ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம்

(இரண்டாம் பதிப்பு)

இதில் தசவர்க்கம், கிரக சட்பலம், பாவச் சக்கிரம், துவாதச பாவ பலம், உச்ச பலம், திக்குப் பலம், பட்ச பலம், கிரக யுத்த பலம், ஹோரா பலம், அயன பலம், கிரக திருஷ்டி பலம், முதலிய 24 வித பலங்கள் ஆயுள் இவைகளை வெகு சுலபமாகக் கணிக்க அனேக வாக்கியங்களும் குளிகாதி ஐவர், தூமாதி ஐவர், ஸ்புடகணனமும், பிராண ஸ்புடம், தேகஸ்புடம். மிருத் உதாரணங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கிரகங்களின் வலிவை அனுசரித்து பல அறிவதற்கும், ஆயுள் கணிதத்தில் ஆராய்ச்சி செய்வதற்கும் பிருஹஜ் ஜாதகம், பல தீபிகை ஜாதக கர்ம பத்ததி இவைகளை நன்றாய் அறிவதற்கும், இப்புத்தகம் மிகவும் உபயோகப்படு கெவர்ன்மெண்ட் டெக்ஸ்ட் புக் கமிட்டியாரால் (Text Book Committee) லைப்ரரி ( உபயோகத்திற்காக அங்கீகாரஞ் செய்யப்பட்டது. இது தமிழில் வசன நடையில் C. G. B. A., அவர்களால் எழுதப்பட்டது. 818 பக்கம். விலை ரூ. 2—4—0. வி. பி. தபால் செ பிரத்தியேகம்.

## பிருஹத் ஜாதகம்

இது தமிழில் வசன நடையில் எழுதப்பட்டது. இதில் விசேஷமான வியாக்கியானங்களும் கஷ்டமான இடங்களில் உதாரணங்களும், வாக்கியங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆயு தாய அத்தியாயமாகிய 7-வது அத்தியாயம் மிகவும் தெளிவாக உதாரணங்களுடன் சொல்லப்பட்டிரு கிறது. இராஜயோகம், கிரகயோகம், நபசயோகம், சங்கியாயோகம் முதலிய யோக அத்திய கள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இது கெவர்ன்மெண்ட் டெக்ஸ்ட் புக் க யாரால் (Text Book Committee) லைப்ரரி (Library) உபயோகத்திற்காக அங்கீகாரஞ் செய்ய டது. இது C. G. ராஜன் B.A., அவர்களால் எழுதப்பட்டது 818 பக்கம். விலை ரூ. 2—0— வி. பி. தபால் செலவு பிரத்தியேகமானது.

## இராஜ ஜோதிட கணிதம்

என்னும்

## கிரக ஸ்புடம்

திருக்கணிதசாயன, நிரயன, சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இராகு, கேது ஸ்புடகணனம் கலியுகம் ஆரம்பத்திற்கு முந்தி சுமார் 100 வருஷம் முதல் கலியுக 6202-ம் ஆண்டு (3200 B. C. to 3100 A. D.) வரைக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதில் கொடுத் திருக்கும் வாக்கியங்களால் (Tables) 6300 வருஷங்களுக்கு அதிக சுலபமாகவும், அதற்குமேல் முந்தி பிந்தி எந்த வருஷத்திற்கும் இதில் கொடுத்திருக்கும் மூலத் துருவங்களைக் கொண்டு ஸ்புடஞ் செய்யலாம். இது ஜோதிடர்களுக்கும் பஞ்சாங்க கணிதர்களுக்கும், கால நிர்ணய பண்டி தர்களுக்கும் (chronologists) மிகவும் உபயோகமானது. இது இங்கிலீஷிலும் தமிழிலும் தனி தனியாகக் கிடைக்கும். இது C. G. ராஜன் B.A. அவர்களால் எழுதப்பட்டது. விலை தமிழில் ரூ. 5—0—0. இங்கிலீஷில் ரூ. 5—0—0. வி. பி. தபால் செலவு பிரத்தியேகமானது.

---

## நன்கொடை

மருதூர் நூல் வியாபாரம், கா. வை. குழந்தை வேல் முதலியார் அவர்கள் வரவேற்பு நன் கொடையாக மனமுவந்து வழங்கிய ரூ. 0—4—0

19-5-33 பொன்பரப்பி நூல் வியாபாரம், P. S. தங்கவேல் முதலியார் வரவேற்பு நன்கொடை யாக மனமுவந்து வழங்கிய ரூ. 0—8—0

21-5-33 பொன்பரப்பியில் மளிகை வியாபாரம் செ. அ. வே தே. பிச்சப் பிள்ளை முதலியார் வழங்கிய வரவேற்பு நன்கொடை ரூ. 0—4—0

24-5-33 முசிறி தாலுக்கா துறையூர், பெ. கி. வெ. கருப்பண்ண முதலியார் பிரசாரகர் விஜய ஞாபகார்த்தமாக நன்கொடை வழங்கிய ரூ. 0—8—0

26-5-33 துறையூர், க. க. அப்பாவு முதலியார் கடை, மு. கி. குழந்தைவேல் முதலியார் தமது செங்குந் தர் கல்விநிதிக்கு மனமுவந்து அளித்த நன் கொடை ரூ. 0—4—0

27-5-33 மேட்டுப் பாளையம், தே. வெ. ஆறு முதலியார் ஜவுளி வியாபாரம் அன்னவர், அவர் கள் செங்குந்தர் கல்விநிதிக்கு மனமகிழ்ந்து வழங் கிய நன்கொடை ரூ. 1—0—0

28-5-33 சேலம் ஜில்லா, நாமக்கல் தாலுகா மோகனூர் கூ. பெ. முருக முதலியார் தமது செங்குந்தர் கல்விநிதிக்கு மனமுவந்தளித்த நன் கொடை ரூ. 0—4—0

---

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Sengunthar Mahajana Sangam Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswami at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.

செங்குந்த மித்திரன் இம்மாத அநுபந்தம்.

அரிய சந்தர்ப்பம்! ஆச்சரியப்படத்தக்க விலை!!

# திருக்குறள்

## (மூலமும் உரையும்)

**20-8-33 உக்குள் பணம் அனுப்புவோருக்கு பிரதி 1-க்கு அணு 4.**
**அதற்குப் பின் அணு 8**

மக்கள் பலதிறப்பட்ட மனமுடையோர். உலகந் தோன்றிய நாள்முதல் அவரவர் மனப் போக்கின்படி அநேகர் ஆராய்ச்சி செய்துள்ளனர். இவர்களுள் பலரும் பொது நலத்தை மறந்து, தமது மனக்கொள்கை ஒன்றினையே வலியுறுத்தும் நோக்குடன் நூல்கள் யாத்தனராதலின் அந்நூல்கள் ஒரு சமயத்திற்கோ, ஒரு சமூகத்திற்கோ, ஒரு பகுதி மக்களுக்கோ துன்பம் விளைப்பனவாய், துவேஷ உணர்ச்சியைத் தட்டி எழுப்புவனவாய் உள்ளன. "நரசிங்கத்தின், குருதி குடித்திலராயின் ஈசன் குவலயமுண்டோ கேளீர்" என ஒரு சமயக் கடவுளை ஒருவர் தாழ்த்திக் கூறுகிறார்; "கல்மனப் பார்ப்பார் தங்களைப் படைத்தும் காகத்தை என்செயப் படைத்தாய்" என ஒரு சமூகத்தை ஒருவர் ஏசுகிறார்; "பேயினுங் கொடியரம்ம பெண்கள் என் பேசவல்லேன்" எனப் பெண்ணுலகை ஒருவர் பழிக்கிறார்.

இத்தகைய பாரபட்சமுள்ள நீதியைப் புகட்டாமல் எல்லா மக்களும் ஒன்றே எனுங் கொள்கையுடன் சமத்துவ நெறி, அன்பொழுக்கம், அறமார்க்கம், உயர்ந்த இலட்சியம் ஆகியவற்றை ஒருங்கே உணர்த்தவல்ல நூல் **திருக்குாள் ஒன்றேயாகும்.** இவ்வொப்புயர்வற்ற நூலில் சமயப் பழிப்பில்லை; சமூகக் கொடுமையில்லை; ஒருகுலத்துக் கொருநீதி யில்லை. எல்லா சமயக் கொள்கைகளும் அதில் செறிந்து கிடக்கின்றன. அன்பால் அது மக்களனைவரையும் ஒரே சமயத்தவராய்ப் பிணைக்கின்றது.

**திருக்குறளைப்** பன்முறை பன்னிப் பன்னிப் படிப்போனுக்கு வேறு ஆசிரியன் வேண்டியதில்லை; அன்பன் வேண்டியதில்லை. அதுவே ஆன்ற நுண்ணறிவுடைய ஆசிரியனைப் போன்று அறிவினைச் சின்னாட்களுக்குள் மூளையில் திணித்துத் திணித்துப் பெருக்கும்; ஆப்த நண்பனைப் போன்று அறவுரைகளை இடித்திடித்துப் புகட்டும்; தாய் தந்தையரைப் போன்று ஒழுக்க நெறியில் பிடர் பிடித்து உந்தும்.

**திருக்குறள்** அரசனுக்குவேண்டிய அரசியல் நெறி, ராஜதந்திரம், பொருளாதாரநிலை, போர்செய்யும் வகை முதலியவற்றை நுட்பமாய் எடுத்துக்காட்டும்; ஆண்டிக்குவேண்டிய பற்றிலாத் தன்மையினையும், துறவு மேம்பாட்டையும் தெளிய உரைக்கும்;

மந்திரிக்குவேண்டிய மதிநுட்பத்தை விளக்கும். தந்திரிகளின் மாயாஜாலத்தை தடுக்கும்; குடும்பஸ்தர்களின் நலத்திற்கு வேண்டியன கூறும். இன்னும், இரப்போர்க்கும், இணையற்ற செல்வத்தில் திளைப்போர்க்கும், மற்றைய இடைப்பட்ட மக்களுக்கும், தவத்தினர்க்கும், அவத்தினர்க்கும், ஞானிகட்கும் ஏனைய எல்லா மக்களுக்கும் வேண்டிய அறிவும் ஆலோசனையும் இந்நாலில் உண்டு.

திருக்குறளில் காதல் மணமும், கலப்பு மணமும் விவரிக்கப்படுகின்றன. காதலர்களின் உள்ளங்குளிர, இன்பப்பேற்றிற்குரிய மார்க்கங்கள் இந்நூல் காமத்துப்பாலில் விளக்கப்படுவதுபோன்று வேறெந்த மதன நூலிலும் விளக்கப்படுவதில்லை என்பது நிச்சயம்.

திருக்குறள் ஞானிகட்கு ஞானநூலாய், போகிகட்குப் போக நூலாய், அறநெறியாளர்க்குத் தருமநூலாய், பொருளாளர்க்குப் பொருள்நூலாய் விளங்குகின்றது.

திருக்குறளை ஆராயுந்தோறும் ஒவ்வொரு பாட்டும், ஒவ்வொரு அடியும், ஒவ்வொரு மொழியும் புதிய புதிய உரைகளைத் தோற்றுவிக்கும் ஓர் பழம்பெரும் பொக்கிஷமாய் அது திகழ்கின்றது.

திருக்குறள் உலகத்தில் வழங்கும் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு காலதேச வித்தியாசமின்றி, எல்லாக்காலத்திலும், எல்லாத்தேசத்தும் சிறந்து போற்றப்படுவதொன்றே. அதன் அருமை பெருமையினை விளக்குவதற்குப் போதிய சான்றாகும்.

இத்தகைய தேடாதுகிடைத்த தமிழரின் பழம் பொக்கிஷமாகிய திருக்குறளை சிறியோர்க்கும் சிறிது கல்வி பயின்றோர்க்கும் பயன்படும்படி மிகத் தெளிவான உரையுடன் நல்ல காகிதத்தில் சுத்தபதிப்பாக அச்சிட்டு எத்தகைய எளியோரும் வாங்கத்தக்கபடி மிகக்குறைந்த விலைக்குத் தரவேண்டுமென்னும் எனது இளமைப் பருவ விருப்பத்தின்படி இரண்டாண்டுகட்கு முன் அடக்கவிலையிலுங் குறைந்த விலையாக பிரதி ஒன்றுக்கு நான்கணா வீதம் முன்பணம் அனுப்பியவர்களுக்கெல்லாம் வழங்கினேன். அச்சமயம் 3000 பிரதிகட்கு முன்பணம் கிடைத்தது. பலர் உரையோடு கூடிய திருக்குறளை, நல்ல கிளேஸ் காகிதத்தில் 300 பக்கம் உள்ள புத்தகமாக அச்சிட்டு முன்பணம் அனுப்பினோர்க்குமட்டும் நான்கணாவிற்குத் தருவதென்றால் அது நம்பத்தக்கதல்லவென்றனர்.

ஆனால் முன்பணமனுப்பினோர்க்குப் புத்தகம் கிடைத்ததைப் பார்த்ததும் அவர்கள் ஆச்சர்யமடைந்து, தாங்கள் தப்பாக எண்ணியதற்கு வருந்தி கடிதம் எழுதியிருப்பதோடு எட்டணா கொடுத்து புத்தகமும் பெற்றனர். எட்டணாவும் அப்புத்தகத்திற்குக் குறைந்த விலையே எனப் பலர் கடிதம் எழுதியுள்ளனர்.

எமது முதற்பதிப்பை பல ஜில்லா தாலூக்கா போர்டுகளும், முனிசிபாலிடிகளும் வாங்கி தங்கள் கீழுள்ள பாடசாலைகளுக்கு வழங்கின. தமிழ்மொழிப் பற்றுடையார் பலர் நூற்றுக் கணக்காக வாங்கி பள்ளி மாணவர்கட்கும், நண்பர்கட்கும் வழங்கினர்.

முதற் பதிப்பு வெளியான சில தினங்களில் அச்சிடப்பட்ட 5000 பிரதிகளும் செலவழிந்து விட்ட படியால் அநேகருடைய பணம் திருப்பி அனுப்ப நேர்ந்தது. பணத்தைத் திருப்பிப்பெற்ற அன்பர்களும், மற்றையோரும் மறுமுறை திருக்குறளைப் பதிப்பிக்குமாறு வேண்டினர்; பல முறை கடிதமெழுதித் தூண்டி வந்தனர்.

நாலடியாரைப் பதிப்பித்த பின்பே திருக்குறளை இரண்டாமுறை அச்சிடவேண்டுமென்பது எமது விருப்பமாயினும் அன்பர்களின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமலும், நான்கணாவிற்கு விற்பதனாலுண்டாகும் நஷ்டத்தைத் தாம் தாங்கிக் கொள்வதாக ஓர் நண்பர் கூறியுள்ள உறுதி மொழியினாலும் திருக்குறளின் இரண்டாம் பதிப்பை முன்னதாக அச்சிட ஆரம்பித்துள்ளோம். இப்பதிப்பு முதற் பதிப்பைக் காட்டிலும் சிறந்த முறையில் தடித்த கடிதத்தில், பிழையின்றி அச்சிடப் படுகின்றது. அச்சுவேலை முடிந்து பைண்டு செய்யப்பட்டு வருகிறது.

எமது முதற் பதிப்பைப் பற்றி பத்திரிகைகளின் அபிப்பிராயங்களில் சில கீழே தருகிறோம்.

**சுதேச மித்திரன்:**—எல்லோருக்கும் பயன்படும்படி இப்பொழிப்புரை எழுதப்பட்டிருக்கிறது. சிறு வயதினின்றே இப்படி திருக்குறளைப் பரவச் செய்ய உத்தேசம் கொண்ட இவரது நோக்கம் ஈடேறிற்று. அச்சு முதலியன வெகு நேர்த்தி. 25-9-26.

**தமிழ்நாடு:**—தமிழ்மக்கள் யாவரும் திருக்குறளைப் படித்துப் பயன் பெறுமாறு பதிப்பாளருடைய நன்னோக்கத்தால் குறைந்த விலையில் வெளியிட்டிருக்கின்றனர். 17-8-29.

**திராவிடன்:**—திருக்குறள் "ஒருகுலத்துக்கொருநீதி" போன்ற நீதிகளை உடையதன்று என்று தெளிவாக விளக்குகின்றது. இது ஒவ்வொரு தமிழ் மகனது கையிலும் அவசியம் எப்பொழுதும் இருக்க வேண்டியது என்று நாம் வற்புறுத்திக் கூறுகின்றோம். சுமார் இரண்டு ரூபாய் மதிப்புள்ள இத்துணைச்சிறந்த நல்லுரையை 8 அணா விற்கே உதவுவது பெரிதும் போற்றத்தக்கது. 11-10-29.

**நவசக்தி:**—இப்பதிப்பு சுத்தமாய், எளிய இனிய தமிழில் எழுதப்பட்ட பொழிப்புரையுடனும் கூடியிருக்கிறது. நன்றாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது இந்நூலின் பெருமையை இப்பொழுதே தமிழ் நாட்டார் உணர ஆரம்பித்திருக்கின்றனரென்பது தெரியக் கிடக்கின்றது. 5-6-29.

**குடிஅரசு:**—தமிழ் மக்கள் அனைவரும் இதனை வாங்கிப் படித்து உண்மையை அறியும்படி வேண்டுகின்றோம். ஏறக்குறைய 300 பக்கங்கள் கொண்ட இப்பெரிய நூலுக்கு, கழகத்தார் அமைத்துள்ள விலை அணா எட்டு என்பது மிகமிகச் சிறிய தொகை என்றே நாம் கருதுகின்றோம். இந்நூல் மிக அழகாக மிகமிகத் தெளிவாக அச்சிடப்பெற்று வலிமையாகக் கட்டவும் பெற்றுள்ளது. 29-9-29.

**செங்குந்தமித்திரன்:**—இப்பொழுதுள்ள உலகம் உண்மையை உணரவே உழைப்பதறிந்து, உரைக் குற்றங் களைந்து தமிழர் நாகரீகத்திற்கேற்ப, வள்ளுவனார், கருத்திற்கிசைய, ஆண், பெண், உயர்குலம், தாழ்குலமாகிய வித்தி

யாசங் கற்பிக்காது நியாயமும் உண்மையுமான உரையினை முதன்முதல் தைரியமாக வெளியிட்ட தனிப்பெருமை தமிழ்நூற்பதிப்புக் கழகத்தாருக்கே உரியதாகும். தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டுவது அவசியம். (இன்னும் பல.)

## விலை விபரம்.

1933ஞ ஆகஸ்டுமீ 20உக்குள் பிரதி 1-க்கு அணா 4-ம் தபால் சார்ஜ் அணா 2-ம் சேர்த்து அணா 6 வீதம் மணியார்டரில் பணத்தை அனுப்ப வேண்டும். மணியார்டரில் பணம் அனுப்புவோர் வேறு காகிதம் எழுத வேண்டியதில்லை. மணியார்டர் கூப்பனில் விலாசத்தைத் தெளிவாய் எழுதினால் போதும். சமாசாரமும் அதிலேயே எழுதலாம்.

எவ்வளவு பிரதிகள் வாங்கினாலும் யாருக்கும் கமிஷன் தள்ளிக் கொடுக்கப் படமாட்டாது. புத்தகங்கள் இனாமாகவோ, குறைந்த விலைக்கோ, தருமத்திற்கோ, மாதிரிக்கோ கண்டிப்பாய் அனுப்ப முடியாது. சென்ற வெளியீட்டில் குறித்த காலம்தவறி அநேக நண்பர்கள் பணம் அனுப்பினமையால் அவர்கள் எட்டணா கொடுத்து வாங்க வேண்டியதாயிற்று. இப்பதிப்பிலும் ஆகஸ்டுமாதம் 20-ம் தேதிக்குப் பிறகு வரும் மணியார்டர்கள் எட்டணா விலைக்கே ஒப்புக் கொள்ளப்படும். இல்லையேல் பணம் திருப்பி அனுப்பப்படும். குறித்தபடி ஆகஸ்டு 20-ந்தேதிக்குள் பணம் அனுப்பினவர்களுக்கெல்லாம் 30-ந்தேதி முதல் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும்.

**மானேஜர், தமிழ்நூற் பதிப்பகம்,**
**காஞ்சீபுரம்.**


# குமார விகடன்,

**சிரிப்பூட்டும் ஓர் மாதப் பத்திரிகை.**

**விநோதப் படங்களும், விசித்திரக் கட்டுரைகளும், விகடங்களும் நிறைந்தது.**

**80 பக்கம் கொண்டது.**

**தனிப் பிரதி அ. 2. வருட சந்தா ரூ. 1-4-0**

**வி. பி. கிடையாது. முன் பணமாகவே அனுப்பவேண்டும்.**

**மானேஜர், குமார விகடன், காஞ்சீபுரம்.**